
# மறுகா

புதிய தலைமுறைக்கான உடைப்பு



இதழ்-12

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரஞ்சீவி ஸ்ரோர்ஸ்

**கு.மனோராஜ்**

Dip.in.Agri

ஸ்ரீ கந்தசுவாமி, கண்ணகை, காளியம்மன் ஆலயத்தலைவர்

Agrochemical Distributor and Consultant

விவசாய இரசாயன பசளை, விதைகள்,
பசளைகள், மாட்டுத்தீவனம்,
மரக்கன்றுகள், தென்னங்கன்றுகள்
போன்றவற்றின் விநியோகஸ்தர்



பழைய கல்முனை வீதி, ஆரையம்பதி, மட்டக்களப்பு

077-7316761, 075-7737424, 065-2248225



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


என் கைக்குள் முகங்கள்
-சுகந்தி - 2

மூன்று வேறுவேறான மனிதர்கள்
-சித்தாந்தன் - 3

உதிர் இலை
-சித்தாந்தன் - 4

வெற்றுத்தளம்
-சித்தாந்தன் - 4


இரண்டு புதிர்கள் ஒரு விடை
-பாவண்ணன் - 5

A.G. செபால்ட்: நினைவிழப்பு-
நினைவழிப்பு - நினைவூட்டல்
-சா.தேவதாஸ் - 10

உதிர்கின்ற நாமம்
-மா.செ. - 15

தண்ணிப்பாம்புகள் தடவும் பொழுது
-தில்லை - 16

கடந்து செல்கின்ற கவிதை
-ராணி - 17





ஓட்டைக்குடம்
-ஓட்டமாவடி அறபாத் - 18

இஹாப் ஹாஸனும்
தமிழ்ப் பின்நவீனத்துவமும்
-ஜிஃப்ரி ஹாசன் - 20

மோப்பம்
-த.மலர்ச்செல்வன் - 24

மார்ட்டின் விக்கிரமசிங்க
இலங்கையின்
பின்காலனிய இலக்கியகுரல்
-ஜிஃப்ரி ஹாசன் - 33

வரம்பற்ற எல்லைகளின் உருவாக்கம்
-ஸர்மிளா ஸெய்யித் - 37

எழுதுவதை நிறுத்துகிறேன்
-வாசுதேவன் - 41

பூப்பெய்திய நிலம்
-சக்கரவர்த்தி - 42

மலர்ச்செல்வன் கவிதைகள் - 46

பாலை நிலவன் கவிதைகள் - 50

கொரோணாப் பெருந்தொற்றுக்
காலத்திற்குப் பின்னர் கூத்தரங்க
ஆற்றுகையின் மீளெழுச்சி
- சு.சந்திரகுமார் - 53




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓவியம்:
பிரபஞ்சன்

# என் கைக்குள் முகங்கள்

என்னுடைய நீட்சியின்
தவறுகள் இப்போது தான்
புரியத் தொடங்குகின்றன.
விலாங்கு மீனைப்போல்
வலையில் சிக்குண்டு
ஆழக்குழியில் தள்ளப்பட்டிருக்கும்
என் அந்தரத்தின் பொழுது
தெளிந்த தண்ணியில்
விரிந்திருக்கிறது.

செட்டையற்ற நான்
எப்படி
டிஸ்கோ வலைக்குள்
சிறையுண்டேன்?

நீரை எதிர்த்துப் போகும்
மீன்கூட்டம்
டிஸ்கோ வலை பற்றி
எந்த அச்சமும்கொள்ளாது
சல்லுகளை போர்வையாக்கிப்
பயணிக்கின்ற தந்திரங்களை
நான் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

வாழ்க்கை தந்திரங்களைக்
கொண்டதை
கொல்லன் பட்டறையில்
அடிபட்ட பின் நான் எழுந்திருக்கிறேன்.

வாழ்வின் சூட்சுமத்தை
யார்தான் கண்டறிவார்
மர்மத்தின் எல்லா வெளிகளும்
என் கால்கள் பதிக்கப் பயம் கொள்கின்றன.
தோல்களின் நிறங்கள்
நிமிடத்திற்கு நிமிடம்மாறும்
சுயநலத் தட்டில்
என் பாடல்கள் இனி ரீங்கார மிடாது.

அவிழ்க்க முடியாத முடிச்சை அவிழ்த்ததில்
சில தோல்கள் சிவந்தெழ
என் வாழ்வை மைபோட்டுப் பார்க்கின்றேன்
வெற்றிலையில் ஓடுகின்ற
முகங்களை இமைவெட்டாது
என் கண்களுக்கு தூதன்
கறுப்பு வெள்ளையாக
ரீல் சுத்துகிறான்.
இமைவெட்ட அறுந்துபோன முகங்களை
மூளையில் சூடி
கையில் பொத்திக்கொள்கிறேன்
கறுப்புவெள்ளை
இராட்சத அலையாக மடிகின்றன.

**- சுகந்தி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வேறுவேறான மனிதர்கள்

மூன்று வேறுவேறான மனிதர்கள்
மூன்று வேறு வேறான நாட்களில்
சந்தித்துக்கொண்டவர்கள்
வேறுவேறாகவே இருந்தார்கள்.
ஒருவன் நடந்துசெல்லும் நதி போலவும்
மற்றவன் ஊர்ந்து செல்லும் மலை போலவும்
இன்னொருவன் பறந்து செல்லும்
காடு போலவும் இருந்தான்.
மூன்று வேறுவேறான
நிலங்களிலிருந்து வந்தவர்கள் என
நான் நினைத்துக்கொண்டேன்.
ஒருவன் தன் தோளிலிருந்த
கிளியின் பசுமையைக் கிள்ளி
ஒரு காட்டை விரித்தான்.
மற்றவன்
தன் கால்களின் கீழ் தேங்கிய
நிழலை வானமாக்கி
காட்டின் மேல் போர்த்தினான்.
மூன்றாமவன்
காட்டுக்கு விலங்குகளையும்
வானத்துக்கு பறவைகளையும்
நிறைத்தான்.
இந்தக் காட்சிகளை
நான் பார்த்துக்கொண்டிருந்தபோது
என் இருதயத்திலிருந்து
இறங்கிச் சென்ற நான்காமவன்
ஒரு நீர்ச்சுனையாகிப் பெருகிக்கொண்டிருந்தான்.
காட்சிகள் முதிர்ந்து
கோடையின் பறவைகளாகி பறக்கத்தொடங்கிய பின்
எஞ்சியிருந்த மௌனத்தை
நான் பருகிக்கொண்டிருந்தேன்.
அவர்கள் மூன்று வேறுவேறான நாட்களில்
சந்தித்துக்கொண்டவர்கள் என்பதையும்
அதிலும்
அந்த நான்காமவன்
ஒருபோதும் அவர்களைச்
சந்தித்திருக்கவில்லை என்பதையும்
நீங்கள் கடைசிவரை நம்பமாட்டீர்கள்.



ஓவியம்:
றஷ்மி

## சித்தாந்தன் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர் இலை



காற்றில் அலையும் இலையை
மீண்டும் மரத்தில் பொருத்துவதென்பது
சாத்தியமில்லை
அது எந்த மரத்தின் இலை என்று
கண்டடைவதற்கிடையிலேயே
அது சருகாகிடக்கூடும்.
தவிரவும்
மரங்கள் உதிர்ந்த தங்கள் இலைகளை
மீள சேர்த்துக்கொள்வதுமில்லை.
இலைகளிடம் நிறைய கேள்விகள்
இருந்தாலும் அவை மரத்திடம்
ஒன்றையேனும் கேட்பதற்கிடையில்
காற்று அவற்றை
தொலைவுக்கு எத்திவிடுகிறது.
காற்றின் அசைவுக்கு அகப்படா
எந்தவொரு இலையையும்
மரம் தன்னோடிருக்க அனுமதிப்பதுமில்லை.
உண்மையில்
உதிர்ந்த இலையென்பது
காற்றின் சிறகுகளா
மரங்களின் சிறகுகளா
பல தடவையும் அவையே குழம்பியவாறுதான்
அலைந்துகொண்டிருக்கின்றன.
உதிர்ந்த இலை
மரத்தின் ஆயுளில்
ஒரு நாளை குறைக்கிறது என்று
யாரேனும் மரத்திடம் சொல்லிப் பாருங்கள்.

ஒரு இரகசியமான பெண்ணின் குரல்
என்னைத் தொடர்வதாக
புலம்பியவாறு தூக்கத்திலிருந்து விழிக்கும் நீ
என் தூக்கத்தை தூக்கிலிடுகின்றாய்.
வண்ண இழைகளை பிரித்தெடுத்த பின்
வெறும் கண்ணாடியாகத் தொங்கும்
திரைச்சீலை என்னுடையது.
வசவுக்கும் பரிவுக்கும் இடையில்
ஊர்ந்து திரியும் ஒரு புழுவின் அளவான
இரண்டொரு வார்த்தைகளால் எழுதமுடியாத
ஒவ்வொரு நாழிகையும் விடமூறிக் கழிகின்றன.
என் துக்கமும் தூக்கமும் ஒன்றுதான்
எப்போதும் விழித்தே கிடக்கின்றன.
ஒரு வெற்றுத் தருணமாக்கிட விழைகின்றேன்
ஏகும் கணங்களை.
முடியவில்லை
ஒரு இரகசியமான பெண்ணின் குரலில்
நீ என்னை சபித்தபடியே இருக்கின்றாய்.




ஓவியம்:
ரஷ்மி

# வெற்றுத் தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**- பாவண்ணன்**

# இரண்டு புதிர்கள், ஒரு விடை

**த**ன் வாழ்வில் என்னென்னவெல்லாம் நடக்கவேண்டும் என்பதை ஒரு பெரிய பட்டியலாக முன்வைத்திருக்கும் பாரதியார் பாடலை விரும்பாதவர்களே இருக்கமுடியாது. மனதில் உறுதி வேண்டும் என்று தொடங்கும் அப்பாடலை பாரதியாரின் கவிதைத் தொகுதியைப் பிரிக்கும்போதெல்லாம் ஒருமுறை படித்துவிடுவேன். எனக்கு எப்போதும் அது ஓர் உற்சாகமான மனநிலையைக் கொடுக்கும். தமக்கு வேண்டும் வேண்டும் என்று பாரதியார் சொல்பவை அனைத்தும் எனக்கும் வேண்டியவையாக இருக்கின்றன என்பதும் ஒரு காரணம். அந்தப் பட்டியலிலிருந்து ஒன்றைக்கூட விலக்கிவிட முடியாது. நம் தேவைகளை நூறு ஆண்டுகளுக்கு முன்பேயே இவரால் எப்படி பட்டியலிட முடிந்தது என்றுகூட சிற்சில சமயங்களில் தோன்றுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் வழக்கம்போல அந்தப் பாட்டில் லயித்தி ருக்கும்போது, கனவு மெய்ப்படவேண்டும் என்னும் வரியைத் தொடர்ந்து என்னால் அடுத்த வரியைப் படிக்க முடியவில்லை. அந்த வரியிலேயே மனம் உறைந்துவிட்டது. அப்போதுதான் முதன்முறையாக அந்த வரியைப் படிப்பதுபோல வியப்போடு பார்த்தேன். அந்த வரியில் என்ன கனவு என்று அவர் வெளிப்படை யாகச் சொல்லவில்லை. ஆனால் அது மெய்ப்பட வேண்டும் என்று மட்டும் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார்.

மனதிலே உறுதியும் வாக்கினிலே இனிமையும் நல்ல நினைவும் விரும்பிய பொருளை அடையும் ஆற்றலும் செல்வமும் இன்பமும் மண்ணில் பெருமை யும் கனவுகள் அல்லவா? அவை ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு அவை மெய்ப்படவேண்டும் என அடுக்கிச் சொல்லிவிட்ட பிறகு, தனியாக எதற்கு 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்று சொன்னார் என்னும் கேள்வி மனத்தைக் குடைந்தது. பட்டியலில் இல்லாத ஒரு கனவு அது. அது என்ன கனவு என்பது முற்றிலும் புதிராக இருந்தது. அதை அறிந்துகொள்வதற்காக மனம் கிளர்ச்சியுற்றாலும், அப்பாடலிலிருந்து உடனடி யாக எவ்விதமான விடையையும் என்னால் கண்டறிய முடியவில்லை.

நாள்முழுதும் வெவ்வேறு வேலைகளில் மாறி மாறி ஈடுபட்டிருந்தாலும் ஆழ்மனத்தில் அந்தக் கேள்வி மட்டும் குடைந்துகொண்டே இருந்தது. ஏதாவது ஒரு விடை திடீரென தென்பட்டுவிடாதா என புதுப்புது கோணங்களில் தொடர்ச்சியாக யோசனை களிலேயே மூழ்கியிருந்தேன். ஒன்றும் பயனில்லை.

பாரதியார் தன் கனவைப் பற்றிய விவரத்தை இந்தப் பாட்டில் கொடுக்காமல் ஒருவேளை வேறு ஏதேனும் ஒரு பாட்டில் இணைத்திருக்கலாமோ என்றொரு எண்ணம் தற்செயலாக எழுந்தது. அப்போதே மனம் பரபரப்புற்று என் தேடலைத் தொடங்கிவிட்டேன். அன்று இரவில் வெகுநேரம் கண்விழித்து பாரதியார் பாடல் தொகுதியை எடுத்து சிற்சில பக்கங்களைப் படிப்பதில் செலவழித்தேன்.

முதல்நாள் அவருடைய 'விடுதலை' பாடலில் அவருடைய கனவின் சிறுசாயல் தென்படுவதாகத் தோன்றியது. சமூகத்தில் மேல்தட்டு அடித்தட்டு வேறுபாடுகளையெல்லாம் கடந்து அனைவருக்கும் விடுதலை கிடைத்துவிடும் என்றும் மக்கள் அனைவரும் கல்வியிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கி புகழ்வாய்ந்த வாழ்க்கையை வாழத் தொடங்கி விடுவார்கள் என்ற கனவுக்குறிப்போடுதான் பாரதியார் அந்தப் பாட்டைத் தொடங்குகிறார். அடுத்தடுத்த பகுதிகளில் ஏழையென்றும் செல்வந்தனென்றும்



பாகுபாடு அறவே அழிந்துபோகுமென்றும் ஆட்சி செய்பவனென்றும் அடிமையென்றும் வேறுபாடுகள் இல்லாமல் போகுமென்றும் மானுடர் அனைவரும் சமமென்ற சூழல் நிலவி வாழ்வே பொன்மயமாக மாறிவிடும் என்றும் சொல்கிறார். பெண்களை இழிவுசெய்யும் பேச்சுகே இடமில்லாமல் போகு மென்றும் சொல்வதுகூட அந்தக் கனவுக்குறிப்பின் தொடர்ச்சியே. ஆனால் மெய்ப்படவேண்டிய பட்டிய லில் இடம்பெறும் கனவையும் இந்தக் கனவையும் ஒன்றாகக் கருதுவது எந்த அளவுக்கு சரியென்று சொல்லத் தெரியாமல் குழப்பத்திலேயே மூழ்கியி ருந்தேன். இந்தப் பட்டியலில் உள்ள வெளிப்படைத் தன்மை அந்த வரியில் இல்லை என்னும் காரணத் துக்காகவே, இரண்டுமே வேறுவேறு என்று நான் உறுதியாக நினைத்தேன். ஆனால் அந்தக் கனவு என்ன என்கிற கேள்விக்குத்தான் என்னால் விடையைக் கண்டறிய முடியவில்லை.

மறுநாள் விநாயகர் நான்மணிமாலையில் 'ஆதிமூலமே, அனைத்தையும் காக்கும் தேவதேவா, சிவனே, கண்ணா, வேலா, சாத்தா, விநாயகா, மாடா, இருளா, சூரியா, இந்துவே, சக்தியே, வாணி, காளீ, மாமகளே, ஆணாய் பெண்ணாய் அலியாய் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலே, உள்ளது யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே' என்றெல்லாம் பலவாறாக தெய்வத்தை அழைக்கும் பாரதியார் இறுதியாக தன் வேண்டுகோளை முன்வைக்கிறார். 'நோவு வேண்டேன், நூறாண்டு வேண்டினேன், அச்சம் வேண்டேன், அமைதி வேண்டி னேன், உடைமை வேண்டினேன், உன்துணை வேண்டி னேன், வேண்டாதனைத்தையும் நீக்கி வேண்டியதனைத் தும் அருள்வதுன் கடனே' என்று சொல்லி முடிக்கிறார். இந்தப் பாடலிலும் வேண்டுவது என்ன, வேண்டாதவை என்ன என்னும் பட்டியலை தெளிவாகவே முன்வைக்கி றார் பாரதியார். கனவென எதுவும் தனியாக சொல்லப் படவில்லை.

இன்னொரு நாள் பேதை நெஞ்சே என்னும் கவிதையைப் படித்தேன். அந்தப் பாட்டிலும் தனக்கு வேண்டிய அம்சங்களைப் பற்றிய பட்டியலை பாரதியார் முன்வைத்திருக்கிறார். 'செல்வங்கள் கேட்டால் நீ கொடுக்கவேண்டும், சிறுமைகளென்னிட மிருந்தால் விடுவிக்கவேண்டும், கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும் கருணையினால் ஐயங்கள் கெடுக்கவேண்டும், தொல்லைதரும் அகப்பேயைத் தொலைக்கவேண்டும், துணையென்ற நின்னருளைத் தொடரச் செய்தே நல்லவழி சேர்ப்பித்துக் காக்க வேண்டும்' என்று நீண்டு சென்றது அந்தக் கவிதை. பட்டியல் தெளிவாகவே இருந்தது. ஆனால் இந்தப் பட்டியலுடன் அவர் குறிப்பிடும் கனவை எப்படி வகுத்துக்கொள்வது என்பதுதான் புரியவில்லை. தொடர்ந்து குழப்பத்திலேயே மூழ்கியிருந்தேன்.

இப்படியே ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு பாட்டில் சற்றே ஏற்புடையதுபோல தோற்றமளிக்கும் பாடலைக் கண்டதும் மகிழ்ச்சியில் திளைப்பதும் பிறகு பாட்டின் வரிகளிலிருந்து அது முன்வைத்திருக்கும் பட்டியலைப் பிரித்துப் புரிந்துகொண்ட பிறகு ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுவதும் வழக்கமாகிவிட்டது. எந்தப் பாட்டின் வரிகளும் எனக்கு அவருடைய ஆழ்மனத்தில் படிந்திருந்த கனவு என்ன என்பதைப் புரிந்துகொள்ள உதவவில்லை.

ஒருநாள் அவருடைய தொகுதியைப் பிரித்த போது, அழகுத்தெய்வம் என்றொரு கவிதை அச்சிடப் பட்டிருந்த பக்கம் தானாகப் பிரிந்துவந்தது. அக்கவிதை யில் தொடக்க வரியிலேயே ஒரு கனவைப் பற்றிய குறிப்பைப் பார்த்ததும் உற்சாகம் கொண்டு வேகவேக மாகப் படித்தேன். ஒருவருக்கு ஒரு கனவு வருகிறது. அக்கனவில் இளவயது மங்கையொருத்தி காட்சியளிக் கிறாள். உறங்குபவனை எழுப்பி தன்னை கண்திறந்து பார்க்கும்படி சொல்கிறாள். கண்திறந்து பார்த்தவன் தன் முன்னால் நின்றிருக்கும் உருவத்தைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைக்கிறான். அழகென்னும் தெய்வமே தன் முன் வந்து நின்றிருக்கிறது என நினைத்து அவன் மனம் பூரிக்கிறது. அந்தத் தெய்வத்தைப் பார்த்ததுமே அவன் மனத்தில் ஒரு நெருக்கத்தை உணர்கிறான்.


கண்முன்னே நிற்கும் அழகுத் தெய்வத்திடம் அந்தக் கனவு மனிதன் வழக்கம்போல வேண்டுவன, வேண்டாதன தொடர்பான பட்டியல் எதையும் முன்வைக்கவில்லை. மாறாக, அந்தத் தெய்வத்திடம் மகிழ்ச்சியோடு உரையாடத் தொடங்குகிறான். அந்த உரையாடல் வரிகள் அனைத்தும் அற்புதமானவை. எதுவும் மண்சார்ந்த வாழ்வு பற்றியதல்ல. எல்லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவம் சார்ந்த உரையாடல். எடுத்துக்காட்டாக, "யோகம் சிறந்ததா, தவம் சிறந்ததா?' என்பது ஒரு கேள்வி. 'யோகமே தவம், தவமே யோகம்' என்பது விடை. "பொருள் என்பது ஒன்றா, இரண்டா?" என்பது மற்றொரு கேள்வி. "பொருள் ஒன்றாகவும் இருக்கும், இரண்டாகவும் இருக்கும். சிற்சில சமயங்களில் ஒரே நேரத்தில் அனைத்துமாகவும் இருக்கும்" என்பது விடை.

தாகமறிந்து ஈயும் அருள் வான்மழைக்கு உண்டா? தாகத்தின் துயரத்தை மழையால் அறிந்து கொள்ள முடியுமா என்பது அடுத்து இடம்பெறும் கேள்வி. வேகமுடன் அன்பினையே வெளிப்படுத்தா மழைதான் விருப்புடனே பெய்குவது வேறாமோ என்பது அழகுத்தெய்வம் அளிக்கும் பதில். இப்படி தர்க்கங் களாகவே தொடர்ந்து செல்லும் உரையாடல் இறுதியாக ஒருவழியாக முடிவடைகிறது. தெய்வத்தை அவனும் அவனை தெய்வமும் புரிந்துகொள்கிறார்கள். 'முகத்தில் அருள் காட்டினாள் மோகமது தீர்ந்தேன்' என்று முடிவடைகிறது கவிதை. கிட்டத்தட்ட அது கனவு முடியும் கட்டம். அழகுத்தெய்வத்தின் அருளைப் பெற்று மோகம் தணியும் அக்காட்சியை ஒருகணம் நெஞ்சில் உறையவைத்து அசைபோட்டேன். அது எனக்கே ஆனந்தம் தரும் கணமாக இருக்கும்போது, அக்கனவைக் கண்டவருடைய ஆனந்தம் உண்மையாகவே பல மடங்கு அதிகமான தாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டேன். அந்த ஆனந்தத்தை அசை போட்டபடி இருந்த தருணத்தில்தான், அதுவரையில் மெய்ப்படவேண்டும் என பாரதியார் நினைத்த கனவு எது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டி ருந்த எனக்கு சட்டென ஒரு வெளிச்சம் புலப்பட்டுவிட்டது. அழகுத்தெய்வத்தின் அருளைப் பெற்று மோகம் தணியும் கனவு தான் அது. ஒரு புதிருக்கான விடையைக் கண்டறிந்த மகிழ்ச்சியில் மனம் ஆனந்தக் கூத்தாடியது.



அழகுத்தெய்வம் கவிதையை வரி வரியாகப் பிரித்து வாய்விட்டுப் படித்தேன். அந்த உரையாடலில் இருந்த நெருக்கமும் உரிமையும் கவர்ச்சியும் தெளிவும் உற்சாகமும் விசித்திரமாக இருந்தன. அந்தக் கவிதையே அழகான அச்சில் வார்க்கப்பட்ட நேர்த்தி யான பொம்மையைப் போல இருந்தது. ஒருகணம் அந்த அழகுத்தெய்வத்துடன் உரையாடுவது நானே என்னும் எண்ணம் எழுந்தது. பித்தனைப்போல அக்கவிதை யைப் பார்த்துப் புன்னகைத்தேன்.

அக்கணத்தில்தான் ஒரு கேள்வி மின்னலைப் போல நெஞ்சில் எழுந்தது. யார் அந்த அழகுத்தெய்வம்? அதுவும் பதினாறு வயது இளமங்கைபோல கனவில் மாயத்தோற்றமளிக்கும் தெய்வம்? ஒரு கேள்வியிலிருந்து விடுபட்ட நான் இத்தனை விரைவாக இன்னொரு கேள்வியில் சிக்கிக் கொள்வேன் என நானே எதிர்பார்க்கவில்லை. அக்கவிதையில் பாரதியார் அத்தெய்வத்தைப் பற்றி எந்தக் குறிப்பையும் கொடுக்கவில்லை. நிலவொளி போன்ற முகம், புன்னகை ததும்பும் தோற்றம், மின்னல் போன்ற வடிவம் என்பவற்றுக்கு அப்பால் வேறெந்த குறிப்பும் இல்லை. இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு அந்தத் தெய்வத்தை எப்படி அறிந்துகொள்வது என்பது குழப்பமாக இருந்தது.

ஒருபக்கம் குழப்பம் அரித்துக் கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் தன்னிச்சையாக அக் கவிதையை சொல் சொல்லாக உள்வாங்கி கடந்து சென்றுகொண்டே இருந்தது. அபோதுதான் தாகத்தின் துயர் என்னும் சொல்லின் இருப்பை முழுமையாக உணர்ந்தேன். மனிதனின் மாபெரும் துயரமே தாகம். அந்தத் தாகமே துயரில் மூழ்கியிருக்கிறது என்னும் குறிப்பு துவள வைத்தது. அழகுத்தெய்வம் யார் என்று கண்டறியும் வேலையுடன் இப்போது தாகம் ஏன் துயரில் தவிக்கிறது என்பதைக் கண்டறியும் வேலையும் சேர்ந்துகொண்டது.

மறுநாள் காலையில் இசை கேட்டுக்கொண்டிருந்தேன். இளையராஜாவின் குரலில் நின்னைச் சரணடைந்தேன் பாடல் ஒலித்தது. ஒரு முறையீடு போல பல்லவி தொடங்கியதுமே அக்குரலில் ஒரு நிம்மதியின் சாயல் படர்வதை நான் உணர்ந்தேன். அது கனவுபோல என்னை வந்து தீண்டியது. பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும் என்னை கவலைகள் தின்னத் தகாதென்று நின்னைச் சரணடைந்தேன் என்ற முதல் சரணம் முடிந்ததுமே மனத்தை உலுக்கிவிட்டது. மிடிமையும் அச்சமும் மேவியென் நெஞ்சில் குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று நின்னைச் சரணடைந்தேன் என அடுத்த சரணத்தில் சிறிது வெளிச்சத்தைக் கண்டேன். துன்பமினியில்லை சோர்வில்லை தோற்பில்லை அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட நின்னைச் சரணடைந்தேன் என மற்றொரு சரணம் கடந்தபோது என்னை இரவெல்லாம் வாட்டிய கேள்விக்கு விடை கிடைத்ததுபோல இருந்தது. தாகத்தின் துயர் எது என்னும் புதிருக்கான விடை கிடைத்துவிட்டது. அழகுத்தெய்வம் யார் என்னும் புதிருக்கான விடையும் கிடைத்துவிட்டது. கண்ணம்மாதான் அந்த அழகுத் தெய்வம். அவளை அடைவதற்கான வேட்கைதான் தாகம். அந்த வேட்கையைத் தணித்துக்கொள்ளும் வழிமுறைகளை அறிந்துகொள்ள முடியாத இயலாமையே தாகத்தின் துயரம். எனக்கு அதில் சந்தேகமே எழவில்லை.

வேகமாக எழுந்து சென்று பாரதியாரின் கவிதைத் தொகுதியை எடுத்துப் புரட்டி கண்ணன் பாட்டைப் பிரித்தேன். பிரித்த பக்கத்தில் பாயுமொளி நீ எனக்கு என்று தொடங்கும் பாடல். ஒவ்வொரு வரியிலும் அந்த அழகுத்தெய்வத்தைப் பற்றிய வர்ணனை. 'வானமழை நீ எனக்கு, மேவும்விரல் நானுனக்கு, பூணும்வடம் நீ எனக்கு, புதுவயிரம் நான் உனக்கு, காணுமிடந்தோறும் நின்றன் கண்ணொளி வீசுதடி, மாணுடைய பேரரசே வாழ்வு நிலையே கண்ணம்மா' என ஒவ்வொரு வரியிலும் வர்ணனையின் அடுக்குகள். எல்லாமே அழகுத் தெய்வத்தைப்பற்றிய குறிப்புகள். இப்படி அல்லும்பகலும் எண்ணத்தில் நிறைந்திருக்கும் தெய்வமே கனவிலும் வந்து நின்றிருக்கும் என்பதில் எனக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

விடை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் மீண்டுமொரு பக்கத்தைப் புரட்டினேன். அதுவும் கண்ணம்மா பற்றிய பாடல். அழகுத்தெய்வம் பாட்டில் நிகழ்ந்த உரையாடலைப் போலவே இந்தப் பாட்டிலும் ஓர் உரையாடல் நிகழ்கிறது. கண்ணம்மாவுக்கும் கடற்கரையில் மாலைப்பொழுதில் வானையும் கடலையும் வேடிக்கை பார்த்தபடி கரைமணலில் உட்கார்ந்திருப்பவனுக்கும் இடையில் அந்த உரையாடல் நிகழ்கிறது. கடலின் அழகையும் வானத்தின் அழகையும் கொண்டு மயங்கிய அவன் பகற்கனவில் திளைத்திருக்கிறான். அப்போது பின்புறமாக வந்து நின்று கண்களை மறைக்கிறாள். அவளுடைய ஆடைகளின் மணத்தாலும் கைவிரல் தீண்டலாலும் வந்திருப்பவள் தன் கண்ணம்மாவே என உணர்ந்து அவளை இழுத்து முன்னால் நிறுத்தி என்ன செய்தி, சொல் என்று கேட்கிறான் அவன். கடலிலும் வானத்திலும் அலையிலும் அலைநுரையிலும் நீ என்ன கண்டாய் என்று கேட்கிறாள் அவள். அவன் புன்னகையுடன் பார்த்த ஒவ்வொரு இடத்திலும் அவளையே கண்டதாகச் சொல்லிவிட்டுப் புன்னகைக்கிறான்.

அந்தப் புன்னகை தன் கண்ணம்மாவைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் பிறக்கும் புன்னகை. தனக்கு அருகில் மிகநெருக்கமாக அவள் வந்து நிற்பதால் உருவான பித்தால் மலர்ந்த புன்னகை. தன் நெஞ்சுக்குகந்த தெய்வத்தின் அருளை அடைந்துவிட்ட ஆனந்தத்தால் எழுந்த புன்னகை.


அந்தப் பாட்டைப் படித்த பிறகு எனக்கு வேறெந்தச் சாட்சியும் தேவைப்படவில்லை. பாரதியார் தன் கனவில் கண்ட அழகுத்தெய்வம் கண்ணம்மாவேதான். அத்தெய்வம் என்றென்றும் தனக்கு அருகிலிருக்க வேண்டும் என்னும் விழைவே அவர் கனவு. அந்தக் கனவு மெய்ப்படவேண்டும் என அதே தெய்வத்திடம் சரணடைந்து முறையிடுகிறார் அவர். இரண்டுமே ஒரே உண்மையின் இரு பகுதிகள்.

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- சா. தேவதாஸ்**




ஓவியம்: ரஷ்மி

# W.G. செபால்ட்:

## நினைவிழப்பு – நினைவழிப்பு – நினைவூட்டல்

**உலகின் அனைத்துத் துயரங்களுக்கும்**
**நம்மைத் திறந்து வைத்திருப்பின், அது**
**வளர்வதையும் அணிலின் இருதயம்**
**துடிப்பதையும் கேட்பதாக இருக்கும்**
**நிசப்தத்தின் மறுபுறமுள்ள ஆர்ப்பரிப்பால்**
**நாம் மடிந்து விடுவோம்.**

*- ஜார்ஜ் எலியட்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் துயரங்களை இல்லாவிடினும் ஜெர்மனியின் குரூரங்களை கோர முகங்களை கேட்க முற்பட்ட, காண முற்பட்ட **W.G** செபால்ட் (1944-2001) தன் நாடு செய்த குற்றங்களுக்கு தன்நாடு வருந்தாத போது, அவர் குற்றவுணர்ச்சி கொண்டார் கழுவாய் தேட முற்பட்டார் தன்னை வதைத்துக் கொண்டர் மன நல சிகிச்சைக்கு உள்ளானார் நனவிலியை எழுத வைத்தார் கவிதைகளாக, நாவல்களாக அவர் ரத்தநாளமே வேதனையில் தவித்து துடித்து விரிய, இருதயம் அழுத்தத்திற்குள்ளாகி, படபடக்கையில் விபத்திற்குள்ளாகி மடிந்து போகிறார்.

நாஜிகளின் பேரினவாத அழிப்பில் லட்சக் கணக்கான யூதர்கள் சாம்பலான தன் துயரத்தை வேதனையை ஓலத்தை இன்றளவும் யூத எழுத்தாளர்கள் பதிவு செய்து வருகின்றனர், ஒலித்து வருகின்றனர்.

ஆனால் சாம்பலாக்கிய ஜெர்மனியர்களோ துளிகூட வருந்தவில்லை குற்றவுணர்வு கொள்ள வில்லை மாறாக அதனை மறக்கவும் மறைக்கவுமே முற்பட்டனர் நிசப்தத்தில் சதி செய்வதாக இருந்தது அது. இந்நிலையில் இந்நாசகார தாக்குதல்களுக்குப் பின் பிறந்த ஒரு ஜெர்மனியன், தன் 17வது வயதில் இந்த அரசியல் அக்கிரமங்களை இனவாத அழிப்பை கேள்விப்படும் மாத்திரத்தில், அதனை வெளிப்படுத்தத் துடிக்கிறான்.

போலந்து, பிரான்ஸ் மீதான நாஜிகளின் படை யெடுப்பில் ஒரு வீரனாகப் பங்கேற்றிருந்த தன் தந்தையே அது பற்றிப் பேச மறுத்து நிசப்தம் காட்டியதை வெறுத்தார் செபால்ட். தான் படித்து முடித்து வேலை பார்க்க வந்த நிலையில், சமரசம் செய்துகொண்டு, உணர்வுபாவமின்றி சில்லிட்டதாக கல்வி உலகம் இருந்ததும் அவருக்குப் பிடிக்கவில்லை. Winfried Georg Sebald என்று தனக்கிடப்பட்ட பெயர் பிடிக்க வில்லை என்பதால் 'மேக்ஸ்' என்றழைப்பதையே விரும்பிய செபால்ட், இங்கிலாந்து சென்று அங்குள்ள பல்கலைகழகத்தில் ஜெர்மானிய இலக்கியம் கற்பிக்கும் பேராசிரியராக வேலைபார்த்து, அங்கேயே குடியமர்ந்து விடுகிறார். ஆனால் எழுதுவது மட்டும் ஜெர்மானிய மொழியிலேயே.

"ஒவ்வொரு பெரிய எழுத்தாளரும் புதிதாக ஓர் இலக்கியவகைமையை உருவாக்குகிறார் அல்லது பழையதை இல்லாததாக்குகிறார்" என்பார் வால்டர் பெஞ்சமின். வால்டர் பெஞ்சமனின் சாயலிலிருந்த செபால்ட், புனைவு, வரலாறு, கட்டுக்கதை, புகைப் படம், கைவினைப்பொருள் ஆகியவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து ஓர் எடுத்துரைப்பு முறையை உருவாக்கிக் கொண்டார். கிடைத்தவற்றிலிருந்து கட்டமைத்துக் கொள்ளும் இதற்கு Bricolage என்று பெயர். உண்மை விபரத்திற்கும் புனைவுக்கும் இடையி லான எல்லைகளைத் தாண்டி எழுதினார். தனது எழுத்தை 'ஆவணப் புனைவு' என்றார். இணக்கம் காண முடியாதவற்றை ஒருங்கே கொண்டு வந்தார்.

அவர் புதுவகை நாவலாசிரியர் என்பதை விடவும் புதுவகை வரலாற்றாளர். மையக்கருத்து சார்ந்தும் பாணி சார்ந்தும் ஆவித்தன்மை உடையது அவரது எழுத்து. 19 ஆம் நூற்றாண்டிலிருந்து தோண்டி யெடுத்ததது போன்றது அவர் உரைநடை என்கிறார் மார்க் 'ஓ' கொன்னல். Austerlitz என்னும் தலைசிறந்த நாவலின் முதல் அத்தியாயம் ஒரு பத்தியே கொண்டது. ஆனால் ஆறு பக்கங்களாக விரிந்து செல்வது அப்பத்தி.

Austerlitz, Emigrants நாவல்களில், தலைப்புகளற்ற கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களை அங்கங்கே செபால்ட் பயன்படுத்துகிறார். புனைவில் ஆவணம் எதற்கு? ஜெர்மானியர் மௌனம் காத்து மறைக்க முற்படுவதை, செபால்ட் புகைப்படங்கள் வாயிலாக வெளிப்படுத்திவிட முற்படுகிறாரா? ஒரு வகையில் புகைப்படங்கள், நடந்தவற்றிற்கு சரியான சாட்சியங்கள் இன்னொருவகையில் இருண்மை மிக்கவை, மர்ம மானவை. நிசப்தம் காக்கவும் சாட்சியத்தை அழிக்கவும் முற்படும் ஜெர்மானியனின் ஆசை மட்டும் இங்கு முறியடிக்கப்படுகிறது. ஆதலின் புகைப்படங்கள் நமக்கு தெரிவிக்கவும் செய்கின்றன. புதிராயும் உள்ளன.


புத்தகங்கள் எரிக்கப்படுவதைக் காட்டும் ஒரு புகைப்படம். அக்காட்சி பொய்யானது என ஒரு பாத்திரம் அதனை நிராகரிக்கும். நிகழ்வின் போது எடுக்கமுடியாது போனதால் புத்தகங்களிலுள்ள எரிக்கும் காட்சியில் உள்ள புகை எழுவது, அப்புகைப் படத்தில் இணைக்கப்பட்டது என் ஒரு நேர்முகத்தில் செபால்ட் விளக்குகிறார். நிஜமான சாட்சியம் இல்லாத போது, புனையப்பட வேண்டியுள்ளது. அதையே செபால்ட் செய்கிறார். புனைவு, கதை, வரலாறு, செய்தி எனக் கட்டமைக்கிறார். கொடுமையை உணர்த்த, குரூரத்தை நினைவூட்ட, சதியை அம்பலப் படுத்த.

இத்தந்திரத்தை ஃபாஸிஸ செய்தித்தாள் ஒன்று செய்திருந்ததையும் எடுத்துக் காட்டுவார். இயல்பாகவே புகைப்படங்களைச் சேர்த்து வைப்பதில் ஆர்வம் கொண்டிருந்த அவருக்கு, பெரிய யூதக் குடும்பத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படம் ஒன்றில் அனைவரும் பவேரிய ஆடை அணிந்திருந்தது ஜெர்மானிய யூத அபிலாஷையின் வரலாறு குறித்து நிறையவே தெரிவிப்பதாக இருந்துள்ளது. பவேரியாவைச் சார்ந்த ஜெர்மானியர் செபால்ட் என்பதை இங்கு நினைவூட்டிக் கொள்வது, இதனைப் புரிந்து கொள்ள இன்னும் துணை நிற்கும்.



விட் ஜென்ஸ்டீனின் விழிகள், பெல்ஜியத்தின் ப்ரின்டோங்க் சிறையில் மீன் அமெரி என்னும் எதிர்பாளரை நாஜிகள் வதைப்பதை, கிண்டர் டிரான்ஸ் போர்ட்டின் சிறுவர்கள் முதலில் வந்திறங்கிய லிவர்பூல் தெரு நிலையம், மானுட எலும்புக் கூடுகள், பிராக் நகரில் போருக்கு முற்பட்ட கட்டிடத்தில் கிடக்கும் பழைய மாடிப்படிக்கட்டு, தெரெஸியன்ஸ்டாட் என்ற ஆளரவமற்ற நகரம், போர்ப் பரப்புரைத் திரைப் படத்தின் நிழற்படங்கள், ஊாக் ஆஸ்டர்லிட்ஸ் சிறுவனாக உள்ள நிழற்படம் என அவர் சேர்த்துள்ள புகைப்படம் ஊன்று பலகைகளாகும் (Spring Boards). இவையே என்னிடமிருந்து சிறப்பான வற்றைக் கொண்டுவந்தன, என்பார் செபால்ட்.

ஊாக் ஆஸ்டர்லிட்ஸே ஒரு புனைவுப் பாத்திரம். அப்படியிருக்க அதன் சிறுவயதுப்புகைப்படம் என்ன செய்திடும்?

இப்புகைப்படம் அவரை நிறையவே சலனப் படுத்தியுள்ளது, ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வாசகனிடமிருந்து நிறைய கோரும் தன்மை கொண்டது. எனவே அவரது புனைவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னொரு பின்புலமும் இதில் இருக்கிறது. செபால்ட் யூதரில்லை நேரப்பாதிப்புக்குள்ளானவரில்லை; நேரில் பார்த்தவரில்லை, யூதர்கள் மத்தியில் வாழ்ந்தவர் கூட இல்லை. யூதரை அழித்த பெரும்பான்மை ஜெர்மனியரைச் சேர்ந்த ஒருவர் எப்படி இதனை அம்பலப்படுத்த முடிகிறது? ஜெர்மனியரின் மனச் சாட்சிகளை சஞ்சலப்படுத்த முடிவது எப்படி? இதுதான் செபால்டுக்கு இருந்த சவால்.

II

2000 இல் எழுதிய கட்டுரையொன்றில், இலக்கியத்தில் மாட்சிமையை எட்டுவது இன்னும் சாத்தியமா? என்னும் கேள்வியை எழுப்பி, சாத்தியம் தான். அதற்கு எடுத்துக்காட்டு செபால்ட் என்றார் சூஸன் சோண்டக். சோண்டக் ஒரு யூதர். செபால்டால் இம்மாட்சிமையைத் தொடமுடிந்தது எப்படி? பட்டிழை தயாரிப்பு தொடர்பாக ஒரு நிகழ்வுப்போக்கை விவரித்து, அதிலிருந்து யூதப் பேரின் அழிப்புக்கு வாசகனை இட்டுச் செல்கிறார்.

பட்டிழை தயாரிப்புப் பணியாளர் ஒருவர், பட்டுப்பூச்சி முட்டைகளை தட்டுகளில் சேகரித்து பொரிக்க வைக்கிறார். வெளிவரும் பட்டுப்புழுக்கள் அகோரப்பசி கொண்டவை போல தின்று கொண்டே இருக்கின்றன. இவைகளை பட்டிழை தயாராகிறது. பட்டுக்கூடுகளை வெயிலில் போட்டோ கொதிகலனில் இருந்து வரும் நீராவியில் காட்டியோ பட்டுப் பூச்சிகள் மடிகின்றன. எழுந்து வரும் நீராவியில் 3 மணி நேரம் இருந்தால் போதும் ஒரு பட்டுக் கூடு மடிந்து விடும். ஒன்றென இல்லை. ஒட்டு மொத்தமாகவே.

அது போன்றதே ஆஸ்விட்ஸ் அழிப்பும். அக்கொடூரத்தின் பாரதூரமான தன்மை, நம்மைச் சிந்திக்க முடியாதபடி செயல்பட இயலாதபடி, அதிர வைத்துவிடுகிறது என்பது தான் இதிலுள்ள நுண்மையான அம்சம். அதை நோக்கி வாசகனை அழைத்துச் செல்வதுதான் செபால்டின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றினால் அடித்துச் செல்லப்பட்டு, அகரீதியில் துயரத்திற்குள்ளான நால்வரை தனது The Emigrcunts நாவலில் செபால்ட் முன்வைக்கிறார். நால்வரில் ஒருவரான டாக்டர் ஹென்றி செல்வின் இங்கிலாந்தின் நோர்விச்சில் அறிமுகமானவர். உயர் குடியினரைச் சார்ந்த துறவி போன்றவர். மாளிகைளை விட்டு, தோட்டத்திலுள்ள குகைபோன்ற குடியிருப்பில் வாழ்ந்து வருபவர். மானுடருடனான தொடர்புகளை விடவும் செடி கொடிகளுடனும் இதர உயிரிகளுடனும் நெருக்கமிக்கவர். லிதுவேனியாவிலிருந்து கிளம்பும் அக்குடும்பத்தைச் சேர்ந்த செல்வின் தன் பெயரை மாற்றி, கேம்ப்ரிட்ஜ் வந்து மருத்துவராகிறார். தன் கதையை செபால்ட்டிடம் சொல்லிவிட்டு, தன்னைச் சுட்டுக் கொண்டு மடிந்து போகிறார்.

அடுத்தவர் பால் பெரெய்ட்டர். குழந்தையாயிருந்த செபால்டுக்கு கற்பித்தவர். பின்னர் தண்டவாளத்தில் படுத்து தற்கொலை செய்துகொண்டதை செபால்ட் தெரிந்து கொள்கிறார். பெரெய்ட்டின் துயரத்திற்கான காரணிகளை செபால்ட் விசாரிக்கின்றார். கால்பகுதி யூதரான பெரெய்ட்டர், இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மானிய ராணுவத்தில் பணிபுரிந்தவர் பின்னர் ஆசிரியராக விளங்கியவர். உள்ளார்ந்து ஒரு நோய் வதைக்கிறது. கண்பார்வை போகிறது. தற்கொலை செய்து கொள்கிறார்.

மூன்றாவது நபர் செபால்டின் மாமா அம்ப்ரோஸ் அடெல்வார்த். 1920 களில் அமெரிக்கா வந்து ஒரு குடும்பத்தில் வேலை பார்த்தார். பின்னர் இதாகாவில் மன நோயாளியாக இருந்து இறந்து போனார்.

நான்காவது பாத்திரம் மேக்ஸ் ஃபெர்பெர் என்ற ஓவியர். மான்செஸ்டரில் செபால்ட் சந்தித்த நபர்.

இப்படியான நபர்களை வைத்து செபால்ட் விவரிக்கும் நாவல்தான் The Emigrants. இந்நாவல் பாரபட்சமற்ற ஒரு தார்மிக சாட்சியின் படைப்பு.


ஹோலொஹாஸ்டின் மறைமுக விளைவுகளைப் பற்றியது The Emigrants இன் மாபெரும் மையக்கருத்து உயிர்பிழைத்தோரின் திகில், குற்றவுணர்வு, நாஜிகளின் கடந்த காலத்துடனான ஜெர்மானியரின் போராட்டம் அல்லது நம்மீது திணிக்கப்பட்ட மானுட இயல்பு குறித்த புதிய அகப்பார்வைகள் மட்டுமில்லாது, அதன் பீதியூட்டும் விளைவுகள், மறந்து விடுமாறு நம்மை ஊக்குவிக்கும் இயல்புநிலையின் திரையும்தான். "ஜெர்மானியரை அடையாளப்படுத்திய மனவறுமையும் நினைவின்மையும் அனைத்தையும் துடைத்தழித்துவிட்ட அவர்களின் சாமர்த்தியமும் சேர்ந்து என் தலையையும் நரம்புகளையும் பாதிக்கத் தொடங்கின" என்கிறார் செபால்ட்.

பேரின ஒழிப்பு என்பது தற்செயலானதில்லை, அது ஜெர்மானியரின் குணவார்ப்புதான் என்று பகுத்தாராய்கின்றார். "ஹோலோகாஸ்ட் தனிச்சிறப்பாக ஜெர்மனிக்குரியது, வேறு வார்த்தைகளில்லாததால் அதனைக் கோழைத்தனம் என்கிறேன். தவிர்த்துவிடும் பழக்கமுடையவர்கள் ஜெர்மானியர்கள். அவர்கள் தெரிந்துகொள்வதை விரும்புவதில்லை. அது ஒரு போதும் நிகழ்ந்ததில்லை என்பது போல"

"ஞாபகம் என்பது குறித்த பிரச்சனையே இலக்கியத்தின் முதுகெலும்பு. ஞாபகம் இல்லாதிருப்போர் சந்தோஷமான வாழ்வைப் பெற்றிடும் வாய்ப்பை அதிகம் கொண்டிருப்பர். அழுத்தி வைத்தால் கூட, ஞாபகம் திரும்பிவந்து வாழ்வைக் கட்டமைக்கும். ஞாபகங்களின்றி எழுத்தில்லை" என்ற அடிப்படையிலிருந்து எழுகின்றது செபால்டின் எழுத்து.

ஒரு நாடு, ஓர் இனம் புரிந்துள்ள அக்கிரமங்களுக்கு அந்நாட்டின் அவ்வினத்தின் ஒரு நபர் பரிகாரம் தேட முடியுமா? பரிகாரம் தேட முடிகிறதோ இல்லையோ, தன் மனசாட்சியின் சஞ்சலத்தையாவது போக்க முடிந்துள்ளது செபால்டால். அது அவர் எழுத்தாளராக இருப்பதால், நினைவுகளின் அடுக்குகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதால் ஒட்டுமொத்தமாகப் படிந்த கறையிலிருந்து குற்றவுணர்விலிருந்து தன்பங்கினையேனும் அவரால் அகற்றிக் கொள்ள முடிந்திருக்கிறது. எழுத்து அதற்கு சாதனமாகியுள்ளது.

இந்நிகழ்வுப் போக்கிற்குள்ளாகியபோது அவர் தந்துள்ள விலை, தன் அரிய வாழ்க்கை. ஒரு புறம் வேடிக்கை விளையாட்டில் ஆர்வம், ஆங்கிலேயரின் நகைச்சுவையை ரசித்தல் என்னும் ஆளுமை மிகுந்திருந்த செபால்ட், இறுக்கமிக்க கல்வித்துறை வாழ்வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து விடுபட முடியாது அவதிப்பட்டிருக்கிறார். அதனால் இருமுறை மனநல சிகிச்சைக்குச் சென்றுள்ளார். இறுக்கமிக்க கல்விவளாகச் சூழல் எழுதவிடாமல் செய்திருக்க வேண்டும். எழுபதுகளில் எண்பதுகளில் கோடையில் வியன்னா அருகிலுள்ள மனநல இல்லத்தில் இருந்து சிகிச்சை பெற்றிருக்கிறார். மற்றவர்களின் பரிசோதனைக் குறிப்புகளை வாசித்ததுதான் தன் சிகிச்சையாயிருந்தது என்பார். அவ்வில்லத்தின் இயக்குனர் லியோ நவ்ராடில் தன் நோயாளிகளை வரையுமாறு எழுதுமாறு ஊக்குவிப்பவர் அப்படிச் செய்து கவிதைத் தொகுப்பொன்றை கொண்டுவந்துள்ளார். செபால்ட் மனநல இல்லத்தில் இருந்தபோது எடுத்திருந்த குறிப்புகளிலிருந்து உருவானதுதான் அவரது The Rings of Saturn நாவல்.

அச்சிகிச்சை படைப்பாற்றலின் அடிப்படை நிலைமைகள் சிலவற்றைப் புரிந்து கொள்ள உதவும் என்றும் செபால்ட் எண்ணியிருக்கிறார். தன்னைக் குறித்த சந்தேகத்தால் வதைக்கப்பட்டு, பைத்திய நிலையிலிருந்து விலகிட எழுதினார் என்கிறார் அவரது வாழ்க்கை வரலாற்றினை எழுதியுள்ள கரோல் ஆஞ்சியர்.

'சில விசித்திரமான தொடர்புகளை சாதாரண தர்க்கத்தால் விளக்க முடியாது என்பதை நமக்கு நினைவூட்டவும் நாம் புரிந்து கொள்ளவும் உதவுவது இலக்கியம்' என்பதால் செபால்ட் தன்னை அதனிடம் ஒப்புக் கொடுக்கத் தயங்கவில்லை. தன் ஆன்மிகப் பரிசோதனைகளுக்கு சாதனமாக விளங்கிய ஒன்றிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்வது நியாயமானதே.

III

இலக்கியத்தின் பால் இவ்வளவு அர்ப்பணிப்பு கொண்டிருந்தவரின் வாழ்க்கை வரலாற்றினை Speak Silence: In Search Of W.G Sebald என்னும் தலைப்பில் எழுதியுள்ள கரோல் ஆஞ்சியர், சில குற்றச்சாட்டுகளை, குறிப்பாக புகைப்படங்களைப் பயன்படுத்துவது குறித்து முன்வைக்கின்றார்.

'நண்பர்களின் அனுமதியின்றியே அவர்தம் வாழ்க்கை விபரங்களை தன் நாவல்களில் சேர்த்துள்ளார். ஆயர்பாக்கின் ஓவியம் ஒன்றினை அனுமதி பெறாமலேயே பயன்படுத்தியிருக்கிறார். சுஸி பெக்கோஃபெர் தனது அனுபவங்களை செபால்ட் பயன்படுத்திக் கொண்டமைக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளார். 'நேர்முகங்களில் தவறான கூற்றுகளை கூறியுள்ளார், பொய்யுரைத்துள்ளார், புகைப்படங்களை தலைப்புகளின்றியும் ஆதாரங்களின்றியும் தொடர்பின்றியம் பயன்படுத்தியுள்ளார்' என.

இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு வரவேண்டும் என்பது கரோல் ஆஞ்சியரின் அணுகுமுறை தர்க்க ரீதியிலானது மட்டுமே. புகைப்படங்கள் பயன்படுத்தியது தொடர்பாக செபால்டின் விளக்கத்தை அறிந்த பின், நமக்கு தெளிவாகிறது. பல அடுக்குகள் கொண்ட யதார்த்தத்தை வெளிப்படுத்திட, செபால்ட் மேற்கொள்ளும் தந்திரம் அது. நேரிடையான ஆதாரமோ சாட்சியமோ அது இல்லை. ஒரு விஷயத்தை பட்ட வர்த்தனமாகப் பேசிவிட இயலாதபோது எழுத்தாளன் மேற்கொள்ளும் கற்பிதங்களும் புனைவுகளும் தான் இவை. தீங்கற்ற இத்தந்திரங்களை செய்தியாளர்களும் பத்திரிகையாளர்களும் புரிந்து கொள்ள இயலாது. செபால்டின் வாழ்க்கை வரலாற்றை எழுதிட செபால்டின் மனைவி தேவையான ஆதாரங்களை அளித்து ஒத்துழைக்காது இருந்துள்ளார். இந்த வருத்தமும் ஆஞ்சியரின் குற்றச்சாட்டின் பின்புலத்தில் இருக்க வேண்டும்.

'வாழ்வில் பூர்ஷ்வா வாகவும் கலையில் பைத்தியக்காரனாகவும் ஒருவன் இருக்க வேண்டும்' என்னும் ஸ்டெந்தாலின் வாசகம் அவருக்குப் பிடித்தமானது, வாழ்வில் பூர்ஷ்வா வைப் போல் அனுபவித்திட வாய்ப்பில்லைத செபால்ட், எழுத்தில் பைத்தியக்காரனாய் இருந்தது நிஜம்.

அவர் இவ்வளவு விலை தந்திருக்க, அவரது எழுத்தை நெருங்கிட, வாசகன் சற்று சிரமப்படுவதில் தன்னைத் தயார்படுத்திக்கொள்வதில் இழப்பில்லை மாறாக, ஒரு தலைமுறையில் / இரு இனங்களது மோதல் முரண் சார்ந்த பதிவு ஓர் எழுத்தாளனது சுயசரிதத்துடன் கிட்டுகிறது.

**ஆதாரங்கள்:**


1. *Austerlitx/W.G.Sebald/Random House/Tr By Anthea Bell*
2. *The Emigrants/W.Gsebald/Tr.By Michael Hulse*
3. *W.G Sebald Humorist /James Wood/Newyorker.Com*
4. *Morning Sickness / Susan Sontag / TLS- FEB 25.2000*
5. *W.G.Sebald> Elegiac German Novelist> Is Dead At 57 / Mel Gusssow / The Newyork Times – Dec 15>2001*
6. *The Story Teller/Ben Lerner / The Newyork Review Of Books*
7. *W.G Sebald: A profile / James Atlas / The Parisrieview*
8. *An Interview With W.G Sebald – James Word / Brickmag.Com*
9. *W.G.Sebald's Borrowed Truths And Barefaced Lies / The Spectator – 21 August 2021*
10. *W.G Sebald Ransacked Jewish Lives For His Fictions / Judith Shulevitz / Theatlantic.Com*
11. *Why Should We Read W.G Sebald / Mark O'Conneld/ Newyorker. Com – 14 Dec.2011*
12. *Interview With W.G Sebald By Maya Jaggi / Theguardian.Com*


◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்கின்ற நாமம்



ஓவியம்:
பிரபஞ்சன்

என் ஒவ்வொரு பருவத்திலும்
கடவுளர்களை
உதிர்த்திக்கொண்டே வருகின்றேன்
ஒரு கால் என் தலையில் பிடித்த
பேன்களைப்போல்
கடவுளர்கள் என்னில்
பத்தினார்கள்.
நான் சொறிந்து சொறிந்தே
என் தலை காயப்பட்டது போல்
என் மனம் முழுதும்
சிரங்குகள் பூத்தன

கடவுளர்கள் பொய்யர்கள்
நாள்பட நாள்பட
என் மண்டையில் காலம் வரைந்தது.

ஒன்பது உலகங்களிலும்
சண்டையிடும் கடவுளர்களின்
புராணங்களை
தூக்கிவாசிக்கின்றேன்
பாலாறும் தேனாறுமென
பொய்களைக்கட்டி
மனிதனின் பேரன்பையல்லவா
கடவுளர்கள்
பேசுபொருளாக்கி மிதிக்கிறார்கள்.

இப்போ கட்டுக்கதையை
கையில் ஏந்தி நிற்கின்றேன்
வாழ்வின் சாபம் என்னைப்போர்க்கின்றது.
நிலவறையில் உறங்குகின்ற
மயில்ராவணன்
என் கையைக்கோர்த்து
பொய்யர்கள் முன் நானும் கடவுள்
என்றான்.

சண்டையிட ஒரு புதியவன்
தீக்குச்சோடு வந்திருப்பது
கடவுளர்கள் ஆமோதித்தனர்.
தனித்துவிடப்பட்ட நான்
கடவுளர்களின் நித்திய தூக்கத்தில்
பாலாறுகளையும்
தேனாறுகளையும் பருகுகின்றேன்
நெய்ல் ஹெய்மன்
புதிய
குடலொன்றைக்கொண்டுவருகிறானா?

மா.செ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணிப் பாம்புகள் தடவும் பொழுது

தில்லை



ஓவியம்:
கீரன்

இந்தப் பொழுது
பழைய பல்லவியை அவிழ்ப்பதில்
தறிகெட்டுப் போகிறது.
ஒரு முனையில் தோன்றி
மறுமுனையில் முடியும்
அந்தரித்த நினைவுகள்
'கண்ணாப்பத்தை'க்குள்
சிக்குப்பட்டு..சிக்குப்பட்டு
சீரழிகின்றன.

நான் யாரைப் பற்றியும்
சொல்லிக் கொண்டிருக்கவில்லை.
மயிலிறகை கொப்பிக்குள் மறைத்து
முளைத்தெடுக்க முடியா
முகங்களைத் தேடுகின்றேன்.

கழுத்துக்கு கீழ் பிசுபிசுக்கும்
தொம்பல் தண்ணி'யில்
என் முலையைத்தடவும்
'தண்ணி'ப்பாம்புகளை
நான் வெறுத்து ஓடவில்லை.

மூழ்கிய இதயத்தில் கிளரும்
பிலாலி வேர்கள் சுர் சுர்ரென
என் ஆதிவாயில்
குமிழிகள் எகிற
ஆற்றுப் படுக்கையில்
சுழல்கின்ற தோணி
அமிர்தத்தை வாஞ்சை கொள்ளும்
பொழுதுகளில் எல்லாம் தாழ்கிறது.

என் பருவக்காதலை
ருசிதட்டிப்போகும் கிண்ணம்பழம்
இன்னொரு பக்கம் பயமுறுத்தும்
தில்லம் பால்.
பாதங்களைப் பதம்பாக்கும்
கண்டல் சொட்டு
எல்லாமும் என்னுள் வளர்ந்து

நான்காம் பிறை போல்
பெரியகளத்தில்கொதிக்கும்
அனல் காற்று
இன்றும்
என்னுள் அடைகாக்கும்
முட்டைகளைப் பொரிக்கிறது.

இப்போ, இந்தப் பொழுது
பழைய பல்லவியை அவிழ்க்கும் கால்
என்னுடைய எல்லாம்
தண்ணிப்பாம்புக்கா? விலாங்கு மீனுக்கா?
எதற்கு....?

இரண்டும் என்னில் வழுக்கி..வழுக்கி
எகிறட்டும்.

தில்லை
26.12.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து செல்கின்ற கவிதை



ஓவியம்:
பிரபஞ்சன்

நினைவுகளின்துர்நாற்றம் இன்னும்
என்னில்
அப்பிக்கொண்டேயிருக்கின்றது.
தேவதைகள் என்னில் கொட்டிப்போன
வாடாமல்லிகையின் சுகந்தங்கள்
மணம்பரப்பி
என்னில் வாடை அகல..
நினைவுகள்
சீதையின் சூழ்மேகங்களாக
வளர்கின்றன.

இரவைப்பொத்தி வைக்கத்தெரிந்திருந்தும்
இன்னும் இன்னும்
வயல் வெட்டைகளின்
ஞாபகங்கள்
என்னைக் கொத்திக் கொத்தி
சாமங்களிலல்லவா பாடாய்ப்படுத்துகிறது.

இதோ! நான் காணத்துடித்த
நினைவுகளின் விரிகை
என் கண்முன்னே நிற்கிறது.

காலங்களைக் கடந்துவந்திருக்கின்ற
நினைவு
ஒரு போக்கற்றது.
நான் அதைச் சூடுவேனென நீங்கள்
நினைக்கிறீர்களா?

என் கவிதை கூட ரோசமானது
சிறுவயதில் நிராகரிக்கப்பட்ட
எந்தச் செந்தாமரையையும்
இதுநாள்வரை நான்சூடியதில்லை.
இந்த நினைவுகளை
எப்படிப் போர்ப்பேன்?

இப்போ என்னில்
எந்தச் சஞ்சலமுமில்லை
என் சொற்களை நானே சூடுகிறேன்.
நீயென்ன எனக்கு?
என் நினைவுகளைக் களைந்து
என் கவிதை கடந்து செல்கிறது

**- ராணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டைக்குடம்

**ஓட்டமாவடி அறபாத்**



**2018** இல் காலச்சுவடு பதிப்பகம் எனது நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல் பத்தி எழுத்துக்களின் தொகுப்பினை வெளியிட்டிருந்தது.

புத்தகம் வெளிவந்து ஓரிரு மாதங்களின் பின் ஊரில் நடைபெற்ற நிகழ்வுக்காக அதிதிகளில் ஒருவராக அழைக்கப்பட்டிருந்தேன். எனக்குப் பரிச்சயமற்ற ஒருவர் அருகே வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். வளர்ந்து வரும் முகநூல் கவிஞர் என்றார்.

குறும்பாக்கள், ஹைக்கூக்கள் எழுதுவதாக சொல்லிக்கொண்டார். மேலும் அவருடைய எழுத்துக்களை நான் படிக்கவில்லை போலும் என்று அவராகவே நொந்து கொண்டார். அத்துடன் அருகில் வந்து மெல்லக் காதுக்குள் உங்களுடைய 'நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்' கவிதை நல்லா இருந்திச்சு என்றார் எனக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது.

முகநூல் நுட்பங்களின் தொல்லைகளால் நல்ல கவிதைகளைப் படிப்பதிலும் நமக்கு அச்சம் வந்து கவ்வுகிறது. கவிதைகளால் மலிந்து முகநூல் பக்கங்கள் நச நசவென்று துர்நாற்றத்தால் நமநமத்ததுப் போகிறது. எங்கிருந்து இத்தனை கவிஞர்கள் இந்த உலகத்தின் தலைவிதியை புரட்டிப்போடப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

5 பேர் இணைந்து ஒரு குழுமம் அவர்களுக்குள் ஒரு சில பட்டங்கள் அமளி துமளியான விழாக்கள், "பென்ஷன்" வரவுகளைக் கவிதைக் குஞ்சுகளாக அடைகாத்து முக்கி முனகி பொரித்துப் பறக்கவிடும் கெட்டிக்காரத்தனம்.

பாரதி கூட இன்று இருந்திருந்தால் ஐயோ வெட்கம் என்று உயிர் நீத்திருப்பான். அதை விடக் கொடுமை இதுக்கெல்லாம் ஒன்றிணைந்து பிரமாண்டமான விழாக்களால் இந்தக் கவிதைப் பிரபஞ்சத்தை காதலால் நிரப்புவது.

கவிதையின் பால் போதை கொண்ட லையும் இந்த தவசிகளால் நவீன கவிதைகள் இறக்கை கட்டிப் பறக்கின்றன .

இந்த உலகத்தில் முகநூல் என்ற சொர்க்காபுரி இல்லையெனில் இந்தக் கவிதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசல்களின் பேரவலம் நரகத்தின் காதுகளையே உருக்கி உறையச் செய்திருக்கும்.

நல்ல காலம் ஓட்டைக் குடங்களில் தண்ணீர் இல்லாதது ஆசுவாசமாக இருக்கின்றது.

சென்ற வாரம் ஒரு கவிஞர் என் வீட்டுக்கு வந்திருந்தார். வந்தவர் என் வீட்டு வாசிகசாலையைப் பார்த்து விட்டு இப்படி ஒன்று நானும் அமைக்க வேண்டும் என்றார். மேசையில் சில புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. அவை அலுமாரியில் அடுக்கி வைக்கப்படாமல் ஒழுங்கின்றி கிடந்தன. அவரின் ஐயத்தைப் போக்கும் வகையில் இதுவெல்லாம் இன்னும் வாசிக்காத புத்தகங்கள் அக்கரைப்பற்று புத்தக சந்தையில் வாங்கி வந்தேன் என்று சொன்னேன். வாசித்த பின்தான் அலுமாரியுள் அடுக்கி வைப்பேன். அதுவரை என் மேசையில் தான் கிடக்கும். உடன் அடுக்கிவிட்டால் மீள எடுத்து வாசிப்பதற்கு அவகாசம் இருக்காது.

அவர் அதற்குச் சொன்ன பதில் 'நானெல்லாம் வாசிப்பதே இல்லை. வாசிக்கின்ற நேரத்துக்குள் எதையாவது எழுதலாம் தானே' என்றாரே என் மண்டைக்குள் குழவி தான் குடைந்தது.

அண்மையில் ஒரு கவிதைப் புத்தகம் வெளியிட்ட கவிதாயினியிடம் ஈழத்துக் கவிதைகளில் நல்ல கவிதைத் தொகுப்புகளையாவது வாசித்துப் பாருங்கள் என்றேன். அவர் தன்னைத் தவிர தரமான கவிதை எழுதுவது யார் என்ற தோரணையில்தான் கதையளந்தார். அதைத் தவிர மற்றுமொரு நூலுக்கும் முன்னீடு கேட்டு அந்தக் கடாட்சம் கிடைக்க வேண்டுமெனத் தொலைபேசிகளால் துளைத்துக் கொண்டே இருக்கிறார்.

நானும் கைகளில் அகப்படாத மணலாக நழுவிக் கொண்டே இருக்கிறேன். இப்படித்தான் வெலிகம கவிதாயினி ஒருவரின் குடைச்சல் தாங்க முடியாமல் ஒரு முன்னீட்டை வழங்கி இருந்தேன். கடைசிவரை அவர் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளவே இல்லை. துதிபாடல் மூலம் இவர்களின் குறைகள் மறைக்கப்பட்டு பாராட்டுக்கள் குவிய வேண்டும் என்பதே இவர்களின் கனவு.

இக்காலத்தில் எழுத்தில் விளையும் புதியவர்கள் தங்களை சீர்ப்படுத்தவும் செம்மைப் படுத்தவும் கரிசனை கொள்வதில்லை என்பதே இந்தப் பதிவின் நோக்கம். விதி விலக்காக சிலர் இருக்கலாம்.

முகநூலில் எழுதிவிட்டு ஆயிரம் லைக்கும் வாழ்த்துக்களும் கிடைக்கும் போது தங்களை மிகப்பெரும் கவிஞர்களாக நினைத்துக்கொள்கிறார்கள்.

கவிதை ரசனை இல்லாத முகநூல் ரசிகப் பெருமக்களின் லைக்குகளுக்கு அடிமையாகின்றனர். குழுமங்களை உருவாக்கி தங்களுக்குத் தாங்களே முதுகு சொறிந்து கரமைதுனம் செய்துகொண்டிருக்கின்றனர். தொடர் வாசிப்பும் எழுத்துப் பயிற்சியும் இல்லாத இவர்களால்தான் கவிதை செத்துக்கொண்டு போகிறது. முகநூலில் நல்ல கவிதைகள் எழுதி வருகின்ற தேர்ச்சி மிகு கவிஞர்களும்; எழுத்தாளர்களும் இருக்கவே இருக்கின்றார்கள். அவர்களும் சில நேரங்களில் இந்தப் பட்டம் என்ற சொறிச்சலுக்குள் சிக்கி விடுகின்றார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு கவிதாயினி தன்னிடம் உள்ள சொத்துக்களை விற்றுக் கவிதைக்கான விழாக்களை நடத்துவதும் நூல்களை வெளியிடுவதுமாக வள்ளலாகத் தன்னை பிரகடனம் செய்திருக்கின்றார்.

புதிதாக முளைத்த ஒரு கவிதாயினி தனக்குத்தானே கவிக்கூ என்ற பட்டத்தினைச் சூடிக்கொண்டதைப் பார்த்த பொழுது கூய் என்று கூப்பாடு போட வேண்டும் போல் தோன்றியது. தீவிர எழுத்தின் பக்கம் இவர்களை இணைத்துக்கொண்டு இவர்களுக்கு நல்ல கவிதைகளைக் காட்ட வேண்டுமென்றால் செய்ய மாட்டேன் என்று அடம்பிடிக்கிறார்கள்.

சும்மா கதைத்துக் கொண்டு இருப்பது போல் சொற்களை ஊசிப்போன வடை போல் அடுக்கி வைத்துவிட்டு கவிதை என்கிறார்கள். உயர் பட்டங்கள் பெற்றவர்கள் ஓய்வு பெற்ற பிரபலங்கள் முகநூலில் படுத்தும்பாடு தாழ முடியவில்லை.

இது கவிதைக்கு மட்டுமல்ல இலக்கியத்திற்கும் ஆபத்தைத் தரும் செயற்பாடாகும். தீவிர வாசிப்பும் பொறுமையாக இருந்து செப்பனிட்டுத் திருத்தி அமைக்கப் படாத படைப்பும் உப்பில்லாப் பண்டங்களே. வீதியோர பாஸ்பூட் கடைகள் மாதிரி சில முகநூல் எழுத்தர்களின் இலக்கியமும் இன்று பரிதாப நிலையாக மாறிவிட்டது. புகழும் வாழ்த்துக்களும் மட்டுமே உலகம் என்றாகிப் போன கௌரவ பிச்சைக்காரர்களிடமிருந்து நல்ல படைப்புகளை எப்படி எதிர்பார்க்க முடியாதோ அவ்வாறே முகநூல் முசுப்பாத்திக் கவிஞர்களிடமிருந்தும் நல்லதை எதிர்பார்க்க முடியாது.

இவர்களால் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு மயிரையும் புதிதாக நட்டு விட முடியாது. முதலில் இவர்களைக் கிராமங்கள்தோறும் கண்டு தொடர்ச்சியாக நல்ல நூல்களை அறிமுகப்படுத்தி வாசிக்க செய்ய வேண்டும்.

பட்டறைகளை நடாத்தி எழுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். தனது நத்தைக் கூண்டின் இருளிலிருந்து மெல்ல வெளிச்சத்தை நோக்கி நகர்த்த வேண்டும். அதற்கு இந்த மகா கவிகளின் மனங்களும் மசிய வேண்டுமே?

இலக்கிய மேடைகளில் வழங்கப்படும் பட்டங்களும் கௌரவிப்புக்களும் இன்று அரசியல் சாயம் பூசப்பட்டு சோபை இழந்து விட்டது. அண்மையில் அரச செலவில் நடைபெற்ற பிரதேச இலக்கிய விழாவொன்றில் கலைஞர் கௌரவிப்பு நடைபெற்றது. அதில் கௌரவிக்கப்பட்ட சிலர் தாம் எதற்காக கௌரவிக்கப்படுகிறோம் என்று கதிகலங்கி நின்றதையும் தரிசிக்க முடிந்தது. கலை அல்லது கலா ரசனை, இலக்கியற் செயற்பாடுகள் அனைத்தும் திறமைகளின் மதிப்பீட்டிலிருந்து நழுவி ஒட்டுண்ணிகளின் உறைவிடங்களில் கொடி கட்டிப் பறக்கின்றது என்பதே இன்றைய யதார்த்தம்.

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -ஜிஃப்ரி ஹாசன்



ஓவியம்:
றஷ்மி

# இஹாப் ஹாஸனும் தமிழ்ப் பின்நவீனத்துவமும்

தமிழில் நவீனத்துவ, யதார்த்தவாத இலக்கியம் வலுவாக உள்ள நிலையில் அதன் மீது படைப்பு மற்றும் சிந்தனைத் தளங்களில் தமிழ்ச் சூழலில் தாக்குதல்களைத் தொடுத்து வந்தவர்கள் நாகர்ஜுனன், ரமேஷ்-பிரேம், எம்.ஜி.சுரேஸ், தமிழவன், எம்.டி.முத்துக்குமாரசாமி, அ. மார்க்ஸ் போன்றோர். படைப்பு சார்ந்து நவீனத்துவ எல்லைகளை மீறிய படைப்பாளிகள் என்ற அளவில் இன்னும் பலரைக் குறிப்பிடலாம். கோணங்கி, சாரு நிவேதிதா, யுவன் சந்திரசேகர், விக்ரமாதித்த மாமலல்லன். இவர்கள் பெரும்பாலும் கதைமொழி மற்றும் எடுத்துரைப்பு முறைகளில் புதிய பரிசோதனைகளைச் செய்து பார்த்தவர்கள். எஸ்.ரா, ஜெயமோகன் போன்றவர்கள் ஒரு சில கதைகளில் கதையின் வடிவம், எடுத்துரைப்பு சார்ந்து இத்தகைய புதிய பரிசோதனைகளைச் செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ இலக்கியச் சூழலைப் பொறுத்தவரை ஷோபா சக்தி, ச.ராகவன், த. மலர்ச்செல்வன், திசேரா, அம்ரிதா ஏயெம், எம்.எம். நௌஸாத், சாஜித், யதார்த்தன் என இந்தப் பட்டியலை நீட்டிச் செல்லாம். இவர்களில் சிலர் சிறுகதை சார்ந்தும் சிலர் நாவல் சார்ந்தும் அதுவரை தமிழ் இலக்கியத்தின் பிரதான கதைகூறல் முறையாக இருந்த நவீனத்துவத்தின் எல்லைகளை மீறி புதிய சாத்தியங்களை பரிசோதித்துப் பார்த்தனர். ரியாஸ் குரானா இதனை கவிதையில் செய்ய முயற்சித்துப் பார்த்தார். கதையின் வடிவம் சார்ந்தும், மொழி சார்ந்தும் இந்தப் புதிய பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கோணங்கி அதுவரை நவீன யதார்த்வாத எழுத்து முறையில் புழக்கத்தில் இல்லாத ஒருவகைப் புதிய மொழியை தன் புனைவுகளில் முன்னிறுத்தினார். உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தை எனும் அவரது நாவல் வெளிவந்தபோது அதன் தலைப்பும், மொழியும் வாசகனுக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்தன. தமிழ் இலக்கியத்துக்கு அது ஒரு புதிய வருகை என்றளவில் கவனம் பெறுகிறது. அத்தகைய முயற்சிகளை தமிழ் இலக்கியச் சூழல் விரைந்து அங்கீகரிப்பதில் தயக்கமே காட்டி வந்திருக்கிறது. சிலவேளைகளில் அதனை நிராகரித்து ஒதுக்கியும் இருக்கிறது. ஆனால் இலக்கியம் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பதில்லை. பின்நவீனப் படைப்புகளையும் சமகாலத் தமிழ் இலக்கியம் தன்னுள் ஒரு பகுதியாக, நவீனத்துவத்துக்குப் பிந்திய தமிழ் இலக்கியத்தின் ஒரு புதிய பரிமாணமாக உள்வாங்கி தன் எல்லைகளை அகலத் திறந்துள்ளது.

பொதுவாக பின்நவீனப் படைப்புகள் சமூகப் பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து அவற்றை சாதாரண சனங்களின் மொழியில் முன்வைப்பதில்லை. நிஜமான கதாபாத்திரங்களைக் கொண்டு ஒரு மையக் கருவில் நின்று கதையை நகர்த்திச் செல்வதில்லை. தவிர, கதைக்கான தொடக்கம், உச்சம், முடிவு என்ற நவீனத்துவ வரையறைகளை வேண்டுமென்றே மீறுகிறது. இதனால் இலக்கியம் குறித்த நவீனத்துவ வரையறையின்படி பின்நவீன எழுத்துகளை இலக்கியமாக அங்கீகரிப்பதில் தயக்கம் ஏற்படுவது இயல்பானதுதான். ஆனால் இலக்கியம் என்பது ஓரிடத்தில் அசையாமல் தேங்கி நிற்கும் ஒரு பொருள்சார் பண்டமல்ல. அது ஒரு சமூக அசைவியக்கம். காலமாற்றத்துக்கேற்ப, சமூக மாற்றத்துக்கேற்ப தன்னளவிலும் மாற்றத்துக்குள்ளாகும் ஒரு பண்பாட்டுச் செயன்முறை.


எனவே புனைகதை இலக்கியத்தில் புதிய மாற்றங்கள், பரிசோதனைகள் நிகழ்வதும், அங்கீகாரம் பெறுவதும் சாதாரணமானவை. இதுதான் இன்றைய எல்லா மொழி இலக்கியங்களினதும் தோற்றப்பாடாக இருக்கிறது. உலகளவில் பார்த்தால் உண்மையிலேயே இந்த விடயம் இப்போது பழைய பேசுபொருளாகிவிட்டது. ஐரோப்பிய மற்றும் மேற்கத்தேய சூழலில் எண்பதுகள், தொன்னூறுகளிலேயே இந்த விவாதங்கள் அங்கு நடைபெற்று ஓய்ந்து விட்டன. தமிழில் கூட இது பரவலான அங்கீகாரத்தைப் பெறாவிட்டாலும் 90 கள், 2000 காலப் பகுதியிலேயே அறிமுகமாகி பலத்த விவாதங்களைக் கிளப்பியது. இன்று தமிழுக்கும் இந்த விவாதப் பொருள் பழசுபட்டுவிட்டது. உலகளவில் இன்று பல்வேறு நோக்கங்களுக்காக இந்த வகை இலக்கியமே மேம்படுத்தப் படும் ஒரு சூழல் நிலவுகிறது. இலக்கியத்துக்கான நோபல் விருது உள்ளிட்ட உலகின் மிக முக்கிய இலக்கிய விருதுகள் இந்த வகைப் படைப்புகளுக்கே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. இதற்குப் பின்னால் வேறு அரசியல் நோக்கங்கள், நலன்கள் இருக்கக்கூடும். ஆயினும் வெளிப்படையான இந்த அங்கீகாரம் இந்தவகை இலக்கியத்துக்கு நல்லதொரு எதிர்காலம் இருப்பதையே பறைந்து சொல்கிறது.

ஈழத் தமிழ்ச் சூழலில் பின்நவீனப் படைப்புகள் குறித்த பெரிய விவாதங்கள், உரையாடல்கள் தமிழகம் அளவுக்கு நிகழவில்லை. பின்நவீனத்துவத்தைக் கோட்பாடு சார்ந்து வாசித்துப் புரிந்து அதனை நமது சூழலுக்கு அறிமுகப்படுத்தி ஈழத் தமிழ்ச் சூழலில் யாரும் பெரிதாக எழுதவில்லை. ஆனால் பின்நவீனத்துவத்துக்கு எதிரான மார்க்ஸியர்களின் மிகச் சிறியளவிலான எதிர்க் கருத்தாடல்கள் இங்கு இடம்பெற்றன. ஈழத்தின் புதிய தலைமுறையினரிடம் காணப்படும் வாசிப்பு வறுமையும், சிந்தனை வறுமையும் அவர்கள் மத்தியில் புதிய வகைப் படைப்புகள் மற்றும் கோட்பாடுகள் குறித்த புரிதலை ஏற்படுத்தவில்லை. அதன் விளைவுதான் ஈழத்திலிருந்து இன்று பின்நவீனக் கவிதை என்ற புரிதலில் ஆழமற்ற, மொழி அழகியலற்ற வெறும் சொற்குவியல்கள் கவிதைகளாக வந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் சிறுகதை சார்ந்து ஒரு சில முயற்சிகள் இந்தத் தளத்தில் நிகழ்ந்துள்ளன. ஷோபா சக்தி, ச. ராகவன், த. மலர்ச்செல்வன், திசேரா, யதார்த்தன், சாஜித், எம்.எம். நௌசாத் போன்றவர்கள் ஈழத்தின் இந்தப் புதிய வகை இலக்கியப் போக்கை தங்கள் படைப்புகளில் பிரதிபலிப்பவர்களாகச் சொல்லாம். வி.கௌரிபாலனின் கதைகளும் இந்த வகைமைக்குள் உள்ளடக்கத்தக்க மொழயிலாலானதே. அவரது காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல் நினைவு கொள்ளத்தக்க தொகுப்பு.

ஆயினும் இவர்களது படைப்புகள் பின்நவீனத் தன்மைசார்ந்து முழுமை பெறாத ஒருவகை மேலோட்டமான படைப்புகளாகவே உள்ளன. இந்தத் தளத்தில் இயங்கும் நமது படைப்பாளிகள் முக்கிய பின்நவீனக் கோட்பாட்டாளரான இஹாப் ஹாஸனின் பின்நவீனக் கோட்பாடுகளும், அதுதொடர்பான அவரது ஆய்வுக் கருத்துகளும் குறித்த ஒரு பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்வது அவர்களது படைப்புகளை மேலும் கூர்மையடையச் செய்யும். அவரது பின்நவீனத்துவ சிந்தனைகள், ஆய்வுகள் குறித்து தமிழ்ச் சூழலில் ஒரு ஆழ்ந்த மௌனமே நிலவி வருகிறது. எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜி.சுரேஷின் பின்நவீனத்துவம் என்றால் என்ன? என்ற நூலில் மட்டுமே அவருக்கு ஒரு சிறு இடம் வழங்கப்பட்டது. தமிழ்ச் சூழலில் பின்நவீனப் படைப்புகள் எந்தளவு வெளிவந்துள்ளன என அறிந்துகொள்ளவும் அது தொடர்பான ஒரு வாசகக் கருத்துநிலையை உருவாக்கிக் கொள்ளவும் இஹாப் ஹாஸன் போன்ற பின்நவீனக் கோட்பாட்டாளர்களின் சிந்தனைகள் பற்றிய அறிமுகமும் உரையாடலும் தமிழ்ச் சூழலுக்கு மிகவும் அவசியமாகின்றன. 50 க்கு மேற்பட்ட புத்தகங்களையும், 300க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிய உலகின் மிக முக்கிய பின்நவீனக் கோட்பாட்டாளர் பேராசிரியர் இஹாப் ஹாஸன். பின்நவீனத்துவம் குறித்த 'Dismemberment of Orpheus', 'the postmodern turn: essays in postmodern theory and culture', 'from postmodernism to postmodernity', 'toward concept of postmodernism' போன்ற இவரது கட்டுரைகள் சமகால பின்நவீன சிந்தனையில் மிகுந்த தாக்கத்தையும், மிக முக்கியமான திருப்பங்களையும் ஏற்படுத்தியவை.

பின்நவீனத்துவம் முன்வைக்கும் மிக முக்கிய கதையாடல்களையும், அதன் தன்மைகளையும் சரியானதொரு அர்த்தத்தில் விபரிப்பதில் இஹாப் ஹாஸன் பெரியளவில் பங்களிப்புச் செய்திருக்கிறார். இவரது விமர்சன எழுத்துகள் மற்றும் கட்டுரைகள் இலக்கிய கலாசாரத்திலும், கோட்பாட்டிலும் ஒரு பெருந்தாக்கத்தை உண்டு பண்ணின. பின்நவீன இலக்கியத்தின் தன்மைகளை நவீனத்துவத்தோடு ஒப்பீட்டு முதன் முதலில் சிறப்பாக வேறுபடுத்திக் காட்டினார். ரொபர்ட் ஸ்டோர் போன்ற சிந்தனையாளர்கள் கூட பின்நவீனம் என்ற பதம் எப்போதும் தங்களைக் குழப்பும் ஒன்றாக இருப்பதாக அறிவித்திருந்த நிலையில் இஹாப் ஹாஸன் அதனைத் தெளிவுபடுத்திக் காட்டினார். "நான் இந்த சொல்லுடன் மிகவும் பிணைந்திருந்து புதிய தோற்றப்பாடான அந்த இயக்கத்தை தெளிவுபடுத்த முயற்சித்தேன் என்று ஊகிக்கிறேன்" என்று பின்நவீனக் கோட்பாட்டுக்கான தனது பங்களிப்பை இஹாப் ஹாஸன் தனது நேர்காணலொன்றில் குறிப்பிடுவார்.

இஹாப் ஹாஸன் உருவாக்கிய நவீனத்துவத்துக்கும், பின்நவீனத்துவத்துக்குமிடையிலான வித்தியாசங்களைத் தெளிவாக முன்வைக்கும் இரட்டை எதிர்நிலை அட்டவணை மிகவும் புகழ்பெற்றது. அதுவரை எல்லோரையும் குழப்பிக்கொண்டிருந்த பின்நவீனக் கருத்தியலின் சரியான தன்மையை முதன் முதலில் இந்த அட்டவணையில் இஹாப் ஹாஸன் வரையறுத்தார். இதனால் அந்த அட்டவணை லிண்டா ஹட்சன் போன்ற உலகின் மிக முக்கிய விமர்சகர்களாலேயே அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இக்கட்டுரை பல மறுபதிப்புகளைக் கண்டது.

"நவீனத்துவத்திற்கும், பின்நவீனத்துவத்துக்குமிடையிலான வித்தியாசங்களைப் பட்டியலிட்டிருந்த இரண்டு செங்குத்து வரிசையில் சில பக்கங்கள் அடிக்கடி மறுபதிப்புச் செய்யப்பட்டன"

என்று இஹாப் ஹாஸனே தனது நேர்காணலொன்றில் அவரது இரட்டை எதிர்நிலை அட்டவணைக்கு கிடைத்த பரவலான அங்கீகாரம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**இதுதான் அந்த அட்டவணை:**

| | |
|---|---|
| » நவீனத்துவம் | பின்நவீனத்துவம் |
| » புனைவுவாதம்/ குறியீட்டுவாதம் | டாடாயிசம் (கலை வேடிக்கை வாதம்) |
| » உருவம் (மூடியநிலை) | எதிர்-உருவம் (திறந்தநிலை) |
| » நோக்கம் | விளையாட்டு |
| » வடிவமைப்பு | சந்தர்ப்பம் |
| » அடுக்கு நிலை | குலைத்துவிடல் |
| » தேர்ச்சித் திறன் | சோர்வுநிலை |
| » கலை புறவயமானது/ | |
| » முற்றுப்பெற்ற ஆக்கம் | தொடர்செயல்/ நிகழ்த்துகை |
| » படைப்பு/ | |
| » ஒட்டுமொத்தப்படுத்தல் | சிதைவு/கட்டுடைப்பு |
| » ஒன்றிணைவு | முரண்படல் |
| » இருப்பு | இன்மை |
| » மையப்படுத்தல் | சிதறடித்தல் |
| » வகைமை/ | |
| » எல்லைப்படுத்தப்பட்டது. | பிரதி பரஸ்பரம் சார்ந்திருத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| » | பொருண்மை சார்ந்தது | அலங்காரமானது |
| » | உருவகம் | ஆகுபெயர் |
| » | விருப்பத் தேர்வு | பலவற்றின் கலவை |
| » | வேர்/ஆழம் | மேல்பரப்பு |
| » | விளக்கவுரை/வாசிப்பு | எதிர்-விளக்கவுரை |
| » | குறிப்பீடு | குறிப்பான் |
| » | கதையாடல் | எதிர்க்கதையாடல் |
| » | தேர்ச்சியான சொற்கோவை | சாதாரணமாக புழங்கும் சொற்கள் |
| » | அறிகுறி | விழைவு |
| » | பௌதீக அதீதம் | முரண்நகை |
| » | உறுதிப்பாடு | உறுதியற்ற தன்மை |

(Towards post-modernism, Ihaab haasan)

அவர் உருவாக்கிய இந்த இரட்டை எதிர்நிலை அட்டவணை நவீனத்துவத்துக்கும், பின்நவீனத்துவத்துக்குமிடையிலான வேறுபாட்டினைத் தெளிவாக முன்வைப்பதோடு எது பின்நவீன இலக்கியம் என்பதை ஒரு வாசகன் இலகுவில் அடையாளங் கண்டுகொள்வதற்கும், ஒரு எழுத்தாளன் பின்நவீனப் பிரதிகளை உருவாக்குவதற்கும் உதவியாக அமைந்தது. இந்த அட்டவணையில் பின்நவீனத்துவப் பண்புகளாக குறிப்பிடப்பட்டுள்ளவை தமிழ்ச் சூழலில் ரமேஷ்-பிரேம், தமிழவன், எம்.ஜி. சுரேஷ், போன்றவர்களின் புனைவெழுத்துகளில் வெளிப்பட்டது. ஈழத்தைப் பொறுத்த வரை ஷோபாசக்தி, த.மலர்ச்செல்வன், திசேரா, ச.ராகவன், சாஜித் போன்றவர்களின் படைப்புகள் இஹாப் ஹாஸனின் இரட்டை எதிர்நிலைப் பண்பை பிரதிபலிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

இந்த இரட்டை எதிர்நிலை அட்டவணை மொழியியல், இலக்கியக் கோட்பாடு, தத்துவம், மானுடவியல், உளப்பகுப்பாய்வு, அரசியல் விஞ்ஞானம் மற்றும் இறையியல் போன்ற துறைகளிலும் கூட கவனப்படுத்தப்பட்டு வருகிறது.

பின்நவீனத்துவக் கோட்பாடுகளை மேலும் மக்கள் மயப்படுத்துவதில் அக்கறை எடுத்துக்கொண்ட இஹாப் ஹாஸன் புதிய சொற்களை உருவாக்கவும் செய்தார்.

"ஒரு தடவை பின்-நவீனத்துவத்தின் சிறப்பியல்புகள் அல்லது தூண்டு விசை அல்லது பாணி பற்றி விபரிக்கும் போது "நான் *'indeterminance'* (உறுதியற்ற தன்மை) எனும் சொல்லை உருவாக்கினேன். இது ஒரு போதாமையான விபரணமாகவே இருந்தது. ஏனெனில், பூகோள அரசியல் சூழலில், பின்நவீனத்துவமானது மேற்கத்திய கலாசாரங்களில் மட்டுமன்றி, ஒவ்வொரு வகையினதும் (கலாசாரத்தினதும்) மையங்களுக்கும்-விளிம்புகளுக்கும், விளிம்புகளுக்கும்-விளிம்புகளுக்கும், மையங்களுக்கும்- மையங்களுக்கும், இன்மைகளுக்கும்- இன்மைகளுக்குமிடையிலான புதிய உறவுகளிலும் தொடர்புபட்டது. இது உலகமயமாக்கல் / உள்ளூர்மயமாக்கலின் சிக்கலான மற்றும் புதிய சொற்றொடரியல் ஆகும்".

என்று அவர் தனது நேர்காணலொன்றில் குறிப்பிடுகிறார். பின்நவீனத்துவத்தின் இயல்பு பற்றி விபரிக்கும் போது அவர் உருவாக்கிய *'indeterminance'* எனும் சொல் ஆங்கிலத்திற்கு ஒரு புதியவரவாகவும், பின்-நவீனக் கோட்பாட்டின் மைய ஆன்மாவையே விபரித்து விடுவதாகவும் இருந்தது.

பின்-நவீனத்துவம் குறித்து விபரிக்கையில் இஹாப் ஹாஸன் உருவாக்கிய இந்த *'indeterminancy'* எனும் பதமானது பின்நவீனக் கோட்பாட்டின் முக்கிய போக்குகளான நிச்சயமற்ற அர்த்தம் *(ambiguity)*, தொடரறு நிலை *(discontinuity)* பன்மைத்துவம் *(pluralism)*, தற்செயல் தன்மை *(randomness)*, கலகம் *(revolt)* நெறிபிறழ்வு *(perversion)*, சிதைவாக்கம் *(deformation)* போன்றவற்றுக்கு ஒரு கருத்தியல் வலுவை வழங்கியது.

அநேகமாக தமிழ்ச் சூழலில் பின்நவீனப் படைப்பாளிகளின் புனைவெழுத்துகளில் இந்தக் குணாம்சங்கள் சில படைப்புகளில் ஓரளவும், சிலபடைப்புகளில் முழுமையாகவும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டுரைகூட பின்நவீனம் குறித்த அவரது முழுக் கருத்தியலையும் கவனத்திற்கொள்ளவில்லை என்பது இங்கு மனங்கொள்ளத் தக்கது.

பின்நவீனக் கோட்பாட்டுக்கான இஹாப் ஹாஸனின் முழுமையான பங்களிப்புக்காகவே அவரது மரணத்தை ஒட்டி இரங்கல் செய்தி வெளியிட்ட nytimes.org எனும் இணையத் தளம் *'Father of postmodernism dies at 89'* என இரங்கல் குறிப்பு வெளியிட்டது.

தமிழில் இன்று பரவலடைந்திருக்கும் இந்தப் புதிய வகை இலக்கிய முயற்சிகளுக்கு கோட்பாட்டுப் பின்புலத்தையும், வரையறையையும் இஹாப் ஹாஸன் வழங்கி இருக்கிறார். வெகுஜன மலின எழுத்துகள் அதிகம் மலிந்து விட்ட தமிழ்ச் சூழலில் அதனைப் பலர் அங்கீகரித்தாலும் கூட இலக்கியம் அதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் இந்தவகை எழுத்துகளையும் பின்நவீனத்துவம் இலக்கியமாக ஏற்றுக்கொள்கிறது என்றொரு பார்வையும் தமிழ்ச் சூழலில் உள்ளது. பின்நவீனத்துவ மூல சிந்தனையாளர்களிடம் அத்தகைய நிலைப்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருப்பின் அதனைப் பின்நவீனத்துவத்தின் மாபெறும் சரிவாகக் கணிக்க வேண்டியிருக்கும்.

அதேநேரம், தமிழ்த் தீவிர இலக்கியத்தில் நவீனத்துவ விதிகளை மீறிய இந்தவகைப் புதிய எழுத்துகள் பலராலும் மறுக்கப்பட்டாலும் அது இன்று இலக்கியத்தில் வலுவாக ஊன்றிவிட்டது. இன்றைய தமிழ் இலக்கியத்தில் நின்று நிலைத்துவிட்ட இலக்கியப் போக்காவும் அது மாறிவிட்டது. எனவே, நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கப்பால் இன்று இலக்கியம் அதனை அங்கீகரித்துவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோப்பம்

**-த.மலர்ச்செல்வன்**



எனக்கும் முரகாமிக்கும் பெரும் ஒட்டுறவு எனச்சொல்லமாட்டேன். எனக்குத் தற்செயலாகத்தான் அவனுடைய அறிமுகம் கிடைத்தது வெண்மலையைக் குடைந்து கடலை அடைக்க அவன் முற்பட்ட தருணம் நான் அவனைச் சந்தித்தேன். அப்போ அவன் பழுப்பேறி நிறங்களை இழந்து கிடந்தான். ஒரு மிடறு தண்ணீ தந்து அவன் மாயமாக மறைந்து போனபோது என்னில் உப்பரித்து நச நசப்புத் தோன்றியது. அப்போ 'கினோ' வெளிவரவில்லை. 'தேடுதலை'வாசிக்கத் தொடங் கினேன். இரவொன்று கழன்று விழுந்திருந்தது. அப்போ என்னில் முளைத்துக் கிடந்த பற்றைகள் வளரத்தொடங்கின.

-1-

எனக்கு வாழைப்பழத்தின் மகன் தயாபரனை சின்ன வயதிலிருந்தே அறிமுகம். அப்போ அவன் ஒரு ஒல்லித்துண்டன். அவனுடைய சுருண்ட கேசம் ஆபிரிக்காப் பிள்ளைகளை ஞாபகப்படுத்தும். மேலில் சட்டை அணிந்திருக்கமாட்டான். ஆனால் மேனி தகதகவென்று தங்கம்போல் ஜொலிக்கும். 'சிப்' இல்லாத காற்சட்டை இடுப்பில் இருக்காமல் முழங்கால்வரை ஓடும். இழுத்துப்பிடித்து பந்துகளைப் புறக்கித் தருவான். வண்ணாந்துறை மைதானம் பொழுது சாயும்வரை கலகலவென இருக்கும். அந்த அந்தகாரம் வரைக்கும் தயாபரன் எங்களுடன் இருப்பான்.

-2-

சுந்தரலிங்கம் வேளாளர் தெருவின் காவலன் என்னைவிட ஐந்து வயது மூத்தவன். காலொன்று இளம்பிள்ளை வாதத்தால சீரழிந்தாலும் ஔவை சொன்னவர்களை விட அவன் வேலன். மகிழுந்து, உழவு இயந்திரம், உந்துருளி, இசக்கி, துவிச்சக்கர வண்டி, பேருந்து என அவன் ஓட்டாத வாகனமேயில்லை. எதற்கும் பயப்படாத தீரம் கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புளொட்' எங்க தெருவிற்கு வருவதற்கு இவன்தான் காரணம். சோசலிசம், லெனினிசம், பாசிசம், சேகுவரா, கால்மாக்ஸ், பிடல்கஸ்ரோ... என ஓதுவராய் ஆக்கியவனும் இவன்தான். அவன் நினைவுகள் சூட்டுப்பொக்கஎம் போல் எழும்.

- 3 -

ஆதத்தை எனக்குத் தெரியாது.மிஸ் ராதான் அலுவலகத்தில் வைத்துச் சொன்னாள். கூடு கலைந்துபோன குடும்பம் தன் குருவியைத் தேடி அழிந்து போனதை அவள் சொல்லச் சொல்ல எனக்குள் மாயங்கள் நிறைந்த நீர்ச்சாலையில் நடந்து போனேன். தெரியாத உரு அவள் வர்ணனையில் என்னில் வளர்ந்தது.

*

நான் எழுத நினைத்த 'என்ன ஆனானுக்கும்' 'தேடலுக்கும்' தொடக்கம் மாறுபாடானது. இருந்தும் என்னுடைய நகர்வுக்கும் ஒற்றுமையிருந்தது.

ஹாருகி முரகாமி 'தேடலை' இப்படித்தான் தொடங்கியிருந்தார்.

"என் கணவரின் தந்தை மூன்று வருடங்களுக்கு முன்பு ட்ராம் வண்டி மோதி இறந்துபோனார்" அந்தப்பெண் சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

.................................

.................................

நான் முரகாமி மீது பல வாசிப்புக்களை உள்ளிழுப்பில் செய்திருக்கின்றேன். இம்முறைதான் முதன்முறையாக இந்தக் கட்டுடைப்புக்குள் வந்திருக்கின்றேன். இது கடினமானது. வேறு ஞாபங்களின் ஊடுபாய்வு எனக்குள் இறங்கியிருக்க வேண்டும். நான் அதை உணரத் தொடங்கினேன்.

எனக்குள் பெரும் கேள்வி தொக்கி நிற்கிறது. அறுபத்தெட்டு வயது மாமனாரைத் தேடும் மருமகள் மாயங்களை விட்டு விட்டு பாய்ந்து போகிறாளா? 'மாமா எப்படித் தொலைந்து போனார்?' சதா என் தலைக்குள் ஓடிக்கொண்டிருக்கும் கடிகார முள் நின்று விடவில்லை. இருபத்தி நான்காவது தளத்தில்தான் காணாமல் போனாரா? எனக்குப் பிடிபடவில்லை. மூன்று இடைவெளிக்குள் அந்த மாயம் எப்படி நடந்தது? எனக்குள் 'தேடல்' நடந்து போகின்றது.

**



ஓவியம்: பிரபஞ்சன்

இன்னொரு இடத்தில் முரகாமி கதையை இப்படி நகர்த்துகிறார். அது தேடலுக்கு சம்மந்தமில்லாத கேள்வி. இந்த நீட்சி எதற்கென்று தெரியவில்லை? யோசிக்கத் தொடங்கினேன்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் உங்கள் வயதைக் கேட்கலாமா?

இந்தக் கேள்வி அவனிடமிருந்து வருவதற்கு எந்தத் தார்மிகத் தன்மையுமிருக்கவில்லை. தொலைந்துபோன மாமனாரைத் தேடுகின்ற மருமகள் மாமா பற்றியே கதையாடுகிறாள். இதை முரகாமி ஏன் இடைச்செருகளாக அல்லது திடீரெனப் புகுத்தினார் என எனக்கு விளங்கவில்லை?

"எனக்கு என்ன வயதாகின்றதென்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?"

என்ற அவளின் கேள்வி அவனுக்குப் புழு நெழியத் தொடங்கியிருக்கவேண்டும்.

"உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நீங்கள் பதிலளிக்க வேண்டியதில்லை"

அவன் தன்னை ஜென்டில்மேனாகக் காட்ட நினைத்த எத்தனிப்பு கதையின் உயிர் மூச்சில் ஏதோ (கை வைத்தது போல்) ஒரு வகைத் தளர்வைத் தர குறிப்புக்களை நான் தூக்கியெறியவில்லை.

ஆனால் நான் 'தேடலை' வைக்கவில்லை பயணித்துக்கொண்டிருந்தேன்.

-இருந்தும் எனக்குள் அவள் இப்படித்தான் எழுகிறாள்-

"என் வயதையோ, வேறு எதனையுமோ நான் மறைக்க முயலவில்லை. நான் திசை திருப்புபவளுமில்லை. பொய்யையும் உரைக்க வரவில்லை. ஆனால் சம்பவக் கோர்வைக்கும் உங்கள் கேள்விக்கும் சம்மந்த சம்மந்தமில்லாதுள்ளது. மாமாவைப் பற்றியே உங்கள் உரையாடல் இருந்திருக்க வேண்டும். என் வயது பற்றி உங்களுக்கு என்ன அக்கறை? இந்தக்கேள்வி எதற்கு? என்னை வசப்படுத்தவா? உங்கள் நகர்வின் நோக்கம்தான் என்ன?

**

அவளுக்கு ஆயிரம் கேள்விகள் முளைத்திருக்க வேண்டும். இருந்தும் அவள் முன் அமர்ந்திருப்பதால் அவள் பதிலளித்து விடவேண்டுமென்று கருதியிருக்க வேண்டும்.

(* முரகாமியின் சோடனைதான் அவள்மீது இப்படித் திணித்திருக்கிறது. அது என்னுள் கேள்வியெழுப்புகிறது.)

"எனக்கு முப்பத்தைந்து வயது"

.................................

.................................

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் தேடல் தொடரும்-எங்கேயோ-என்று நினைத்தேன். ஒரு கதவைப்போல வடிவம் கொண்ட ஒன்றிற்கான தேடல் அல்லது ஓரளவிற்கு ஒரு குடையை ஒத்ததாக இருக்கும் ஒன்றிற்கு அல்லது ஒரு டோநட் அல்லது ஒரு யானை. நான் கண்டறியக் கூடிய இடத்திற்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு தேடலாக இருக்குமென்று நம்பினேன்"

ஆனால் முரகாமி இப்படித் தேடலை முடித்திருந்தது எனக்குள் மிகு ஆர்வத்தை ஏற்படுத்தியது. என் கண்கள் துறுவேறிக்கொண்டிருந்தன.

இத்தருணத்தில்த்தான் என்கதையைத் தொடங்க முயல்கின்றேன். தொலைந்துபோன நண்பர்களைத் தேடிக் கொண்டிருக்கும் நாட்கள் வெள்ளரிப்பழம்போல் வெடித்தது வெடித்து என்னில் ஊறிக்கொண்டே சதா இருந்தது. என் முன் நிழலாடிய உருக்கள் எங்கே? தேடித் தேடி களைத்துப் போனாலும் ஞாபகங்கள் அறுகம் புல்போல் வளரத்தான் செய்கின்றன முரகாமி....

**

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்த நியமனம் எப்படிக் கிடைத்ததென்று தெரியவில்லை. நான் எந்த அரசியல்வாதியையும் வால்பிடிக்கவில்லை.எப்படி எனக்கு இந்தப்பதவி கிடைத்தது? ஜனாதிபதியின் சிபார்சிலா கண்டறியப்பட்டிருக்கின்றேன்? இது ஒரு அதிசயம்தான். 'காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு' பல தடவை தோன்றுவதும் மறைவதும் எல்லோரும் அறிந்ததுதான். புதுத் தோற்றத்தில் நானும் உள்வாங்கப்பட்டிருப்பது தொடையிலிருந்து நுனிவிரல் வரை உதறியது. முன்னரும் 'சமாதானக்குழு' உறுப்பினராக நான் இருந்து ஊரைவிட்டு ஓடிப்போன ஞாபகங்கள் எல்லாம் மின்னி மின்னிப் பூச்சி போல் வந்து வந்து போகாமலில்லை. ஆனால் காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் மூலம் எந்த ஆபத்தும் வர இப்போ வாய்ப்பில்லை. இப்போ புலிகளும் இல்லை. ரெலோ, புளொட், ஈபி.ஆர்.எல்.எப் எல்லாம் கொக்கரிப்புத் தொழிலுக்கு வந்திருப்பதால் எந்தப் பிரச்சினையும் வராது? சமாதானக் குழுக் காலம் சந்திரிக்காவின் ஆட்சிக்காலம். பேச்சுக் குழம்பிய பின்தான் ரெலோக்காரன்கள் ஆமியோடு சேர்ந்து என்னைப் போடத்திரிஞ்ச காலம். நான் மண்ணிடையில் தப்பிய காலம். அது பழைய பல்லவிதான். இது இங்கு தேவையற்றது.

இந்தக் காணாமல் போனவர்களையாவது கண்டு பிடிப்பம், மனம் ஏதேதோ சொல்ல நியமனக் கடிதத்தோடு இணைக்கப்பட்டிருந்த மஞ்சள் விண்ணப்பத்தைத் தட்டிப்பார்த்தேன். பதினாறு பக்கங்கள் கொண்ட உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்து / காயமடைந்து / காணாமல் போன நபர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான தொகை மதிப்பீடு விண்ணப்பம் என்னை ஏதோ செய்தது. ஒன்பது பிரிவுகளிலும் கேள்விக்கு மேல் கேள்விகள்

1) அடையாளங்காணும் தகவல்கள்
2) குடும்ப உறுப்பினர்களின் தகவல்கள்
3) இடம் பெயர்ந்த குடும்பக் கூறுகளிலுள்ள உறுப்பினர்களின் தகவல்கள்
4) 1982 யிற்குப் பின் உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்து / காணாமல் போனவர்கள்.
5) உள்நாட்டு யுத்தத்தினால் காயமடைந்த / அங்கவினமடைந்த நபர்களின் தகவல்கள்
6) உள்நாட்டு யுத்தத்தினால் குடும்ப உறுப்பினர் / உறுப்பினருக்குச் சொந்தமான ஏதாவது சொத்துக்களுக்குச் சேதம் / இழப்பு ஏற்பட்டதா?
7) உள்நாட்டு யுத்தத்தினால் குடும்பம் வசித்த வீட்டிற்கு சேதம் ஏற்பட்டிருப்பின் / வீடு இழக்கப்பட்டிருப்பின்
8) உள்நாட்டு யுத்தத்தினால் வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய தகவல்கள்
9) உள்நாட்டு யுத்தத்தினால் நிரந்தரமாக வசிப்பதற்காக வெளிநாடு சென்றுள்ள குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள்

இந்த விசாரணைக்கும் இந்த விண்ணப்பக் கையேட்டுக்கும் இடையே பெரிய தொடர்பு இல்லாவிட்டாலும் இலக்கங்கள் நான்கு, ஆறு பொருந்திவர வாய்ப்பிருக்கிறது. இது ஒருகிராம உத்தியோகத்தர் நிரப்ப வேண்டிய படிவம் என்பது என் கருத்து. என்னிடம் தந்திருப்பது பொருத்தமா? பொருத்தமில்லையா? என யாரிடம் கேட்பது. படிவத்தின் நான்காம் இலக்கத்தையே நான் குறிக்கோளாக எடுத்துக்கொண்டேன். உயிர் இழந்தவர் அல்லது காணாமல் போனவர் பற்றிய தகவல்கள் எனக் கோரப்பட்ட நிபந்தனையில் காணாமல் ஆக்கப்பட்டதுதான் மையப்புள்ளி.மற்றவற்றை நான் கவனத்தில் எடுக்கவேண்டியதில்லை. சூழலுக்கு ஏற்றால்போல் நடப்பது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

நாளை ஆணைக்குழு அமர்விற்குச் செல்வதற்கான தயார்படுத்தலைச் செய்துவிட்டு படுக்கைக்குப்போக சாமம் கடந்துவிட்டது. நானும் யுத்தத்தினால் பாதிக்கப் பட்டவன் என்பது இந்த நியமனத்திற்குப் பொருந்தாது. கருணை, விடுபடல், ஒருபக்கச்சார்பு, பாசம், பந்தம் இதற்கெல்லாம் இடமில்லை. இது ஒரு அரச நியமனம். தன் இனம், ஊர், சாதி என வேறு எந்தப் பக்கச்சார்புக்கும் இடமில்லை. வரும் வழிமுழுதும் சதா இவைதான் என் மண்டைக்குள் ஓடின.

சென்றல் கொலிச்சுக்கு வந்தடைய காலை எட்டு மணியைத்தாண்டிவிட்டது. ஐந்தாறு பேர் வாசலில் நின்றார்கள். வரவேற்பறையைத் தாண்டி அதிபரின் அறைக்கு எதிரேயுள்ள அறைதான் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. எனக்கு முன்னரே மற்றைய இரு உத்தியோகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்களும் வந்திருந்தார்கள். நான்தான் இந்த விசாரணைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பதால் மற்றவர்களின் வரவுகளை நிரப்பிக்கொண்டேன். கலாநிதி காயத்திரி உளவியல்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர். முகமட் சுலைமான் அரசாங்கச் சட்டத்தரணி. எங்களுக்கான உரையாடல் முடிவுற்றது. முதல் நபராக திருமதி மனோன்மணி சோமசுந்தரம் வண்ணாந்துறை வீதி, பதியூர் அவருடைய பெயரை அடையாளமிட்டு அந்தப் பெண்ணை வரச்சொல்லுமாறு உதவியாளருக்கு அறிவுறுத்தல் வழங்கினேன்.

காய்ந்த கம்புபோல்...தோல் சுருங்கி வயது மிகத்தோற்றம் காட்டும் ஒரு பெண்மணி அறைக்குள் நுழைந்தாள். அமரும்படி கூறினேன். அவள் இடறிக் கொண்டு அமர்ந்தாள்.

"நீங்கள் திருமதி மனோன்மணி சோமசுந்தரம்தானே" என்று கேட்டேன்.

தலையை அசைத்து "ஓம்" என்றாள்.

பின் பொல பொலவென நீர்த்தாரைகள் அவள் கண்களிலிருந்து வழியத்தொடங்கியது.

"அழாதே அம்மா" காயத்திரி இரக்கம் காட்டினாள். அவள் குரல் தளதளத்து ஒரு வகை ஈனக்குரல் மெல்லியதாக எழுந்தது.

"இஞ்ச பாருங்க அம்மா அழுதுகொண்டிருந்தால் உங்கள் தகவல்களை நாங்கள் அறியமுடியாது. உங்கள் வேதனை எங்களுக்குப் புரிகிறது. எங்களுடன் ஒத்துழைப்பு வழங்குங்கள் அம்மா" என்றேன்.

அவள் தன் சேலைத்தலைப்பினால் கண்களை ஒற்றிக்கொண்டு முகத்தைத் துடைத்தாள்.

"அம்மா சொல்லுங்க" காயத்திரி சொன்னாள்.

"என்ட மகன் வகுப்புக்கு சனி, ஞாயிறு விடியவும் ஆறு மணிக்குத்தான் வீட்ட விட்டுப் போவான்"

"கொஞ்சம் பொறுங்க உங்கட... -மகன்ட

- பெயர்
- பிறந்ததிகதி
- அடையாளஅட்டை இலக்கம்
- முகவரி
- பாடசாலை
- சம்பவம் நடந்த இடம்

போன்ற தகவலைத் தந்துவிட்டு மற்றதைச் சொல்லுங்க"

- சோமசுந்தரம் தயாபரன்
- 12.10.1978
- 783865514 V
- வண்ணாந்துறைவீதி, பதியூர்
- சிவானந்தாவித்தியாலயம்
- மாக்குடியூர்

"அப்ப ஒத்தரும் கதைக்கல்ல. வழமையாக பொருளியல் வகுப்புக்கு இருட்டோட ஆறு முப்பதுக்கு நடக்கிற. தம்பி அஞ்சி முக்காலுக்கு போயிடுவான். அண்டைக்கும் நான் வழியனுப்பக்குள்ள றோட்டில சனம் திரியுதுகள். தம்பியவிட்டுத்து சோறாக்கக்குள்ளதான் பக்கத்து ஊட்டு பொன்னம்மக்க வியலம் சென்னவ. மாக்குடிக்குள்ள ஊராக்கள் போக ஏலாம எல்லாச் சனமும் வவுண்டி றோட்டில நிக்குதுகளாம் எண்டு சென்னவ. அப்ப எண்ட புள்ள ஊட்ட வந்து சேரல. வவுண்டி றோட்டுக்குப் ஓடிப்போய் பாத்தன் சனங்கள் நிக்குதுகள்.ஒருத்தரும் போகல்ல. தம்பியோட வகுப்புக்குப் போற புள்ளைகளும் நிக்குதுகள். அவனுகளிட்ட தயாபரனக் கண்டதா மனே எண்டு கேட்டுப்பாத்தன். ஒத்தரும் காணல எண்டுதான் சென்னானுகள். நான் வீட்ட வந்து மீண்டும் பாத்தபோதும் பொடியன் வரல. நேரம் போகப் போக பயம் புடிக்கத் தொடங்கித்து. விதானையாரிட்டச் சொல்லித் தேடியும் பலன் கிடைக்கல்ல. மீன்காரக் கிட்டினன் அண்ணந்தான் சென்னாரு, ஒரு லூமாலாச் சைக்கிளில் நீல நிற செக்செக் சேட்டுப்போட்ட ஒரு வெள்ளப்பொடியன் பிலாவடி கடையைத்தாண்டி மாக்குடிக்குள்ளாள போனதக் கண்டதாகச் சென்னாரு.பொலிசிட உதவியோட கல்லடி வகுப்பு நடக்கிற இடம், படிப்பிக்கிற சேர் புள்ளைகள் எல்லாரிட்டையும் கேட்டு ஒரு அசுமாத்தும் காணல்ல. மறுகா மாக்குடியில பள்ளி சம்மேளத்திட்ட, ஊராக்கள், கடக்கார ஆக்கள் எண்டு விசாரிக்காத இடமேயில்ல. எண்ட புள்ள இத்தவரைக்கும் ஊட்ட வந்து சேரல ஐயா" பெரும் சத்தத்துடன் ஓலமிட்டாள்.

"அம்மா இங்க சத்தம் போடக்கூடாது. இது உங்களிடம் தகவல் பெற்று உண்மையை கண்டறிவதுதான் எங்கட வேலை. நீங்க இப்படிச் செய்தா எங்களால மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாது போகும் விளங்குதா அம்மா"

தலையாட்டினா. பாவம்தான் என்ன செய்யமுடியும்?

"அன்று என்னதான் நடந்தது என்று பின்னர் அறிந்து கொண்டீர்களா? சுலைமான் வினாவினார்.

"அண்டிரவு ஊர்காவல் படைய புலி சுட்டதாம் ஐயா"

"அப்போ உங்களுக்கு வெடிச் சத்தம் கேட்கலையா" யாரும் நடந்ததைச் சொல்லலையா" காயத்திரி வினாவினாள்.

"இல்ல அம்மா, அப்படியெண்டா நான் புள்ளய வகுப்புக்கு போகாட்டியிருக்கமாட்டன். எண்ட புள்ள ஒரு அப்பாவி அம்மா" என்றாள்.

நான் மௌனமாககினேன். பின் தொடர்ந்தேன்.

"உங்களுக்கு தயாபரன் மட்டுமா பிள்ளை"

"இல்ல ஐயா. எனக்கு மூண்டு ஆம்புள்ள புள்ளைகளும் ஒரு பொம்புள்ளப் புள்ளயும்"

"ஓ.. அப்படியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தயாபரன் மூத்தபுள்ள. குடும்பத்திற்கு வழிகாட்டுற புள்ள. அவங்கட அப்பா செத்துப்போன புறகு அவனத்தான் எல்லாத்துக்கும் நம்பினன் ஐயா"

"உங்கட வீட்டுக்காரருக்கு என்ன நடந்தது"

"அவரு நெஞ்சடைப்பால செத்துப்போனவரு. அவரு சாகக்குள்ள புள்ளயல் குஞ்சும் குருமானுமாக இருந்ததுகள். கயித்தப்பட்டுத்தான் இத்தன வயசிக்கும் வளத்தனான். படுபாவிகள் திண்டுத்தானுகள் ஐயா"

பெருமூச்சு அவளிடமிருந்து வெளியேறி அறை முழுதும் சூடாக்கியது.

"மற்ற இரண்டுபேரும்"

"ரெண்டாதவன் செத்துப்பொயித்தான் மற்றாக்கள் என்னோடதான் இருக்காங்க"

"இரண்டாவது பொடியனுக்கு... நான் முடிக்கல்ல அவள் தொடர்ந்தாள்.

"அவன் இயக்கத்தில இருந்தவன்"

"எந்த இயக்திலம்மா" காயத்திரி வினாவினாள்

"புலியிலதான் இருந்தவன்"

"எத்தனையாம் ஆண்டு சேர்ந்தவர்"

"எண்பத்தெட்டாமாண்டாக இருக்கனும். இந்தியன் ஆமி ஊரவிட்டுப்போன புறகு புலிகள் ஊருக்குள்ள வந்துத் தானுகள். எண்ட மகன் வோளயனுக்கு அப்ப பதினாறு வயதிருக்கும். மகாவித்தியாலய கிறவுண்டில விளையாடப் போறவன். அப்பதானொரு நாள் மெயின் றோட்டால பிக்கப்பில போன புலிப் பொடியன்னுகளப் பாத்து எங்களக் காப்பாத்த வந்த தெய்வங்களென்று விளையாடுற புள்ளயலுகல்விட்ட சென்னவனாம். அத பக்கத்து ஊட்டு குஞ்சு மாமா என்னட்ட வந்து சென்னவன். நான் வோள யனிட்ட கேட்டு ஏசினனான். அப்பா இல்லாம இத்தன வருசாம் வளத்துட்டது போறவன் வாறவன் இயக்கத்துக்குப் போறத்துக்கடா? உன்ட படிக்கிற வேலயப் பாக்கணும். இந்த இயக்கம் கியக்கத்திட கத இந்த ஊட்டிலயோ றோட்டிலோ இனி கத வரப்போடாது என உறுக்கின னான். அவன் தலையாட்டி, நான் சும்மா கதச்சனான் எண்டு சமாளிச்சுப்போட்டான். அண்டு ராவு சோத்தத் திண்டுத்துப் படுத்தவன் விடியவும் அவன்ட அசுமாத்தக் காணல்ல. எல்லா இடத்தையும் தேடியும் வோளயன் மாயமாய் பொய்த்தான். புறகுதான் இயக்கத்திட பிக்கப்பில தறவப்பக்கம் போனதாக வியலம் கிடச்சது"

"இயக்கத்திடம் போய்க் கேட்கவில்லையா"

"இயக்கத்திட்ட நாய் பேயாக அலஞ்சும் ஒரு நன்மையும் கிடைக்கல்ல. அவனுகள் உன்ட புள்ள இஞ்ச வரல ஆரும் ஆமி கீமி புடிச்சிருப்பானுகள் அங்க போய்ப் பாரு என அடியடி சூச்சு எண்டு திரத்திப்போட்டானுகள்"

"பிறகு உங்கட மகன் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லையா"



"ஒரு வருசத்துக்குப் புறகு கஞ்சிசூடி ஆத்திலையும், தறவையிலையும் நிக்கானாம் எண்டு கதவந்திச்சி. நான் போய்ப் பாக்கலாம். நான் தலய முழிகித்தன். நாசமாப் போனவன் எக்கேடு கெட்டுப் போகட்டும். இவனாள மத்தப் புள்ளயலுகளுக்கு எந்தப் பிரச்சினயும் வந்திடப் போடாதென்று அவன்ட கதயே கதக்கிறயில்ல ஐயா"

"பொலிஸ்சில மகனைக் காணல்ல என்று முறைப் பாடு கொடுத்தனீங்களா?" சுலைமான் வினாவினார்.

அவள் எதுவும் பேசவில்லை என்னை முறைச்சுப் பார்த்தவள் பின் காயத்திரியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்.

"நீங்க எந்த ஒலகத்தில இக்கிங்க. எத்தன ஆயிரக் கணக்கான புள்ளயல் இயக்கத்துக்கு ஓடியிருக்குகள் ஆரும் பொலிச்சிக்காரனிட்ட முறப்பாடு வக்கிறயில்ல. வச்சா அதோ கெதிதான். வந்து வந்து ஊட்ட உருட்டுவானுகள். அதோட அந்தக் குடும்பத்திற கத முடிஞ்சிடும். இதால அங்கால எட்டிப்பாக்கிறதுமில்ல"

"அப்படியா?"

அவட முகத்தில சோளம் பொரி வெடித்துக் கிளம்பியது.

"வோளாயன் எங்க படிச்சவன்"

"எங்கட ஊர் ஆர்.கே.எம். பள்ளியில"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தயாபரனுக்கும் வோளயனுக்கும் இடையில் எத்தனை வயது வித்தியாசம்"

"ஒரு வயதுதான் வித்தியாசம்"

"தயாபரனை வோளயன் என்று ஏதும் மாறாட்டமாக நடக்க வாய்ப்பிருக்குமா சேர்" என்றாள் காயத்திரி .

"ஓம் ஐயா, அப்படித்தான் ஊரில கதச்சவங்க. ரெட்டப்புள்ளயல் மாதிரித்தான் அவனுகள் ரெண்டுபேரும்"

"வோளயனுக்கு நடந்த சம்பவம் தயாபரனுக்கு முதலா? பிறகா?"

"தயாபரனுக்குப் புறகுதான் நடந்தது. அவன் தவளப்பாச்சல் சண்டையில மாவீரனானதாக கிளிநொச்சியில இருந்து கடிதம் அனுப்பியிருந்தவங்க"

"நீங்க அங்க போனனீங்களா?"

"இல்ல இல்ல நான் அங்க போகல்ல. என்னத்துக்குப் போவான். எண்ட குலத்த நாசப்படுத்திய பக்கம் போகலாமா?"

அவள் கண்களை மூடிக்கொண்டு எந்தப் பேச்சற்றும் இருந்தாள். பின்,

"வோளயன் புலி இயக்கத்துக்குப் போனபின் ரெலோக்காரன்களும் ஆமிக்காரனுகளும் என்ன படாத பாடு படுத்திப்போட்டானுகள். ஊட்ட வருவதும் அதட்டு வதும் அடித்து உதைப்பதும் அப்பப்பா....சொல்ல முடியாத சச்சரவுதான். ஊரில புலி வந்து ஆரையும் சுட்டா அல்லது சுரண்டினா நாங்கதான் சம்பல்"

"இதுக்கு ரெலோ காரணமாக இருக்குமா?"

"இருக்கா"

"எப்படிச் சொல்கிறீர்கள்"

"இது மாக்குடிக்குள் நடந்திருக்கு. அந்த நேரத்தில தமிழாக்கள் அதுக்குள்ள போகேலாதாம். ரெலோக்காரண்ட ஒப்பிசிம் ஆமிட கேம்பும் தள்ளியிருக்கு. எனக்கு வதூ ரிலும் ஊர்காவல் படையிலையும்தான் சந்தேகம்"

"வதுரா"

"ஓம் ஐயா ஊர்காவல் படைத் தலைவன். பலரத் திண்டவன்"

"பொலிசில வதுரப்பற்றிச் சொல்லலையா?"

"சென்னதுதான். அவங்க எண்ட கதய கணக் கெடுக்கல்ல"

ஏதோ தனக்குள் பேசிக்கொண்டாள். பின்

"முன்னையும் என்ட தம்பி கனகசூரியமும் மாக்குடி கடாபி கோட்டலில வச்சி தமிழ் முஸ்லிம் குழப்பத்தில இல்லத்துப்போனவன்.அந்தக்காலத்தில இருந்த சமாதானக் குழுவால கூட கண்டு பிடிக்க முடியல்ல"

மனோன்மணிக்கு நம்பிக்கையற்றுப்போன முகபாவம் எனக்குத்தென்பட்டது. விசாரணையிலிருந்து தன்னை விடுபட்டு வேறு திசையில் அங்கலாய்கத் தொடங்கினாள். காயத்திரியும், சுலைமானும் குறிப்புக்களை எழுதிக்கொண்டிருந்தார்கள்.

"அடிச்சிக்கொண்டுபோட்டு கையையும் காலையும் கல்லில புனைஞ்சி நடுக் கடலில போடுவதாகக் கேள்விப் பட்டன்"

அவள் ஏதோ உளறத்தொடங்கினாள்.பின் ஓவென அழத்தொடங்கினாள்.

காயத்திரி அவர் அருகில் சென்று முதுகைத் தடாவி சமாதானப்படுத்தினாள்.

"சரி அம்மா போதும் உங்களின் பதிலை நாங்கள் ஜனாதிபதிக்குச் சமர்பிப்போம் சரியா"

"எத்தின விசாரணைக்கு ஐயா ஏறி இறங்கியிருக்கன். இதுவர நீதி கிடைக்கல்ல. எல்லோரும் அநியாயித்துக்குத்தான் துன போறாங்க. நீங்கலாச்சும் உம்மையிட பக்கம் நில்லுங்க ஐயா. இத்தன வரிசமாக காணாமல் போன புள்ள இனி எங்க வரப்போறான். எனக்கு நடந்ததுபோல எந்தப் பொம் புள்ளக்கும் நடக்கப்போடா. அதுக்காகத்தான் நீதி கேட்டு இந்த வயதான காலத்திலயும் வந்திருக்கன்.

வளர்த்த நாய் முகத்தப் பார்ப்பதுபோல் எங்களப் பார்த்தா. பரிதாபம் என் தொண்டையை அடைத்தது. நான் அவ தள்ளாடித் தள்ளாடி செல்வதை வெறித்துப் பார்த்துக்கொண்டு அடுத்த விசாரணைக்கு தயாராக முன் கொலகொலவென இரண்டு லீற்றர் தண்ணீரை குடலுக்குள் தள்ளியபின்தான் பெருமூச்சு வந்தது.

-2 -

அந்தப் பெண் துடுக்காகப் பேசுவது மனோன் மணியின் சோகமூட்டத்தை விலத்தியது.

"நீங்க..."

"நான் சரஸ்வதி,ஆசிரியை"

"உங்கள் மகனா"

"இல்ல...இல்ல... என் தம்பி"

"அம்மாதானே விண்ணப்பித்திருக்கிறார்"

"ஓம்...அம்மா கடந்த மாதம் இறந்து போய்விட்டா அதனால்த்தான் நான் வந்திருக்கிறேன்"

"ஓகே...... அவரிட...

- பெயர்
- பிறந்ததிகதி
- அடையாள அட்டைஇலக்கம்
- முகவரி
- பாடசாலை
- தொழில்
- சம்பவம் நடந்த இடம்

* தர்மலிங்கம் சுந்தரலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 02.01.1963

* 637482526 V

* வேளாளர்தெரு, பதியூர்

* மகாவித்தியாலயம்

* இல்லை

* பதியூர்

"சரி சொல்லுங்க"

"தம்பி பிறப்பிலிருந்து ஒரு கால் முடம். இளம் பிள்ளை வாதம் வந்து நடந்தது. அவன் தன்ட எல்லா வேலை களையும் தன் பாட்டில் செய்வான். அவனுக்கு அது குறையாகத் தெரியல்ல. சகல வாகனங்களும் ஓட்டு வான். அவனுக்கும் எல்.ரீ.ரீ க்கும் எந்தத் தொடர்பும் இருக்கல்ல. ஆரம்பத்தில் 'புளொட்' இயக்கத்தின் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தான். எல்.ரீ.ரீ புளொட்டை தடை செய்தபின் அவன் எந்த இயக்கத்தோடும் தொடர்பாக இருக்கல்ல. பக்சவீர ஊருக்குள்ள வந்த பிறகுதான் இப்படி நடந்தது"

"பக்சவீரவா? யாரு?

"அவன்தான் எங்கட ஊர் ஆமிக்கேம் பெரியவன்"

அவள் பேச்சை நிறுத்தி கைக்குட்டையால் கண் களைத் துடைத்தா. அப்போதுதான் அவள் முகத்தைப் பார்த்தேன் கண்கள் குளமாக நிறைந்திருந்தன.

"சுந்தரலிங்கத்தை ஆமி பிடித்துப்போவதாக தகவல் கிடைத்தது. எங்கட வீட்டிலிருந்து ஆமிக்கேம் நானூறு மீற்றர்தான் இருக்கும். அம்மாவும் நானும் ஓடிப்போனோம். ரெலோக்காரனுகள்தான் ஆமி கேம்புக்கு முன்னால் நின்றானுகள். அவனுகளிடம் கேட்டோம். அவனுகள் அடியாக் குறையாக தூசனத்தால ஏசி திறத்தினானுகள். ஆமிக்காரனுகளிட்டையும் கேட்டும் ஒரு தகவலும் கிடைக்கல்ல. ஒவ்வொரு நாளும் கேம்படிக்குப் போய் மாலை நேரம் வீட்டுக்குப் யோய்க்கொண்டிருந்தம். நாலாவது நாள் மண்முனையில் நடந்த கண்ணிவெடியில் கிழவி ரவி என்ற ரெலோக்காரன் செத்துப்போனான். அன்று ஊர் முழுதும் துப்பாக்கி மழை பொழிந்தது. எல்லா இடமும் அழுகிற சத்தம் கேட்டது. அன்றுதான் கேம்பில பிடிச்சியிருந்த இருப்பத்தைந்து பேரையும் அடிச்சிக்கொலை செய்து டயரில் போட்டு எரித்ததாக அடுத்த நாள் கேள்விப்பட்டோம்"

"எப்படி அறிந்துகொண்டீர்கள்"

"கேம்பினுள் துப்பரவுத்தொழிலாளிமூலம்"

"பிறகு"

"நாங்க அடுத்த நாள் தம்பியைத் தேடிப்போகும் போது, கேம்பிற்குப் பக்கத்திலுள்ள வீ.சீ.கிறவூண்டில் எரிந்துகொண்டிருக்கும் டயர்களும், அணைந்துபோன டயர் தடங்களும், பொசிங்கிய நாற்றமும் மூக்கில் அறைந்தது"

"அன்று காலையில் கேம்புக்குப்போன நீங்கள் ஆமியிடம் விசாரிக்கவில்லையா?"

"விசாரிக்காம இருப்போமா சேர்? அவனுகள் இப்படியான ஆள் இல்லையென துரத்திவிட்டானுகள்"

"பின்னர் எப்படி அறிந்து கொண்டீர்கள்?

"ஒரு வருடத்திற்குப் பிறகு சுந்தரலிங்கத்தோட பிடிபட்டு ஜெயிலிலிருந்து விடுபட்டு வந்த யோகன் சொல்லித் தான் எல்லா விடயத்தையும் அறிந்து கொண்டோம்"

"என்ன சொன்னவர்"

"ரெலோ கிழவி ரவி இறந்தன்று ஒரு ஆமிக்காரனும் இறந்திருக்கிறான். அன்றிரவே கேம்புக்குள் இருந்த எல்லோரையும் வெளியில் எடுத்து அதில யோகனை ஒரு ஆமிக்காரன் காப்பாற்ற மற்ற ஆட்களை பக்கத்திலுள்ள காட்டுக்குள்ள கொண்டுபோனவங்களாம். கொஞ்ச நேரத் தால அலறல் சத்தங்கள் கேட்டதாம். அதற்குப் பிறகு அவன் அவங்களை கேம்புக்குள் காணலையாம்" என்றாள்.

அவள் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். இதற்கு மேல் அவளோடு விசாரிப்பதில் எந்தப் பயனுமில்லை. மற்ற இருவரையும் பார்த்தேன். எந்தக் கேள்வியும் அவர்களிடம் இருக்கவில்லை. அவளை அனுப்பிவிட்டு. உதவியாளரிடம் தண்ணிப் போத்தலை வாங்கி மள மள வெனப் பருகினேன். தலை வெடிக்கும் போலிருந்தது. எதிலும் மனம் பற்றற்றுச் சுழன்றது. யன்னலினூடாக தெருவைப்பார்த்து வெறித்துக் கொண்டிருந்தேன். இரு நாய்கள் கடிபட்டு தாவித்தாவி மேலெழுந்துகொண்டிருந்தன. நாயை விட மோசமான வாழ்வு எனக்குள்தான் சொல்லிக் கொள்ள முடிந்தது.

"சேர்" காயத்திரியின் குரல் என்னைத் தட்டி யெழுப்பியது மற்ற ஆட்களைக் கூப்பிடுவோமா?"

"ஓ.கே"

\- 3 -

"அம்மா... நீங்க கச்சிமுகமது பாத்திமா பேகமா"

"வோ"

"உங்கட மகனா காணாமல் போனவர்"

"வோ.."

"அவரிட....

\- பெயர்

\- பிறந்ததிகதி

\- அடையாள அட்டைஇலக்கம்

\- முகவரி

\- பாடசாலை

\- தொழில்

\- சம்பவம் நடந்த இடம்

* முகமட் காசிம்பாவா ஆதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கபுரடிவீதி, மாக்குடி-2
* 724459827 V
* 30.08.1972
* மத்திய மகாவித்தியாலயம்
* சுயதொழில்
* துறையூர் சந்தி

"பிறகு சொல்லுங்க"

"எங்கட கடசிப் புள்ள இவருதான். எனக்கு இவரு மட்டும்தான் ஆம்புள்ள புள்ள. எங்கட நிலபுலம் கரவாகு வெட்டையில இருக்கிறத்தால வயலுக்குப் போறத்துக்குத் தான் எண்ட தம்பி, மகன், சாச்சா கபூர் மூணுபேரும் வாகனத்துல போகக்குள்ள தமிழ்ச் சனங்கள் தொப்பியக் கழட்டிட்டுப் போமனே எண்டு செல்லியிருக்குதுகள். அவக கேட்கலயாம். மாக்கத்தில பற்று அவகளுக்கு.துறையூர் சந்தியிலதான் நாசமாப் போனவனுகள் போயிட்டிருந்த வேன புடிச்சி எண்ட தம்பியயும், மகனயும் இறக்கியிரிக்கானுகள். சாச்சா பின்னுக்கால... கத்திக் குளறிப் போயிருக்காக. அவரத் துரத்திப் போட்டு கொண்டு போயிருக்கானுகள்"

"அப்போ இரு இனங்களுக்கிடையே பிரச்சினை இருந்த காலமா?"

"இல்ல... குழப்பம் வரும் கொஞ்ச நாளயால செரியாகிடும்"

"அன்று அப்ப"

"அண்டைக்கு முதல் நாள் தமிழ் புள்ளயல ரெண்டுபேர இவக கடத்தினயாம். இந்தக் கோதாரியெங்க ளுக்குத் தெரியா, தெரிஞ்சி இந்த நாசமத்தது நடத்திரிக்காது வாப்பா"

"பொலிசில என்றி வைக்கலையா" சுலைமான் வினாவினார்...

"பொலிசில போய் சென்னனான். அவக தேடியும் எந்த முடிவும் கிடைக்கல்ல கா"

"பிறகு என்ன நடந்தது?"

"எங்கட ஆக்கள் யாழ்ப்பாணத்தில கடவச்சியிருந்த பழக்கத்தில அங்கிருந்த எல்.ரீ.ரீ ஆக்களிட்ட விசாரிச்சி... தம்பியிட மய்யத்த நாலு நாளக்குப் புறகு எடுத்தம். புறகு ஒல்லிக்குளத்துப் பள்ளியில குளிப்பாட்டி கபன் உடுப்பாட்டி ஊட்ட கொண்டந்து பள்ளியால தொழவிச்சி அடக்கம் செய்த ஐயா! அவகட முகங்களைக்கூட பாக்கக் கிடக்கல ஐயா! ஊரே திரண்டு வந்திச்சி மய்யத்தப் பாக்க...அந்தப் பாக்கியத்த குடுத்து வைக்கல ஐயா"

"யாழ்பாணத்து எல்.ரீ.ரீ இடம் உங்கள் மகனைப் பற்றிக் கேட்டிருக்கலாமே" என்று கேட்டேன்.

"விசாரிச்சம் ஐயா, அவக இந்த வேலயச் செய்யலயாம். வேறேதோ உறண்டல் இயக்கம்தானாம் சென்ச வேலயாம் எண்டு சென்னாக. நாசாமாப் போனவனுகள் எண்ட குலத்த நாசமாக்கிப்போட்டானுகள் ஐயா"

"பொலிசுக்குத் தெரியுமா? தம்பியிட மையத்துக் கிடைத்தது"

"தெரியும் அவகளும் வந்து விசாரிச்சாங்க... எண்ட புள்ள இதுவரை என்ன ஆனானோ தெரியல்ல. இந்தக் கொடுமக்கிப் புறகு எங்கட சொத்தெல்லாம் துளைஞ்சி பெய்த்து... நாங்க நடுறோட்டில நிக்கிறம் ஐயா. எண்ட அல்லா நீதான் இந்த நாசகாரக்களுக்கு ஒன்ட /ஹகும இறக்கோணும்" என்றா.

மீண்டும் தொடர்ந்தாள்.

"ஐயா! இதுவரை எந்த நியாயமும் கிடைக்கல்ல பஸ் ஏறி கார் ஏறிப் போய்த்திரிஞ்சி எந்தப் பிரயோசனமும் இதுவரைக்கிமில்ல. இப்ப எங்கிட விதானையார் உடல்ல அதான் வந்த. இந்த முறயாவது நீதி கிடக்கனும் இப்படியான அநியாயம் நெக்கு வந்த போல ஒத்தருக்கும் இனிமே வரப்படா"

"நிட்சயமாக... உங்கள் விடயத்தை உரிய இடத்தில் தெரிவிப்போம். உண்மை ஒரு போதும் அழியாது" என்றேன்.

பாத்திமா ராத்தாவிடம் நம்பிக்கை ஒளியை காண முடிந்தது. புன் புறுவலும் முளைத்தது.

"நீங்க... நல்லாயிருக்கனும் மனே... எண்ட அல்லா சுவனத்தில உங்களைக்காப்பாரு..."

நடக்க முடியாத அந்த உருவம் மண்டபத்தைத் தாண்டி அசைந்து அசைந்து போனது.

என் உடலிலும் உணர்விலும் நான் மாற்றத்தை உணர்ந்து கொண்டேன். மனம் எதிலும் பற்றற்று இருந்தது. கொஞ்சநேரம் எதுவும் அவர்களுடன் பேசவில்லை. காயத்திரியும், சுலைமானும் விசாரணைக் குறிப்புக்களை சீர்செய்துகொண்டிருந்தார்கள். நான் குறிப்பேட்டைப் பார்த்தேன். முகங்கள் முகங்களாய் நடந்துபோகின்றன. மைபோட்டுப் பார்க்கும் நாட்கள் என்னுள் வளரத்தான் செய்தது. வெற்றிலையில் கருநாகத்திலிருந்து எடுக்கப்பட்ட மையினைத் தடாவி தொலைந்து போனவர்களைக் கண்டடைய வேண்டும். என் மண்டையில் ஓங்கிக் குத்தி ஓய்தலற்றுப்போனது ஞாபக அலைகள். அறைக்குள் குறுக்கு மறுக்கா நடந்து என்னை ஆசுவாசப்படுத்த முயற் சித்தேன். அதன்பின் அங்கே என்னால் இருக்க முடிய வில்லை. தொலைபேசியை எடுத்தேன். தவறவிடப்பட்ட இரு அழைப்புக்கள் இருந்தன. ஒன்று என் மனைவியினது மற்றது ஆணைக்குழுவின் தவிசாளரது.

மனைவிக்கு அழைத்து நிலைமையைச் சொன்னேன். தவிசாளரின் தொலைபேசி 'என்கேச்சாக' இருந்தது. இரவைக்கு எடுத்துப் பேசலாம் என போனை மேசையில் வைத்து கதிரையில் அமர்ந்து கொண்டேன்.காயத்திரியும், சுலைமானும் தங்கள் தங்கள் அவதானத்தை என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தார்கள். கொஞ்சநேரம் அதை எடைபோட்டுப் பார்த்தேன். இரண்டு கிலோவைத் தாண்டும் போலிருந்தன.

"சரி... உங்கள் அவதானிப்பிலிருந்து நான் இறுதி அறிக்கையை தயார்செய்கின்றேன்..." என்று விடைபெற்று வீடு வந்தடைய இரவொன்று கழன்று விழுந்து கொண்டிருந்தது.

*

ஐந்தாறு நாட்களாக என்னை வாட்டென வாட்டியது. தாள்களை எழுதி எழுதி கை ஒரு பக்கம் தூக்கமுடியாமல் வலித்தது. கழிவுக் கூடையும் நிரம்பிக் கிடந்தது. மர்மங்களை அவிழ்ப்பது எப்படி? நான் பதிவு செய்யும் ஒலி நாடாவல்ல. உறவுகளுக்கு... பாசங்களுக்கு....நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். நானும் ஒரு பாவியாக முடியாது. என்னுடைய அறிக்கை துளாவி ஒரு ஒளிக் கீற்றையாவது காட்ட வேண்டும். மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டேன்.

தவிசாளர்,

காணாமல் போனவர்களைக்

கண்டடையும் ஆணைக்குழு

கொழும்பு

உண்மையை கண்டடைவதற்கான அறிக்கை

..............................................

மேற்படி விசாரணையிலிருந்து உண்மையைக் கண்டடைவது எவ்வளவு சாத்தியப்பாடு என்பது மிகவும் சிக்கல் நிறைந்தே காணப்படுகின்றது. இருந்தும் நாங்கள் எதிர்கொண்ட மூன்று சம்பவங்களிலும் இரண்டு விசாரணைகள் சிக்கலானது. வண்ணாத்துறை வீதி, பதியூரைச் சேர்ந்த சோமசுந்தரம் தயாபரன் மற்றும் கபூரடி, மாக்குடியூரைச் சேர்ந்த முகமட் காசிம்பாவா ஆதம் என்பவர்களுடையவை.

சோமசுந்தரம் தயாபரன் சம்பவதினம் அன்று காலை 5.30 மணிக்கு வீட்டைவிட்டுப் பிரேத்தியக வகுப்புக்குச் சென்றுள்ளார். அதற்குப்பின் அவர் வீடுவந்தடையவில்லை. யாரும் இவரைக் காணவில்லை. மீன் வியாபாரி ஒருவர் மாத்திரம் ஒருவர் மாக்குடிக்குள்ளால் சென்றதை அவதானித்துள்ளார். இந்த அவதானிப்பு மாத்திரமே உள்ளபோது தயாபரன்தான் என்பதற்கு போதியளவு சாட்சியில்லை. இருந்தும் அவரின் வயதையொத்த தமிழ் இளைஞன் என்பது விசாரணையிலிருந்து அறியக் கிடக்கிறது. எனவே அக்காலத்தில் மாக்குடியில் ஊர் காவல்படையின் வதூர் உயிரோடு மன்னாரில் வாழ்வதாலும், மாக்குடி பொலிஸ் நிலைய ஓ.ஐ.சி.யு உயிரோடு இருப்பதனாலும் இவர்கள் மேலான விசாரணை தயாபரன் பற்றிய உண்மைத் தன்மையை கண்டடைவதற்கான வாய்ப்புள்ளது.

அதுபோல் முகமட் காசிம்பாவா ஆதம். தமிழ் ஆயுதக்குழு சம்பத்தப்பட்டிருப்பது விசாரணை எமக்கு மெய்ப்பிக்கிறது. நேரடிச்சாட்சியான கபூர் இருப்பதனால் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்திருப்பவர்களைத் துழாவுகின்ற போது கண்டடைய வாய்ப்புள்ளது. இதில் அடையாளப் படுத்தக்கூடிய ஒரு நபர் கிடைக்காதது. மிகச் சிக்கலைத் தந்தாலும் இறைவனின் கிருபையும் துணை நின்றால் கண்டடையலாம்...

மேலும் காணாமல்போன தர்மலிங்கம் சுந்தரலிங்கத்தைக் கைதுசெய்தது இராணுவத்தினரே என்பது கண்டறிய முடிகின்றது. இவரோடு முகாமிலிருந்த ஒரே யொரு சாட்சி யோகன் உயிரோடு இருப்பதனால் அவரையும், முகாம் பொறுப்பாளர் பக்சவீர, ரெலோ இயக்க உறுப்பினர்கள் விசாரிப்பை முன்னெடுக்கும் சமயம் சுந்தரலிங்கம் பற்றிய உண்மை வெளிச்சத்திற்கு வரும்.

எனது மனச்சாட்சியின்படி சில ஊகிப்புக்கள் எனக்குள் தோன்றினாலும் சட்டச்சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதால் என்னால் வெளிப்படுத்த முடியவில்லை. இருந்தும், மூன்று குடும்பங்களும் தங்களின் பிள்ளைகளின் காணாமல் ஆக்கப்பட்ட இந்த அநியாயத்திற்கு எதிராக நீதி கிடைக்கவேண்டும் என்பதோடு, இதுபோன்ற சம்பவங்கள் வேறு குடும்பத்திற்கு நடைபெறக்கூடாது என்ற வாஞ்சையையும் முன்வைத்துள்ளனர். அத்தோடு இவ்வாறான நாசகாரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை கிடைக்கும் பட்சத்தில் இவ்வாறு நடை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகுமென நம்புகிறார்கள்.

எனவே இந்தத் தார்மீகத்திற்காவது இந்த ஆணைக்குழு இந்தக் கொடூரர்களைக் கண்டடைந்து உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தொடர்ச்சியாக இயங்கி சட்ட ஒழுங்கு இம்மண்ணில் பூக்க ஆவன செய்யவேண்டுமென்று அறிக்கை செய்கின்றேன்.

* ஆவணங்களும், விசாரணைப் பிரதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

*

அறிக்கையை எழுதித் தபாலிலிட்டபொழுதுதான் என்னில் நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது.

*

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ட்டின் விக்கிரமசிங்க:
## இலங்கையின் பின்காலனிய இலக்கியக் குரல்

-ஜிஃப்ரி ஹாசன்



ஓவியம்: றஷ்மி

இலங்கையின் சிங்கள மற்றும் ஆங்கில இலக்கியங்களில் பின்காலனியப் படைப்புகள் வெளிவந்திருப்பது போல் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் காலனியப் பதிவுகள் பெரிதாக நிகழவில்லை. சிங்களத்தில் மார்ட்டின் விக்கிரமசிங்கவின் படைப்புகளில் குறிப்பிடத்தக்களவு இலங்கை மக்களின் காலனித்துவ கால வாழ்க்கைக் கோலங்கள் மேற்கின் அரசியல், சமூகப் பண்பாட்டு, அறிவியல் பின்புலத்தில் பதிவாகியுள்ளன. அவரது கம்பெரலிய, விராகய, மடொல் தூவ போன்ற நாவல்களிலும், சிறுகதைகளிலும் சிங்கள மக்களின் காலனித்துவ வாழ்வியல் பதிவாகியிருக்கின்றன. மேற்கின் காலனித்துவ சக்திகள் இலங்யைருக்களித்த மேற்குப் பண்பாடு மற்றும் அறிவுசார்ந்த வாழ்க்கை மீது அபரிமிதமான நம்பிக்கையோ அல்லது அபரிமித வெறுப்போ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத நடுவாந்திரப் பார்வையை மார்ட்டின் விக்கிரமசிங்க வின் படைப்புகள் முன்வைக்கின்றன. ஒரு படைப்பாளியாக மார்ட்டின் விக்கிரமசிங்கவின் நோக்கும் பார்வையும் இலங்கையின் காலனித்துவ வாழ்க்கைமுறை மீது மிக ஆழமாகப் பதிந்திருப்பதை அவரது படைப்புகளில் காணலாம். அவரது பெரும்பாலான படைப்புகளில் காலனித்துவம் நமக்களித்த வாழ்க்கை முறை தவிர்க்க முடியாது திரும்ப வந்து கொண்டே இருக்கிறது.

பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இலங்கை இருந்த காலம் அவருடையது. அப்போது இலங்கைப் புலமைத்துவ வட்டாரம் இரு தரப்புகளாகப் பிரிந்து நின்றது. உள்நாட்டு அறிவு, பண்பாடுகளைப் புறக்கணித்து மேற்கத்தேய அறிவு, பண்பாட்டைத் தீவிரமாக ஆதரித்த அணியினர். மற்றத் தரப்பார் உள்நாட்டு மரபுகள், பௌத்த மதம், பண்பாடு போன்றவற்றின் மீதான தீவிர பற்றுக் கொண்ட அணியினர். மார்ட்டின் விக்ரமசிங்க இந்த இரு போக்குகளுக்குமிடையே ஒரு நடுவாந்திர நிலையில் இருந்தார். இவரது கம்பெரலிய, விராகய, மடொல் தூவ போன்ற நாவல்களும், விநோஸ்வாதய, கனத்த, வஹல்லு போன்ற கதைகளும் தீவிர மேற்கத்தையே கோட்பாடுக ளுக்கும், வாழ்க்கையொழுங்குகளுக்கும்- உள்நாட்டு பௌத்த கோட்பாட்டுக்கும் வாழ்க்கையொழுங்கு களுக்குமிடையிலான இடைவெளிகளை நமக்கு அடையாளம் காட்டின. தவிர இந்த இரு தரப்பாருக்கு மிடையிலான உரையாடல்களையும் ஏற்படுத்த முயன்றன. மரபுகளை பண்பாட்டை தீவிரமாகப் பின்பற்றும் கிராமிய மற்றும் மத்தியதர வர்க்க மக்களிடம் மேற்கின் நவீன அறிவு குறித்த ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையிலான படைப்புகளை மத்தியதர வர்க்கத்தினரையே முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டு உருவாக்கினார். ஆனால் முழுமையாக மரபுகளைக் கைவிட்ட ஒரு மேற்குமயமான சமூகமாக இலங்கையர்களை உருவாக்குவது அவரது எதிர்பார்ப்பாக இருக்கவில்லை என்பதற்கு அவரது புனைவுகளே சாட்சியாக இருக்கின்றன.

அவர் தனது புனைவுலகின் மையமாக இலங்கைக் கிராமியப் பண்பாட்டையும், கிராமிய வாழ்க்கை முறை யையுமே முன்னிறுத்தினார். தனது நாவல் ஒன்றுக்கு கம்பெரலிய (கிராமப்பிறழ்வு) என்றே தலைப்பிட்டிருந்தார். அந்தளவு அவரது புனைவுகள் கிராமிய வாழ்க்கையை, பண்பாட்டைப் பேசுபவையாக இருந்தன. அவரது காலப் பகுதியில் சிங்கள இலக்கியம் பொழுதுபோக்கான ஜனரஞ்சக இலக்கியமாகவே இருந்தது. பெரும்பாலும் அவை நகர்ப்புற மேல்தட்டு, மத்தியதர மக்களின் வாழ்க்கையை ரொமாண்டிசத் தன்மையுடன் முன்வைத்தன. அந்தப் போக்கை மறுத்து இலக்கியம் மனித வாழ்க்கையின் பல்வேறு பக்கங்களைப் பதிவு செய்வதாகவும், அதன் சாரத்தைக் கண்டடைவதாகவுமே இருக்க வேண்டும் என்பதை நிறுவிய மகத்தான சிங்கள இலக்கிய கலைஞன்



மார்டின் விக்ரமசிங்கதான். அவரது கம்பெரலியதான் சிங்கள இலக்கியத்தில் முதன்முதலில் நாவல் இலக்கியத்தை அதன் முழுமையான வடிவத்தில் தொடக்கி வைத்தது என்றும் மதிப்பிடப்படுகிறது.

கம்பெரலிய சிங்கள சமூகத்தில் சிதைந்து வரும் நிலமானிய வகுப்புக்கும், எழுச்சியடைந்து வரும் மத்திய வகுப்பாருக்குமிடையிலான உறவைப் பேசும் நாவலாகும். தென்னிலங்கையில் கடற்கரையை அண்டியுள்ள கொக்கல என்ற கிராமத்தில் நிகழும் கதை. இரிகல் தேவலாய எனும் கற்குன்று அங்குள்ளது. அதனை இரிகல் தேவலாய எனும் வழிபாட்டிடமாக அந்த மக்கள் மதித்து வழிபடும் தொல் பண்பாட்டு மரபை பதிவுசெய்கிறது. அக்கல் தெய்வீக சக்தி வாய்ந்தது என நம்பும் அந்த மக்களின் ஆன்மீகத்தோடு கல் கலந்திருப்பதை சித்திரிக்கிறார். அந்த நம்பிக்கை காலனித்துவம் இங்கே திணித்த மேற்குப் பண்பாட்டு ஆதிக்கத்துக்கு எதிரானதாகும். மக்கள் தங்கள் தேவைகளை அந்தக் கல்லையே முன்னிறுத்திப் பிரார்த்தனை புரிவதிலிருந்து அந்தக்கல்லே அவர்களின் ஆன்மீக வாழ்வின் குறிகாட்டியாகத் தெரிகிறது. அந்த மக்களின் தேவைகள், சாபம், கோரிக்கைகள் எல்லாம் இரிகல கல் முன்னால் பரந்து கிடந்தன.

நாவல் நெடுகிலும் கிராமிய சிங்கள பண்பாட்டு வாழ்க்கை முறையையே மார்ட்டின் காட்டிக்கொண்டு வருகிறார். "சிறுமட்பாண்டங்களில் சமைத்தல்" ஒரு மரபாக அந்த மக்களின் வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது. குடும்ப உறுப்பினர்கள் வருடா வருடம் தங்கள் மனையில் கூடி இந்த சம்பிரதாயத்தை நிறைவேற்றுவதை நாவலுக்குள் சித்தரிக்கிறார் மார்ட்டின். புதுவருட கொண்டாட்டம், பஞ்சி எனும் கிராமிய விளையாட்டு போன்ற கிராமிய வாழ்க்கைமுறையை கொண்டுவருகிறார்.

நாவலில் நந்தாவுக்கும் பியலுக்குமிடையில் நிகழும் உரையாடல் ஆங்கிலத்தை ஆராதிக்கும் ஒரு வகுப்புக்கும், அதை மறுக்கும் ஒரு வகுப்புக்குமிடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்களையும், இடைவெளிகளையும் காட்டுகிறது. பியல் ஆங்கிலம் கற்பதையும் அதன் தேவையையும் வலியுறுத்தும் அதேவேளை நந்தா அதன் மீது அவளவு நாட்டமற்றிருக்கிறாள். அவளது அம்மாவும் கையொப்பம் வைக்கவும், தந்தி வாசிக்கவும் ஆங்கிலம் கற்றிருந்தால் போதும் என்கிறாள். பியலால் இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் எதிர்ப்பாகச் சிரிக்கிறான். ஊரிலுள்ள அனைத்து இளைஞர்களும் ஆங்கிலத்தில் ஒப்பமிடக் கற்றுக்கொண்டதை நந்தா ஞாபகிக்கிறார்.


"சிங்களத்தில் கையெப்பமிடுவது மதிப்பற்ற செயலா?" என நந்தா கேட்பது காலனித்துவம் கட்டமைத்த ஆங்கில மோகத்தின் மீதான கீழ்தட்டு மக்களின் ஆதங்கமாகும். நந்தாவின் இந்தக் குரல் மிக முக்கிய பின்காலனியக் குரலாகும்.

சமூக அமைப்பில் ஊறியிருந்த சாதியத்தையும், குலபேதத்தையும் மார்ட்டின் பதிவு செய்கிறார். பியல் மீது நந்தாவுக்கு ஒரு இளக்காரமான பார்வை எப்போதும் இருக்கிறது. முகாந்திரமான அவளது தந்தையிடமும் கூட பியல் குறித்து அத்தகையதொரு இளக்காரமான பார்வையே இருக்கிறது. இது காலனித்துவ ஆராதனையும் எதிர்ப்பும் பதிவாகும் தருணமாகும்.

காலனித்துவம் அறிமுகம் செய்த சூது விளையாட்டு ஒரு குற்றச் செயலாக கிராமிய மனநிலையில் பதிந்திருப்பதைக் காட்டுகிறார். சோமா என்கிற கிராமியப் பெண்ணுக்கும் நகரத்துக்குச் சென்று விடுதியில் தங்கிப் படித்துவிட்டு வந்த திஸ்ஸவுக்குமிடையிலான உரையாடல் மூலம் இது வெளிப்படுகிறது. ஆனால் கிராம மட்டத்தில் விளையாடப்படும் பஞ்சியும் அதை ஒத்ததுதான் என்கிறான் திஸ்ஸ.

முகாந்திரத்தின் வீட்டில் சாதா எண்ணெய் விளக்கை வாயால் ஊதி நூற்பதை எப்போதும் செய்யவேண்டாம் என முகாந்திரம் அம்மையார் தடுப்பார். அது கிராமிய நம்பிக்கைகளின் படியான ஒரு தடையாகும். இத்தகைய உள்நாட்டு மரபுகள், நம்பிக்கைளை எல்லாம் எப்படி காலனித்துவ அறிவு மூடநம்பிக்கை என பகடி பண்ணியது என்ற புரிதலை நோக்கி நாவலின் இந்த இடம் வாசகனை அழைத்துச்செல்கிறது.

பின்காலனியக் கூறுகளை அதிகம் வெளிப்படுத்தும் அவரது மற்றொரு நாவல் 'மடொல் தூவ'. நாவலில் சிறுவர்களின் விசித்திர விளையாட்டுகளும் எதிர்பார்ப்புகளும், வாழ்வியலும் பேசப்படும் அதேயளவு ஒரு காலகட்ட சிங்கள கிராமப்புற மத்திய வகுப்பாரினதும், அடித்தட்டு மக்களினதும் சமூக வாழ்க்கைக் கோலங்களும் அசல் காட்சிகளாக விரிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, உபாலியின் சின்னம்மா அப்பா கொடுக்கும் பணத்திலிருந்து சேமிப்பது, அடகுப் பொருட்கள் வாங்குவது, வட்டிக்கு விடுவது போன்ற கிராமியப் வீட்டுப் பொருளாதார முயற்சிகள் நாவலில் மேலோட்டமாகச் சித்தரிக்கப்படுகின்றன.



இன்னொரு புறம் நாவலின் பெரும்பாலான இடங்களில் அப்போதைய காலனிய இலங்கையில் நிலவி வந்த கல்வி முறை தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகிறது.

இலங்கையில் காலனித்துவத்தின் விளைவான மேற்குப் பண்பாடு இலங்கைப் பண்பாடுகளின் இருப்பை எப்படிச் சிதைக்க முற்பட்டது என்பதையும் அறிந்துகொள்வதற்கான சாத்தியங்களை இந்நாவல் கொண்டிருக்கிறது. சின்னக் கமரால ஊடாக மடொல் தீவை ஒரு முறை காலியைச் சேர்ந்த சட்டத்தரணி பார்வையிட வருகிறார். ஓய்வுநேரச் சுற்றுலாவாக தனது மனைவி பிள்ளைகளுடன் அங்கு வரும் அவர் உபாலி, ஜின்னா ஆகியோருடன் உறவை ஏற்படுத்துகிறார். உபாலியும் அவர்களை நன்றாகக் கவனிக்கிறான். சட்டத்தரணியின் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள். உபாலி அதனை வெறும் ஏட்டுக் கல்வி என்று கருதி நிராகரித்தவன். அவன் நடைமுறை அறிவைக் கொண்டு உற்பத்தி செய்வதிலும், உடல் உழைப்பு மீதும் நம்பிக்கை கொண்டவன். இது காலனிய கால இலங்கையின் அரசியல் சமூகப் பொருளாதார சூழல் மீதான மிகத்தெளிவான நுண் அவதானங்களிலிருந்து உருவான பகுதிகளாகும்.

சட்டத்தரணியின் பிள்ளைகள் காலனியமயப்படுத்தலின் அசல் உருவங்களாக வருகின்றனர். அவர்கள் ஆங்கில மொழி கற்றவர்கள். ஆங்கிலப் பண்பாட்டைத் தழுவி நிற்பவர்கள். பௌத்த பண்பாட்டு மரபு குறித்து அறிதலற்றவர்கள். இத்தகையதொரு தலைமுறை இலங்கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனிய அரசினால் உருவாக்கப்பட்டது. அந்த அரசியல் மிக வெளிப்படையாகவே மார்ட்டினால் நாவலில் சித்தரிக்கப்படுகிறது. மடொல் தீவில் வைத்து சட்டத்தரணியின் பிள்ளைகள் உபாலியிடம் ஆங்கிலப் புத்தகத்தைக் கொடுக்கின்றனர். உபாலி தனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது என அதனை மறுக்கிறான். அடுத்த முறை வரும்போது எளிதாகப் படித்துப் புரியும்படியான ஆங்கிலப் புத்தகங்களை அவனுக்காக கொண்டு வருவதாக அந்தப் பிள்ளைகள் கூறுகின்றனர். இது நாவலில் காலனியம் உருப் போட்ட ஒரு இளந்தலைமுறையின் மனநிலை எடுத்துக்காட்டப்படும் தருணமாக இருக்கிறது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் காலியில் வைத்து உபாலி அவர்களைச் சந்திக்கும்போது சட்டத்தரணியின் மகன் உபாலியுடன் கைலாகு செய்வதற்காக கையை நீட்டுகிறான். அவன் எதற்காக கையை நீட்டுகிறான் என்பதை உபாலி அறிந்திருக்கவில்லை.


"ஆங்கிலப் பழக்க வழக்கம் தெரியாவிட்டால் என்ன. அந்தப் பிள்ளை எப்போதும் குழப்பமடையமாட்டான். பெரிய கெட்டிக்காரன்" என சின்னக்கமரால உபாலியைக் குறித்துச் சொல்வது ஆங்கிலேய காலனிய மயக்கத்திலிருப்பவர்களை நோக்கி உள்ளூர் அறிவின் ஆழத்தைச் சொல்லும் வார்த்தைகளாகும். அதேநேரம் காலனிய வழிபாட்டு மனநிலையிலிருப்பவர்கள் தொடர்ந்தும் அதன் மீது சாய்வுகொள்வதையே சட்டத்தரணியின் சின்ன மகளின் வார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன.

"ஆங்கிலப் பழக்க வழக்கங்களைப் படிப்பது இலகு. நாங்கள் மடொல்தீவுக்கு வரும் போது கரண்டி, முற்கரண்டி, கத்தி போன்றவைகளை பாவிக்கும் விதத்தை கினிவெல்லவுக்கு கற்றுத் தருவோம்" என அவள் உபாலியைப் பார்த்து பரவசமாகச் சொல்கிறாள்.

மார்ட்டின் விக்ரமசிங்க தன் சிறுகதைகளிலும் கூட காலனித்துவத்தின் விளைவாக ஏற்பட்ட ஆங்கிலேய வாழ்க்கை முறை குறித்த பதிவுகளை முன்வைக்கிறார். காலனித்துவத்தின் விளைவாக உருவான இலங்கையின் மேல்தட்டு வகுப்பாருக்கும், கீழ்தட்டு வகுப்பாருக்குமிடையிலான அக முரண்பாட்டையும் புறவய முரண்களையும் வெளிப்படையாகவும் சிலவேளைகளில் பூடகமாகவும் கதைகள் பேசுகின்றன. அவரது விநோதாஸ்வாதய எனும் கதை இணையவே முடியாத மேல்தட்டினருக்கும்- கீழ் தட்டினருக்குமிடையிலான இடைவெளிகளைப் பற்றிப் பேசுகிறது. மேற்கத்தேய வாழ்க்கை முறையையும், சமூக உளவியலையும் கொண்ட உள்நாட்டு மேல் வகுப்பினர், கீழ் தட்டினர் குறித்துக் கொண்டிருக்கும் அகரீதியான விலகலையும், புறவய ஒதுக்கலையும் கடலில் நடக்கும் ஒரு விநோத விளையாட்டினூடே முன்வைக்கிறார். சிங்களம் எழுத வாசிக்கத் தெரியாத ஒரு நகர்ப்புற வகுப்பு சிங்கள சமூகத்தில் உருவாகி இருந்ததை காலனித்துவத்தின் மிக பயங்கரமான விளைவாக காணும் மார்டின் இக்கதையை சிங்கள மொழி கற்பிக்கும் ஒரு ஆசிரியரின் பார்வையிலேயே நகர்த்துகிறார். காலனித்துவ ஆட்சியாளர்கள் சிங்கள, மொழி மற்றும் பண்பாட்டு மரபுகள் மீது மேற்கொண்ட புறக்கணிப்புகள், கீழ்மைப்படுத்தல்கள்தான் காலனிய மற்றும் பின்காலனிய இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் தோன்றுவதற்கு அடித்தளமிட்டது என்கிற வரலாற்றுப் புரிதலை நோக்கி வாசகன் வந்தடைகிறான். மேற்கத்தேய வாழ்க்கைமுறையையும், பண்பாட்டையும் தழுவிக் கொண்ட உள்நாட்டு மேல் வகுப்பினர் தங்கள் மொழியை, மரபுகளைக்கூடத் துறந்து மேற்கத்தேய வாழ்க்கை முறையை சரிகாணவும் மேலும் தழுவிக்கொள்ளவும் முனைந்த போக்கு சிங்கள சமூகத்தில் வலுவடைந்து வந்ததை அவர் தொடர்ந்தும் தன் கதைகளில் பதிவுசெய்தார். இக்கதையில் வரும் மேற்கைத் தழுவிக்கொண்ட ஒரு சிங்களப் பெண் தன் உறவினரின் வீட்டு விருந்தில் முள்ளுக்கரண்டியாலேயே தான் சாப்பிட முடியும் என்கிறாள். "கைகளால் சாப்பிட எனக்கு விருப்பமில்லை" என்கிறாள்.

"ஏன் நமது ஆட்சியாளர் சிங்கள வாழ்க்கை முறையையும், சிங்கள மொழியையும் ஏற்றுக்கொண்டு விட்டனர்தானே?" என ஒருவர் சொல்கிறார். இந்த உரையாடல் இந்த இருவகுப்பாருக்குமிடையில் விழுந்த திரையையும், விலகலையும் வெளிப்படையாகப் பேசும் தருணமாக இருக்கிறது.

மார்ட்டின் விக்கிரமசிங்கவின் ஏனைய படைப்புகளிலும் கூட சிங்கள மக்கள் மத்தியில் காலனித்துவம் ஏற்படுத்திய வாழ்க்கை கோலங்களும், மாற்றங்களும் அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. சில இடங்களில் அவரது பார்வை மேற்கின் நிலைப்பாடுகளுக்குச் சார்பானதாகவே இருந்திருக்கிறது. இலங்கையின் சுதேச பண்பாட்டுக்கும், அறிவுக்கும் பதிலீடாக மேற்கின் பண்பாட்டையும், அறிவையும் வைக்கும் மனநிலைதான் அவரிடம் மேலோங்கி இருந்தது. ஆபிரிக்க பின்காலனியப் படைப்பாளிகளிடம் வெளிப்பட்ட காலனித்துவத் திமிருக்கெதிரான கலகக் குரல் மார்ட்டின் விக்கிரமசிங்கவிடம் வெளிப்படவில்லை என்பது மிகத் தெளிவானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்பற்ற எல்லைகளின் உருவாக்கம்

இலக்கியத்தில் கறுப்பினப் பெண்களின் மரபு விரிவானது, மாறுபட்டது, சிக்கலானது, அழகானது. எந்தவொரு கலாச்சார மரபையும் போலவே, கறுப்பினப் பெண்களின் எழுத்து அதன் வரையறைகள், பொதுவான தன்மைகள், உத்வேகம் ஆகியவை காலப்போக்கில் மாறியுள்ளன. அதோடு ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து, அசலான, புதுமையான ஒருங்கிணைப்பாகவும் தனித்து விளங்குகின்றன.

பல ஆண்டுகளாக, கறுப்பினப் பெண்கள் அமெரிக்க இலக்கியத்தின் முன்னணியில் தங்களுக்கு உரிய இடத்தைப் பிடித்துள்ளனர். ஆர்வத்தைத் தூண்டக் கூடிய பல கறுப்பினப் பெண் எழுத்தாளர்கள் இருந்தபோதும் என்னைப் பாதித்தவர்களாகவும் என்னைப் பிரதிபலிப்பவர்களாகவும் இலக்கியப் பிரதிபலிப்புகளின் மரபுகளை வரையறை செய்தவர்களாகவும் நான் கருதுகின்ற மூவரை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். இந்த மூவரும் ஒரு எழுத்தாளராக நான் செய்யவேண்டிய வேலையைப் பற்றிய பார்வையை வழங்குகிறார்கள். அத்துடன் அதைச் செய்வதற்கான தைரியத்தை எனக்குத் தருகிறார்கள்.

கறுப்பினப் பெண்களின் இலக்கியப் பங்களிப்பானது மூன்று நூற்றாண்டு களுக்கும் மேலாகப் பொதுவான மரபுகளையும் பாரம்பரியத்தையும் பரிசோதிக்கும் வகையிலான பேரதிர்வு. இந்த நீண்டகால நீட்சியான பயணத்தில் பல எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பங்களித்துள்ளனர். எனினும், 1970 ஆம் ஆண்டு கறுப்பின பெண் எழுத்தாளர்கள் வரலாற்றில் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.

இக்காலத்தில் பலர் பிரபலமான பிளாக் ஆர்ட்ஸ் இயக்கத்தில் (Black Arts Movement 1965-1975) பரந்த அளவில் பங்கேற்றனர். பெரும்பாலானவர்கள் ஹார்லெம் ரைட்டர்ஸ் கில்ட் (Harlem Writer's Guild) போன்ற குறிப்பிட்ட எழுத்தாளர் அமைப்புகளில் உறுப்பினர்களாக இருந்தனர். மேற்கத்திய அழகியல், முதலாளித்துவம், வெள்ளை மேலாதிக்கம் ஆகியவற்றின் மீதான விமர்சனங்களில் தொடர்ந்து கலந்துகொண்டும் இந்தக் கருத்தியல்களை விரிவுபடுத்திய அதே வேளையில், கறுப்பினப் பெண்களின் வாழ்க்கையைச் சுற்றியுள்ள கதைகளுக்கு அதிக பரிமாணத்தை


**-ஸர்மிளா ஸெய்யித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதை மிகவும் முக்கியமானதாகவும் இந்தக் காலத்து எழுத்தாளர்கள் கருதினர். எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக ளில் சமூகத்தை எவ்வாறு மேம்படுத்துவது, பராமரிப்பது என்பது போன்ற பல்வேறு கருப்பொருள்களை உள்ளடக்கி னர். அத்துடன் புலம்பெயர்ந்தோரின் முதல் தலைமுறை யினரின் மாறுபட்ட அனுபவங்களையும் கருப்பொருளாகக் கொண்டனர்.

டோனி கேட் பம்பாராவால் திருத்தப்பட்ட *'The Black Woman: An Anthology' (1970)* கறுப்பின பெண்களின் இலக்கிய மறுமலர்ச்சியின் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்று. அவசியம் கேட்கப்பட வேண்டியது என அறைகூவும் குரல்களின் வியக்கத்தக்க அலைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய ஓர் அற்புதமான தொகுதி இது. நிக்கி ஜியோவானி, ஆலிஸ் வாக்கர், பால் மார்ஷல், ஆட்ரே லார்ட் உள்ளிட்ட ஆர்வலர்களினதும் எழுத்தாளர்களினதும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளன. இந்தப் படைப்புகள் அக்கால கறுப்பினப் பெண் களின் எண்ணங்கள், கருத்துக்கள், சிந்தனைப்போக்குகள், அத்துடன் தொழிலாள வர்க்கம், இனப்பெருக்க நீதி பற்றிய அவர்களின் கவலைகளையும் வகுப்புவாதத் தன்மைகளையும் பிரதிபலிக்கின்றன.





வகுப்புவாத இயல்புகளையும் தன்மைகளையும் பிரதிபலிக்கும் படைப்புகள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தத் தொகுப்பின் இயற்பியல் உருவாக்கத்தில், தொழிலாள வர்க்க கறுப்பினப் பெண்களும் புத்தகத்தை வாங்க முடியும் என்பதையும், வேலைக்குச் செல்லும் வழியில் எளிதாக அணுகுவதற்காக அதைத் தங்கள் காற்சட்டைப் பாக்கெட்டுகளில் பொருத்துவதையும் உறுதி செய்வதற்காக, புத்தகத்தின் அளவு, விலையைப் பற்றி பம்பாரா திட்டமிட்டார். கறுப்பினப் பெண்கள் இந்த எழுத்தாளர்களையும் அவர்களின் சலுகைகளையும் ஏற்றுக்கொண்டனர். மேலும் அவர்கள் ஒருவருக்கொருவர் விவாதிக்க புத்தகக் கழகங்களையும் உருவாக்கினர்.

டோனி மோரிசனின் *'The Bluest Eye*, ஆலிஸ் வாக்கரின் *'The Third Life of Grange Copeland'*, மாயா ஏஞ்சலோவின் *'I Know Why the Caged Bird Sings'* ஆகிய வற்றின் வெளியீடுகளின் வரவுகளால், 1970ம் ஆண்டு கறுப்பின பெண் எழுத்தாளர் "அதிசயங்களின் ஆண்டு" என்றே விவரிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானதாக இருந்ததற்கு இன்னும் பல சிறப்புக் காரணிகள் உள்ளன. முன்பே அறியப்பட்ட எழுத்தாளர்களின் பல புதிய படைப்புக்களும் பொது ஈடுபாட்டையும் கவனிப்பையும் இந்தக் காலத்தில் ஏற்படுத்தின. குறிப்பாக, க்வென்டோலின் ப்ரூக்ஸின் *'Family Pictures'*, மார்கரெட் வாக்கர்ஸ் *'Prophets for a New Day'*, ஆட்ரே லார்டேஸின் *'Cables to Rage'*, சோனியா சான்செஸின் *'We a Badddd People'*, மற்றும் மாரி எவன்ஸின் *'I Am a Black Woman'* போன்றவையும் இக்காலத்தில் அதிர்வை ஏற்படுத்தின. 1960 களில் சிவில் உரிமைகள் இயக்கம் பல கலைஞர்க ளையும் எழுத்தாளர்களையும் உருவாக்கியது. அவர்களின் படைப்புகள் முக்கியமாக அக்கால அரசியல் அநீதிகளை மையமாகக் கொண்டிருந்தன. புதிய தசாப்தத்தில் பல முக்கிய நபர்கள் உள்நோக்கித் திரும்பி அநீதிகளுக்கும் அவர்களின் சமூகங்களுக்குள் ஏற்படும் விளைவுகளுக்கு மிடையே தொடர்புகளை உருவாக்கினர். எழுத்தாளர்கள் தங்கள் கறுப்புத்தன்மை, பாலுணர்வு, வினோதம், வர்க்கம், தேசியம் ஆகிய பலவற்றின் உண்மைகளையும் குறுக்கு வெட்டு முகங்களையும் தங்கள் எழுத்துக்களில் நெருக்கமாக அக்கறையுடன் கொண்டுவந்தனர். 1970 இல் தொடங்கிய கறுப்பினப் பெண்களின் இலக்கிய மறுமலர்ச்சி சுயநிர்ணயம் மற்றும் சுய எழுச்சி வரையறையின் ஒரு தருணமாக வேறுபடுத்தப்படுகிறது.

தங்கள் வாழ்க்கையில் விளையாடும் அமைப்புக ளையும் நிறுவனங்களையும் பற்றிய உள் புரிதலை உருவாக்குவதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் இந்த பெண்களில் பலர் எழுதத் தொடங்கினர். அவர்களின் நவீன அனுபவங்கள்-புனைகதை அல்லது மற்றவற்றின் மிகக் குறைவான, துல்லியமான எடுத்துக்காட்டுகள் அவர்களிடம் இருந்தன. தங்கள் சொந்த கதைகளின் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுமானத்தில், எழுத்தாளர்கள் இலக்கியத்தின் பாரம்பரிய எல்லைகளை பரிசோதித்து விரிவாக்கினர். இந்த எழுத்தாளர் களின் எழுத்துக்கள் உடலை மையமாகக் கொண்டு வாழ்க்கையின் மனோதத்துவ, ஆன்மீக அனுபவங்களை ஆராய்ந்தன. இந்தப் படைப்புக்களில் மொழி மிகவும் முக்கியமானதாயிருந்தது. ஏனெனில் நேரம், இடம், உறவைப் பற்றிய அவர்களின் புரிதலைத் தொடர்புகொள் வதற்காக பெரும்பாலும் வெள்ளை ஆங்கில மரபுகளை நிராகரித்தனர்.

1970களில் கறுப்பினப் பெண்களின் இலக்கிய மறுமலர்ச்சியில் முன்னணியில் இருந்த மூன்று எழுத்தாளர் கள் டோனி மோரிசன், ஆலிஸ் வாக்கர், மாயா ஏஞ்சலோ. இலக்கியத்திற்குள் மொழி, கருப்பொருள் மற்றும் கதையின் கட்டளையை எடுத்துக்காட்டும் படைப்பாளர்களாக இந்த மூன்று பெண்களும் கறுப்பின பெண் எழுத்தாளர்கள் படிக்கவும், கொண்டாடவும் வழி வகுத்தனர்.

**டோனி மோரிசன் *(1931 2019)***

*The Bluest Eye (1970), Sula (1973), Song of Solomon (1977), Tar Baby (1981), Beloved (1987)* மற்றும் பல படைப்புகளின் ஆசிரியர். 20ஆம் 21வது நூற்றாண்டுகளில் மிகச் சிறந்த எழுத்தாளராக விளங்கிய டோனி மோரிசன் 1993 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றார். இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருதுகளில் ஒன்றான புலிட்சர் பரிசையும் வென்ற இவர், பேராசிரியர், கவிஞர், குழந்தைகள் இலக்கியம், புனைகதை அல்லாத மற்றும் லிப்ரெட்டோ எழுத்தாளராகவும் 'ரேண்டம் ஹவுஸில்' ஆசிரியராகப் பணியாற்றிய முதல் கறுப்பின அமெரிக்கர் என்ற பெருமையையும் பெறுகிறார்.

1967 முதல் 1983 வரை, ஹுய் பி. நியூட்டன், முஹம்மது அலி, ஏஞ்சலா டேவிஸ் மற்றும் *'The Black Woman: An Anthology'* யின் ஆசிரியர் டோனி கேட் பம்பாரா போன்ற எழுத்தாளர்களை மோரிசன் வெளியிட்டார். கறுப்பின எழுத்தாளர்களை ஆதரிப்பதற்கான இந்த அர்ப்பணிப்பு, கறுப்பின இலக்கிய வகைக்கான அவரது அர்ப்பணிப்பின் பிரதிநிதியாகவும் நிறுத்தியது. எழுதுவதைத் தாண்டி புத்தகச் செயல்பாட்டில் தன்னை மூழ்கடித்தார் மோரிசன். வெளியீட்டுத் தேதிகள், புத்தக அட்டைகள், ஒன்றுகூடல்கள் ஆகியவற்றைக் கவனமாகக் கருத்தில் கொண்டு, படைப்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் கவனத்துடனும் நோக்கத்துடனும் பணியாற்றினார். இலக்கியம் எவ்வாறு எழுதப்பட்டது, தனது சொந்த படைப்புகளுடன் எவ்வாறு வாசிக்கப்பட்டது என்பதற்கான அடிப்படையை மாற்றுவதற்கு அப்பால், யார், என்ன வாசிப்பது என்பதையும் மோரிசன் மாற்றியமைத்தார். இது தலைமுறைகளாக நீடிக்கும் ஒரு தாக்கத்தை விட்டுச்செல்கிறது.

**ஆலிஸ் வாக்கர் *(பி. 1944)***

*'The Third Life of Grange Copeland' (1970), 'The Temple of My Familiar' (1989), 'Possessing the Secret of Joy' (1992)*, பல சிறுகதைத் தொகுப்புகள், ஏழு கவிதைத் தொகுதிகள் அத்துடன், *'The Third Life of Grange Copeland' (1982)* ஆகியவற்றின் ஆசிரியர்.

ஆலிஸ் வாக்கர் ஒரு தேசிய விருதையும் புலிட்சர் பரிசும் வென்றவர். இனவெறியில் குறிப்பிட்ட கவனத்துடன் பாலின ஒடுக்குமுறையை பகுப்பாய்வு செய்யும் ஒரு கருப்பு பெண்ணியவாதி என அடையாளப்படுத்திக்கொண் டவர். அக்காலத்தில் வெள்ளை பெண்ணிய இயக்கங்களால் பெரும்பாலும் ஆலிஸ் வாக்கரின் கருதுகோள் ஒப்புக் கொள்ளப்படவில்லை. இனம், வர்க்கம், பாலின ஒடுக்குமுறைகளின் குறுக்குவெட்டு முகங்களுக்கான மொழியாகவும், இதனடிப்படையில் பெண்களை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒன்றிணைக்கவும் ஆலிஸ் வாக்கர் 1983 இல் "womanist" என்ற சொற்பதத்தை உருவாக்கினார். ஜோரா நீல் ஹர்ஸ்டன் போன்ற பிற எழுத்தாளர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டதுடன் பெண்களின் இலக்கிய மறுமலர்ச்சிக்காக அவர் ஒரு ஒருங்கிணைந்த பங்கைக் கொண்டிருந்தார். கறுப்பினப் பெண்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் படைப்புகளை உருவாக்குவதன் மூலம் இலக்கிய நியதியை கணிசமாகப் பாதித்துள்ளார் ஆலிஸ் வாக்கர்.

### மாயா ஏஞ்சலோ (1928 2014)

'I Know Why the Caged Bird Sings' (1970), 'Gather Together in My Name' (1974), 'All God's Children Need Traveling Shoes' (1986), 'A Song Flung Up to Heaven' (2002) உட்பட்ட புத்தகங்களினதும் பல நீளமான உரைநடை வகைப் படைப்புகளினதும் ஆசிரியர் மாயா ஏஞ்சலோ. மிகவும் பிரபலமான கவிஞர்களில் ஒருவரான இவரது வாழ்க்கை ஐந்து தசாப்தங்களே நீடித்தது. 'I Know Why the Caged Bird Sings' என்ற இவரது சுயசரிதை கறுப்புப் பெண்களின் இலக்கிய மறுமலர்ச்சியின் தொடக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மாயா ஏஞ்சலோவினால் பகிரப்பட்ட நெருக்கமான நேர்மை காரணமாக, இவரது சுயசரிதையானது புனைவு சுயசரிதையாகவும் எழுதப்பட்டது. அத்துடன் மாயா ஏஞ்சலோவின் உரைநடைப் பாணியை தங்கள் படைப்புகளிலும் பயன்படுத்தி அவரின் தாக்கத்தினை பல படைப்பாளர்கள் வெளிப்படுத்தியுமுள்ளனர்.

மாயா ஏஞ்சலோவின் மரபு தனித்துவமானது. அவர் மால்கம் எக்ஸ், டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோருடன் இறுக்கமான நட்புக் கொண்டிருந்ததுடன், சமூகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்ட ஒரு சிவில் உரிமை ஆர்வலர். நடனக் கலைஞர், நடிகை, பத்திரிகையாளர், நிச்சயமாக உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர். ஏஞ்சலோவின் தனித்துவமான குரல் மாறாத தனித்துவத்துடனேயே எல்லார் தலையிலும் தெளிவான வார்த்தைகளால் எதிரொலித்தன. அவரது குழந்தைப் பருவத்தை வாசிக்கையில் என் கண்ணீர் முடிவில்லாமல் வழிந்தது. அவரது வலிக்காகவும் வெற்றிகளுக்காகவும் அழுதேன். அவரது குழந்தைப் பருவத்தில் இடைவிடாத இனவெறி, பாலியல் துஷ்பிரயோக துயரங்களால் ஏஞ்சலோ அனைத்தும் இழந்தது போல் தோன்றியபோது இலக்கியம் அவள் குரலை மீண்டும் பெற உதவியது.

மேற்கூறிய மூன்று இலக்கியவாதிகளும் மாற்றத்தின் முன்னணியில் இருந்துள்ளனர். அவர்களின் சுயமான எழுச்சி, அவர்களின் மூதாதையரின் கவலைகள் நம்பிக்கைகளைத் தங்களது படைப்புகள் வழி ஆராய்ந்துள்ளனர். மோரிஷன், ஏஞ்சலோ, வாக்கர் ஆகியோர் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் கறுப்பினப் பெண்களாக இருப்பதன் மூலம் ஒரு முழு மனிதனாக வளர்ச்சியடைவதன் யதார்த்தத்தைத் தெளிவாகவும் பச்சையாகவும் விவாதிக்கின்றனர்.



இவர்கள் மூவரும் தங்களுக்கு முன் வந்த பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் சொந்த வாழ்க்கையையும் யதார்த்தமாகவும் உருவகமாகவும் விவாதித்துப் பிரிக்கிறார்கள். டோனி மோரிஷனின் படைப்பான 'Beloved (1987)' ஆப்பிரிக்க - அமெரிக்க வாழ்வின் ஆன்மாவையும் மரணத்தின் சவால்களின் மூலம் ஒரு முன்னேற்றத்தையும் காட்டுகிறது. வாசகனைத் துன்பத்தின் வலைக்குள் இழுத்து, பின்னர் நித்தியத்தின் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. மாயா ஏஞ்சலோவின் 'All God's Children Need Traveling Shoes' (1986) ஆப்பிரிக்க - அமெரிக்கராகவும், ஆணின் உலகில் ஒரு பெண்ணாக அடிபணிந்திருப்பதன் உணர்வுகளையும் உண்மையாகவும் மதிப்புமிக்கதாகவும் எழுதியிருக்கிறார். ஆலிஸ் தனது படைப்புகளில் முக்கியமாக சிறுதைகளில் ஒரு கலவையான தனித்த உலகைச் சமைக்கிறார். விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வதையும் தீவிரமான விசாரணையுமாக மறைக்கப்பட்டவற்றைத் தோண்டுவதைத் தேர்வு செய்கிறார்.

இந்த மூன்று எழுத்தாளர்களின் சேகரிக்கப்பட்ட படைப்புகளில், இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்ட பல செய்திகள் உள்ளன. ஆனால் அவை முற்றிலும் இவ்வுலகிற்குள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தப் பகுப்பாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளும் ஒவ்வொரு படைப்பின் சூழலும் ஒவ்வொரு பெண்ணின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய கூட்டு எண்ணங்களின் வரலாற்றையும் யதார்த்தத்தையும் நிரூபிக்கிறது. மோரிசன் தனது மூதாதையரின் உலகில் இருக்கும் இயற்கைக்காட்சிகளை எழுதுகிறார். அந்தக் கதாபாத்திரங்களின் ஏழ்மை, ஆனால் சுத்தமான வீடுகளும் பாத்திரங்களின் உடைகளும் சீர்திருத்தத்தின் தெளிவான நினைவூட்டலாக உள்ளது. அமெரிக்காவில் உள்ள அனைத்து மக்களுக்கும் போராட்டமே ஒரே தேர்வாக இருக்கிறது. பெரும்பாலும் கறுப்பர்கள், மாற்றப்பட்ட உலகில் ஒரு புதிய இருப்பைப் பொறிக்க முயற்சிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதைகளால் கற்பனையையும் யதார்த்தத்தை யும் சரியாகச் சொல்லமுடியவில்லை. ஆனால் இரண்டு நிகழ்வுகளிலும் ஒரு பெண் எவ்வளவு அர்ப்பணமாக நேசிக்க முடியும், ஒரு பெண் எப்படி மதிப்பை வைக்க முடியும் என்பதற்கான குறிப்பிடத்தக்க உதாரணங்களைப் பார்க்கிறாள் என்பதைச் சொல்லமுடியும். தன்னைத் தவிர்ந்த வேறொன்றினால் அல்லது வேறொன்றிற்காக அவள் வாழ்க்கையின் பெறுமானங்கள் ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டேயிருக்கிறன.


மாயா ஏஞ்சலோவும், எழுச்சியூட்டும் மற்ற எழுத்தா ளர்களும், கறுப்பினப் பெண்கள் தங்களைத் தாங்களே எவ்வாறு வரையறுத்துக் கொள்வது என்பதைத் தங்கள் எழுத்துக்களால் கற்றுத்தருகிறார்கள். எங்களால் முடியாது என்று கூறப்படும்போது அவர்களின் எதிர்பார்ப்பை மீறி எதிர்க்க வேண்டும் என்று சொல்லித் தருகிறார்கள். இவர்களின் கதைகள் அன்பு, வலிமை, நெகிழ்ச்சி ஆகிய வற்றால் நிரம்பியுள்ளன. "எங்களைச் சரிபார்க்க வேறு யாரையும் நாங்கள் தேடவில்லை ஏனென்றால் நாம் ஒருவரை யொருவர் வைத்திருக்கிறோம். ஒருவரையொருவர் கொண்டாடு கிறோம். எங்களிடம் நிகரற்ற உறுதியும் கருணையும் உள்ளன" என்பதில் இவர்கள் ஒற்றுமைப் படுகிறார்கள்.

டோனி மோரிசன் *'The Bluest Eye'* யில் இவ்வாறு எழுதுகிறார், "எல்லாவற்றுக்கும் எல்லாருக்கும் எதிராக நினைவகத்திலிருந்து நாங்கள் நம்மைத் தற்காத்துக் கொண்டோம். எல்லா எதிர்ப்புப் பேச்சையும் எங்களால் உடைக்கப்படவேண்டிய குறியீடாகக் கருதினோம். மேலும் அனைத்துச் சைகைகளும் கவனமாக பகுப்பாய்வு செய்யப்படு கின்றன. நாங்கள் தலைசிறந்தவர்களாகவும், வஞ்சகராகவும், திமிர்பிடித்தவர்களாகவும் ஆகிவிட்டோம். யாரும் எங்களைக் கவனிக்கவில்லை, எனவே நாங்கள் எங்கள் மீது நன்றாகக் கவனம் செலுத்தினோம். எங்கள் வரம்புகள் எங்களுக்குத் தெரியவில்லை."

கறுப்பினப் பெண் எழுத்தாளர்களின் உள்ளுணர்வு நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதி லிருந்து தடைகள், ஒரே மாதிரியான கருத்துக்கள், காதல் பற்றிய தத்துவார்த்த சிந்தனைகள் அல்லது இலக்கிய நியதி போன்ற அனைத்திற்கும் வரம்பற்ற எல்லைகளை உருவாக்குதலை ஆராயத் தூண்டுகிறது. புறக்கணிப்பின் வெளியில் தோல்விகளைத் தாங்கிக் கொள்ளவும், வெற்றி களைக் கொண்டாடவும் தேவையான குணத்தை வழங்குகிறது.

# எழுதுவதை நிறுத்துகிறேன்

**- வாசுதேவன்**



வாழும் ஆசை
வெறியில் நரைத்த
தாடியை தினமும்
தடவிக் கொடுப்பவனை

பிரிந்த நிலத்தில்
திரும்பி வந்து
புரளும் கனவில்
கண்கள் ஒளிர்பவனை

இருபது வயதில்
எறியப்பட்டு
விழாதுகீழே
முப்பது வருடம்
அதே வயதுடன்
அந்தர உலகில்
பேயாய் அலைபவனை

மிக மிக இழந்த
இளமை வயதுள்
திரும்ப வந்து
பிறக்கத் துடிக்கும்
பித்துடன் திரிபவனை

வளர வளர
தன்னை தானே
எரித்து கரைத்து
உயிராம் தனது
கற்பை பறித்த
நாளுக்கு முதல்நாள்
மீண்டும் தொடங்கி
தழைக்கத் தவிப்பவனை

காரணமின்றி
இருளின் சிறையுள்
காலம் தன்னை
தின்னத் தின்ன
ஊரின் தெருவில்
உலவும் நினைவில்
உள்ளம் எரிபவனை

பசியின் மொழியில்
பேசும் மனிதர்களை

சுட்டுக் கொல்லும்
வல்லமையுள்ள
துப்பாக்கி ஒன்று
எங்காவ திருந்தால் சொல்லுங்கள்
கவிதை எழுதுவதை நிறுத்துகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்பெய்திய நிலம்

## சக்கரவர்த்தி

**ஊ**ரின் நினைவுகள் என்பது ஒரு வகையான பிணி. எனக்கோ அது தீராப் பிணி. பத்து வயதில் யாழ்ப்பாணத்துக்கு என்னைப் படிக்க என்று அனுப்பியதில் இருந்து பீடித்தது. நாற்பத்தி இரண்டு வருடங்களாகத் தீராப்பிணியோடையே வாழ்கின்றேன்.

பத்தில் இருந்து பதினெட்டு வயது வரை , ஆறு மாதம் ஒரு வருடம் என்றிருந்தது எனக்கும் ஊருக்குமான இடைவெளி. அதன் பின் கால் நூற்றாண்டாக நீண்டது. இருபத்திமூன்று ஆண்டு கள் என் வீட்டில் கால் படாமலேயே அந்நியப்பட்டு வாழ்ந்து இருந்திருக்கின்றேன் என்பது பெரும் சாபம் இல்லையா. இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு பின், என் ஊருக்குப் போன போது நான் காலம் காலமாகச் சுமந்து திரிந்த ஊரின் நினைவுகள் என்னை ஒரு கூனன் ஆக்கியது. முதுகை அமுக்கும் தேவையற்ற சதைக் கட்டி போல அது என்னை அமுக்கித் துன்புறுத்திற்று.

காலப் பயணத்தின்போது, பாதிக் காலத்தில் பழுதடைந்த கால இயந்திரத்தில், அடைய வேண்டிய வருடத்தை மறந்து விட்ட காலப் பயணி எப்படியெல்லாம் பரிதவிப்பானோ அப்படித் தவித்தேன்.

என் நினைவில் படிந்து விட்ட, நான் தேடிப் போன எதுவுமே என்னூரில் இல்லை. ஆமாம் காலம் தன் பாட்டுக்கு இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

கனவுலகில் வாழும் இந்தக் காலப் பயணிதான் நகர மறுத்து நிற்கின்றான்?


எண்பதுகளின் தொடக்கக் காலத்தில் தங்கிவிட்ட ஊரின் நினைவுகளை, முப்பது ஆண்டுகள் கடந்த பின் கண்டடைதல் இல்லை என்பது மூடன் கூட அறிவான்.

ஆனால் இந்த முரட்டு மூடன் கண்டடைந்தான். நாற்பது ஆண்டுகளுக்கு முன் தொலைத்த தன் ஊரையும் வயல் வெளிகளையும் ஆட்டையும் மாட்டையும் கல்லெறிந்த புளியமரத்தையும் ஊஞ்சல் கட்டிய மாமரத்தையும் தன் ஊரில் உலாவிய அந்த வெள்ளந்தி மனிதர்களையும் கண்டான் இந்த முரட்டு மூடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரேபியன் கடலில் கிடக்கின்ற ஒரு குட்டித் தீவில் என் நினைவுகளைப் பச்சை நிறத்தில் காலம் சித்திரமாக கீறி வைத்திருக்கிறது.

கூபா! இந்தியாவுக்கான புதிய வழியைத் தேடி இத் தீவில் காலடி வைத்தான்.

கொலம்பஸ் அந்தத் தீவில் இறங்கி 'ஸ்பெயின் நாட்டின் புதிய அரசாங்கம்' என்று அறிவிப்பதற்கு முன்னர் அத்தீவு அரோவாக் பழங்குடிகளுக்குச் சொந்தமாக இருந்தது.

ரைனோ என்ற மொழியைப் பேசும் அரோவாக் பழங்குடியினரின் முக்கால்வாசிப் பேர் கொலம்பஸ் கொண்டு வந்து பரப்பிய அம்மை நோயால் பலியாகினர். கொலம்பஸ் வருகைக்குப் பிறகு ஸ்பெயின் தேசத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து ஏறத்தாழ 400 ஆண்டுகள் அவர்களின் ஆட்சியின் கீழ் கியூபா இருந்தது.

ஸ்பெயின் அமெரிக்க போருக்குப் பின் 1902-ஆம் ஆண்டு கியூபா சுதந்திர நாடாக மாறியது. ஸ்பானிய அமெரிக்கர்கள் தனிநாடாக ஆட்சி செய்ய ஆரம்பித்தனர். ஆனால் அது அமெரிக்காவின் அடிமை அரசு. பாடிஸ்டா கொடுங்கோலன், எதேச்சதிகாரம் கொண்டவன் அமெரிக்காவின் ஏவலாளி.


தன் மக்களின் விடுதலைக்காக ஃபிடல் காஸ்ரோ, 1959 ஜனவரி 1 சர்வாதிகாரி பாடிஸ்டா ஆட்சிக்கு இறுதி மரண அடி கொடுத்த நாள். ஆனால் புரட்சி அதற்கு ஆறரை வருடம் முன்பே 1953 ஜூலை 26 ஆம் நாள் தொடங்கியது.

ஆமாம். அன்றுதான் பிடல் காஸ்ட்ரோ தலைமையில் ஆயுதம் தாங்கிய புரட்சிக் குழுவினர் மோன்காடா ராணுவ முகாமைத் தாக்கினார்கள்.

ராணுவ முகாம் தாக்குதலைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட பிடல் காஸ்ட்ரோ 76 நாட்கள் தனிமைச் சிறைக்குள் அடைக்கப்பட்டார்.

புறப்பட்ட கடலோடி கிறிஸ்டோபர் கொலம்பஸ் அக்டோபர் 12, 149 விசாரணையின் போது நீதிமன்றக் கூண்டையே மேடையாக்கி காஸ்ட்ரோ இடி முழக்கம் செய்தார். கியூபா அடிமைப்பட்ட கதையை, ஸ்பானிய அமெரிக்க அதிபர்களின் கீழ் அடிமையாக கியூபர்கள் தயார் இல்லை என்பதையும், சுதந்திரத்தின் உண்மை யான பொருள் என்ன என்பதையும், வரலாறு, தத்துவம், வாழ்க்கை ஆகிய மூன்றையும் இணைத்து அவர் பேசிய போது நீதிமன்றம் மிரண்டது.

ஆயினும் சர்வாதிகாரிகளின் நீதிமன்றம் காஸ்ட் ரோவுக்கு 15 ஆண்டுகள் கடும் சிறைத் தண்டனை விதித்தது. அப்போதுதான், "வரலாறு என்னை விடுதலை செய்யும்." என்று அதிகாரத்தை நோக்கி நம்பிக்கை முழக்கமிட்டார். உலக நிர்ப்பந்தம் நாளுக்கு நாள் அதிகரித்தது. வேறு வழியின்றி சர்வாதிகாரி பாடிஸ்டாவுக்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டிய அரசியல் கட்டாயம் ஏற்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிடல் காஸ்ட்ரோவும் அவர் தம்பி ரவுல் காஸ்ரோவும் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படியே போராடிக் கொண்டிருந்தால் ஒருபயனும் ஏற்படாது. இனி கெரில்லா யுத்த முறைகளைக் கையாள வேண்டும் என எண்ணி, யுத்த முறைகளைக் கற்றுக் கொள்வதற்காக மெக்சிகோவுக்குப் பயணப்படுகிறார் பிடல்காஸ்ரோ. அங்குதான் 'எனது கால்கள் அநீதிகளை எதிர்க்க எல்லைகளைக் கடந்தும் பயணிக்கும்' என்று சொன்ன,'சேகுவேரா'வைச் சந்திக்கிறார்.

கியூபாவின் பிரச்சினையை அறிந்த 'சேகுவேரா 'நானும் உங்களோடு கியூபா வருகிறேன்' என்று சொல்கிறார். இரண்டு மாபெரும் சக்திகள் இணைந்தது தெரியாமல், அமெரிக்காவும், பாடிஸ்டாவும் கியூபாவில் ஆதிக்க வெறியை அதிகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஃபிடல் காஸ்ரோவும் சேகுவேராவும் இணைந்து அடர்ந்த வனப்பகுதியான சியாரா, மேஸ்த்ரா காடுகளில் இளைஞர்களையும், விவசாயிகளையும் ஒன்று திரட்டி கடுமையான போர்ப் பயிற்சிகளை வழங்குகிறார்கள்.

1956 இல் கியூபா புரட்சியாளர்கள் தோற்கடிக்கப் படுகிறார்கள். ஆனால் சேகுவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ, ஃபிடலின் தம்பி ரவுல் காஸ்ட்ரோ உட்பட 12 வீரர்கள் தப்பித்துச் சென்றனர்.

கிடைத்த வாய்ப்பில், இன்னும் பல இளை ஞர்களைத் திரட்டிக் கெரில்லா யுத்தப் படை வீரர்களாக அவர்களையும் மாற்றினார்கள்.

1959 ஆம் ஆண்டு ஒன்பதனாயிரம் கெரில்லா யுத்த வீரர்கள் ஹவானா வழியாக ஊடுருவி பாடிஸ்டா ராணுவ வீரர்களுடன் யுத்தம் புரிந்தபோது, 'இனியும் இவர்களோடு சண்டையிட்டு நம்மால் தப்பிக்க இயலாது' என நினைத்த பாடிஸ்டா கியூபாவை விட்டுத் தப்பித்து ஓடுகிறான்.


இந்த யுத்தத்தின் மூலம் அமெரிக்க காலனி ஆட்சி முறை கியூபாவில் முடிவுக்கு வருகிறது. கியூபாவின் ஆட்சி அதிகாரத்துக்கு வருகிறார் ஃபிடல் காஸ்ரோ. கியூபா விடுதலைக்குப் பெரும் பங்காற்றியவர் 'சே ' எனப் பின் நாளில் ஃபிடல் அறிவிக்கிறார்.

இப்போதும் உலக வழக்கத்தில் 'சேகுவேராவையும் ஃபிடல் காஸ்ரோவையும் இப்படிக் கூறுவார்கள். 'சிறந்த தலைவன் ஃபிடல் என்றால், ஆகச் சிறந்த தளபதி சே' என்று.

புரட்சிப் போராளிகளுக்கு நான் கியூபாவின் வரலாறைச் சொல்ல வேண்டியதில்லை. சித்தாந்தங்களின் மேல்நிலையான நம்பிக்கையற்ற இந்தக் கோதாரிக்காரன் மீது அவர்களுக்கு ரௌத்திரமும் வரலாம்.

இருபது ஆண்டுகளுக்கு முன் முதற் தடவையாகக் கியூபா போனது, பெருமை மிகு மரணத்துக்கு அஞ்சாத புரட்சியாளர்களின் இலட்சிய இராச்சியத்தை தரிசிக்கும் மனநிலையிலேயே.

கிறிஸ்டோபர் கொலம்பசின் உடல் ஸ்பெயினுக்குக் கொண்டு செல்ல முதல், புதைத்து வைக்கப்பட்ட பழமைத் தேவாலயம் ஒன்று ஹவானா நகர மத்தியில் இருக்கிறது எனக் கேள்விப்பட்டு அந்த இடத்துக்குத்தான் முதலில் நான் போனேன். ஐந்நூறாண்டு கால கோபம். இயலாமை. அவன் சமாதி இருந்த இடத்தில் காறி உமிழக் கூட முடியாத கையறு நிலை. ஆனாலும் கொலம்பஸ்சை எனக்குத் தெரிந்த அத்தனை தமிழ்த் தூசணத்தாலும் வைதேன், பழித்துரைத்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிளந்த பாறை மாதிரி தோற்றம் தரும் குன்றின் மேல் கடலைப் பார்த்த வண்ணம் இருக்கும் ஒரு சிறு வீடு புரட்சி விரும்பிகளுக்கு புண்ணிய தலம். ஹவானா நகரின் எல்லையை ஒட்டிச் சேகுவேரா தங்கி இருந்த வீடு இருக்கிறது. மலையேறிப் போய்ச் சுற்றிப் பார்த்தேன்.

அமெரிக்க திசையைப் பார்த்த கடற்கரையை ஒட்டித்தான் இருக்கிறது ஹவானா பல்கலைக்கழகம். புரட்சியும், கம்யூனிச சித்தாந்தமுமே அடிமைப்பட்டுக் கிடக்கும் கியூபாவுக்கு நன்மை அளிக்கும் என்பதைப் ஃபிடல் காஸ்ரோ இந்தப் பல்கலைக்கழத்தில் உயர் கல்வி பயிலும்போதுதான் நம்பிக்கையுடன் முடிவுக்கு வருகிறார். எட்டாம் வகுப்பையே தாண்டாத நான் அந்தக் ஹவானா பல்கலைக்கழகத்தை நேர்கண்ட பார்வையுடனேயே சுற்றி உலாவினேன்.

அரசியல் தொலை நோக்கற்ற ஈழத்தின் புரட்சி யாளர்களால் வஞ்சிக்கப்பட்டவன் நான். என் தேசத்தின் முட்டாள் புரட்சியாளர்களால் மனச் சஞ்சலம் ஆன பின், புரட்சி நாயகர்களையோ புரட்சியில் பூத்த தேசத்தையோ காண நான் செல்வதில்லை.

முழுக்க முழுக்க நான் தொலைத்த என் ஊரை யும், சொந்தங்களைக் கூடிக் கொண்டாட மட்டுமே அந்தச் சிறு தீவு என்னை வரவேற்கிறது. பெருமழை பெய்து ஓய்ந்திருந்தது. வெப்ப வலயத்துக்கே இயல்பான சூடு, மழைக்குப் பின் நிலத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. விமானம் ஏற, ஸான்ரா என்னை அழைத்துச் செல்ல வருவதாக சொல்லி இருந்தாள்.

சாண்டியாகோ நகரின் மத்தியில்தான் மோன்காடா இருக்கிறது. காஸ்ரோ தலைமையிலான முதலாவது ராணுவ முகாம் தாக்கப்பட்ட இடத்தை ஸான்ராதான் அடை யாளமிட்டுக் காட்டினாள். புதுப்பிக்கப்பட்ட கட்டிடம் மஞ்சள் வெள்ளை நிறத்தில் புரட்சியின் முதல் அடையா ளத்தைப் பதிக்கிறது.

காஸ்ரோ, சேகுவேரா, புரட்சி, விடுதலை என எதுவுமே அறியாத புதிய தலைமுறை உருவாகி விட்டது. என்னிலும் முப்பத்தி மூனு வயது இளையவளான ஸான்ரா ஓரளவு கியூபாவின் வரலாறு தெரிந்தவளாக இருக்கிறாள்.

மோன்காடா முகாமை ஒட்டிய நடை பாதை யிலும், சுற்றி வளர்ந்த வாழைத்தோட்டத்துக்குள்ளும் உலாவியபோது, ஸான்ரா என் கையைப் பிடித்து நடக்க எத்தனித்ததை அவள் உடல் மொழியில் அறிந்தேன். எப்போதும் என்னுள் மறைந்திருக்கும் இருபத்தி ஒரு வயதுக்காரன் தூங்குவதே இல்லையே.

காஸ்ரோவின் பேத்தி ஸான்ராவை காதலியாக ஏற்பதா, மகளாக நினைப்பதா என்கிற பழமைவாதச் சித்தாந்தங்களுடன் மனப்போராட்டம் என்னுள் நடந்து கொண்டிருக்கின்றபோதே, ரொரண்டோவில் தரை தட்டியது விமானம்.


கொலம்பசின் ஸ்பானிய படையால் இன அழிப்பான அரோவாக் பழங்குடிகளின் ரைனோ மொழியில் கூபா என்றால், 'பூப்பெய்திய நிலம்.'

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ச்செல்வன் கவிதைகள்



**போர்ஹேோ என்றொரு வீடு அல்லது
வாழைமொத்தியைத்தள்ளிய மணல் புத்தகம்**

மணல் புத்தகம் வளர்ந்து கொண்டேயிருந்தது.
பெருமணல் சிறுமணல்
உடைந்து உடைந்து
ஒரு கோபுரமாக மாறத் தொடங்கியது.

புத்தகம் ஒரு மண்ணா?
ஒரு மண்ணாங்கட்டியா?

மிக மிகச் சிறிய குருத்துமணலிருந்தா
இந்த மணல் புத்தகம் தோன்றியது?

வியப்பு சமண்ட மரமாய் வளர்ந்தது.

மணலிருந்து புத்தகம் தோன்றமுடியாதென்று
நினைப்பவர்கள்
போர்ஹேோவை வெறுக்கத்தொடங்கினர்.

என் மகள் மணல் வீடு கட்டத்தொடங்கியபோது
கேள்விகள் சுருங்கத்தொடங்கின.
வெறுப்புக்கள் உதிரத்தொடங்கின.

வளவு முழுதும் அவள்வீடு பெருக்கத் தொடங்கியது
இரு கைகளாலும் மண்ணை அணைத்து அணைத்து
முழங்காலால் நடக்கத்தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதில்களாக மணல்கள் முளைத்து
ஓலைவீடாக மாறியதில்
எனக்கு ஆச்சரியமில்லை.

அவள் ,போர்ஹோவை
பிறந்ததிலிருந்தே பார்க்கத்தொடங்கிவிட்டாள்.
கடலலைகள்
இடியோசைகள்
பெரும்காற்றுக்கள்
பெரும்மழைகள்
அவள் ஏறிமிதித்து புதைந்தெழுபவள்.

அவள் மணல் புத்தகத்தை
தலைமாட்டிற்குள் வைத்துப்
படுக்கத்தொடங்கிய நாட்களில்
பீக்காகங்களும் குருட்டுவெளவால்களும்
அவள் வசமாகின.



இதையறிந்த போர்ஹோ
அவளுடன் கதைக்கத்தொடங்கிவிட்டார்.
நீங்கள்தான் இவ்வுலகின்
மகா எழுத்தாளனா?

களிமண் பற்றி விதண்டாவாதம் பண்ணினாள்.
அவள் நெற்றியில் பெருக்கன்மண்
முளைக்கத்தொடங்கிய சிறு பொழுதில்
கந்தல்களும் அவள் கன்னத்தில்
உறையத்தொடங்கிவிட்டது.

கந்தல்களில் கைவைத்தாள்
அவள் முகம் முழுதும்
ஆமச்சேராய் பெருகின.

துடித்துப்போனார் போர்ஹோ
நெற்றியில் கையைவைத்தார்
கன்னத்தின் கந்தல்கள் உதிர்ந்தன.
உக்கல் ,கந்தல்கள் கடலில்கரைந்தன.

சற்றுப்பின்
போர்ஹோ மணல் புத்தகத்தை
உரத்துவாசிக்கத்தொடங்கினார்
தீங்கிருமிகள் கரணமடித்தமதியம்
அவள் களிமண் வீட்டை மட்டம்போட்டாள்.
போர்ஹோ கண்களைச்சிமிட்டினார்
உதட்டில் பூர்த்த வெள்ளிப்பூ
வாடாமல்லிகையாக மாறிய
மறுநாள்
மண்கள் பெருகின
மணல்புத்தகம் மட்டத்தில் ஏறியது.

பள்ளிமோடா?
ஒத்தமோடா?
அமெரிக்கன் மோடா?
கை மோடா?


போர்ஹோ வேண்டா வெறுப்பாய்
பள்ளிமோடாகவும்
ஒத்தமோடாகவும்
மாறத்தொடங்கிய நடுநிசியில்
மணல் புத்தகம் தொண்டைக்குள்
வாழைமொத்தியைக்கக்கியது.

*12.12.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரங்களைத் தீட்டல்



காகம் பெரும் வடையைத்தூக்கிக்கொண்டு
என் முன்
சிறகுடைந்து நின்றது.

என்னிடத்தில் எந்தப்பரிவும் இப்போ
ஒட்டியிருக்கவில்லை.
காற்று என்னிடமிருந்து
பறித்துப்போன வியலம் அறியாப்பொழுது.
சீர்ரென..கத்துகின்ற
சில்லூரின் ஓசையில் திடுக்கிட்டு
என்மீது வெள்ளைப்பீயைப் பேண்டது.

தொலைந்துபோன என் அதிஸ்டத்தையே
தேடிக்கொண்டிருக்கிறேன்.
காகத்தின் வெண்மை
என் வாழ்வின் இடர்களைத்தூக்கி
மேலெழுகிறது.


தாழிடப்பட்ட என்கதவுகள்
கடகடத்து ஓசைகள் எழுப்ப
காகம் தன் உடைந்த சிறக்கையை
அலகால் கோதி
வளர்த்தெடுக்கிறது.
கறுப்புச்சிறகுகள் உதிர்ந்து
வெள்ளைச்சிறகுகள்
அலறிப்பூவாய் பூக்க
பொசுங்கிய துர்நாற்றம்
என் மூக்கை நிமிர்த்தியது.
இனி ஏதும் நுகரமுடியாது
மூக்குச்செத்துப்போக
புகைமூட்டம் நடந்துகொண்டேயிருந்தது.

வெட்டவெளிமுழுதும்
எதிரொலித்துக்கொண்டிருக்கும்
ஏதோவொரு குரல்
அலையெழுப்பி மரங்களை
உசுப்பிக்கொண்டேயிருக்க
மீண்டும் காகம்
அடங்காப்பசியுடன்
பெரும்வடையுடன்
அண்டம் காகத்துடன் வந்தது.
ஆவென்று வாயைப்பிளந்து நின்ற நரி
மீண்டும் தன் தந்திரங்களைத்தீட்டத்தொடங்கி

த.மலர்ச்செல்வன்
15.13.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் மீண்டும் ஒளிர்தல்

எல்லா ஊறுகளும் எனக்குள் இறங்கி...
வலிமையுடைய கடற்பாறைகள்
என்னைக்குத்திக்கிழிக்கின்றன.

வக்கிரங்கள் இறங்கி நடக்கத்தொடக்கியபோதே
ஆயிரம் நச்சுப்பாம்புகள்
படமெடுக்கத்தெரியாமல்
நெழுநெழுத்து புற்றுக்குள் உறங்கத்தொடங்கின.
விசம் கறுத்தச்சாயமாய்ப் பீச்சியடித்து
நிலம்முழுதும்
காலன் ஊர்ந்து திரிந்தான்.

என் கண்களில் நெருப்பாறு
ஊற்றெடுத்து வெம்மை தக..தகப்பதை
நான் உணரத்தொடங்கியபோதே
வால்வெள்ளியொன்று
எழுபத்தைந்து வருடங்களின் பின்
கிழக்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

நச்சுப்பாம்புகள்
என்னைத்தீண்டும் எத்தனங்கள்
தோற்றுப்போக..
மழையில் நனைந்து புற்றுக்கள் கரைந்துபோக..
பத்தியைத்தூக்கமுடியாமல்
கரணமடித்து
செட்டைகள் உரிந்து ஈசல்கிளைகள்போல்
மாண்டுபோவதை
நான்பார்த்துக்கொண்டிருந்தேன்.
சாபங்கள் எதிரொலிக்க..
என் சந்ததிகள்
உயர உயரப் பருந்தாகின்றனர்.
நான் ஊர்க்குருவியாகயிருக்கின்றேன்.
நாகங்கள் நிறைந்த வனப்பாக
மணம்வீசும்
கார்காலத்தில்
இப்போ எந்த எதிரொலியையோ
ஊறுகளையோ
என் நெஞ்சில் பூப்பதில்லை.

த.மலர்ச்செல்வன்
30.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலை நிலவன்

# தன்னந்தனி




தினந்தோறும்
பொழுது சாய்கையில்
முற்றத்தில் இறங்கும்
புறாவிடம்.
அதன் ஊர்பேர்
ஏதும் கேட்காமல்
தானிய மணிகளை சித்தும்
சிறுமி
அதனுடன்
தானும்
ஒரு புறாவென பழகி வருவது
எனக்கு
முன்பே தெரியாது
இந்த நிகழ்விற்குப் பிறகே.
சிறுமியும்
ஒரு பறவையென்று அறிந்தேன்
வான்வெளியையே
தன் இறக்கைகளில்
மடித்து வைத்து
ஜொலித்தபடி கீழிறங்கும்
ஒரு செம்பவள புறா
தன் காலடிகளை
வெகுகாலம் புழங்கிய
தன் இடமென பாவித்து
சிறுமியின்
வாசலில்
எதன் மாயத்திலோ பதிக்கிறது
நான்
அதை அறியாமல்
போக்கிரிகள்
கூண்டில் வளர்த்தும்
சிறகு கத்திரிக்கப்பட்ட
ஒரு
பந்தய பறவையென்றே
அதை
எண்ணியிருந்தேன்
பக்கத்திலிருந்து பார்க்க வேண்(
கானகப் பறவையொன்றின்
மென்னழகு
நடைக்கு முன்பு
தேவ தூதிகளையொத்த
காதலிகளும் தோற்பர்
முற்காலத்திலிருந்தே
எனக்கு
ஒளிரும்
சிறுகுகளை
ஒளித்து வைத்து
அங்குமிங்கும்
சதா ஓடிச் சாடி
பரபரக்கும்
இந்த
சிறுமிகள்
பறவைகளென்றொரு
சந்தேகமிருந்தது
அது
மெய்ப்பட
இவ்வளவு காலமாகியிருக்கிறது
தினமும்
சாயங்காலத்தில்
தானிய மணிகளை
கொத்தியுண்ட
இப் புறா
சடசடக்கும்
இறக்கைகளை வீசி
வானுக்கேறுகையில்
நான்
நின்ற இடத்தில்
மிதப்பேன்
சிறுமியோ
என்னை
தன்னந்
தனியே விட்டு
பறக்கத் துவங்குவாள்
பிறகு
வானம்
நீல நிறத்திற்கு மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொழுதை
மேய்க்க முடியாமல்
கஷ்டப்படும்
ஒரு மனநோயாளி
காலத்தை
எப்படி நகர்த்துவதென்றெ
தெரியவில்லை
என்று
அவ்வப்போது புலம்பி அழுகுகையில்
மாத்திரை வில்லைகளை
ஒழுங்கும் கிரமுமாய்
விழுங்கச் சொல்லி
மன்றாடுவதைத் தவிர
எனக்கு வேறு வழியில்லை
ஒவ்வொருவருக்கும்
வெளியே இயங்கும் காலம்
அவரவர்
கனவுக்குத்தக்கவாறு
ஒளிர்கிறது
இருள்கிறது
தினமும்
நான் பயணப்படும் சாலையின்
அந்தப் பக்கம்
ஒருகிழவர்
காய்ந்த மரத்தை
ஈட்டியில்
பிளந்து கொண்டிருப்பதை
பார்த்துக் கொண்டு தான் வருகிறேன்
ஒரு நாள்
அவருடைய கிழமையில்
எப்படி நகர்ந்து உதிர்கிறது
வதங்கிய உடலில்
முறுக்கேறிய நரம்புகள் அதிர
வெள்ளி முத்துக்கள்
துளிர்க்கச் செய்யும்
அக்கிழவரின்
வியர்வையில்
காலம்
எப்படிச்
சொட்டுச் சொட்டாக
சொட்டுகிறது
பொழுதை
அவர்
வலித்துக் கடத்தியும்
காலத்தின் மீது
அவர் வசம் புகார் ஏதுமில்லை
காலை தோறும்
பழுத்த மஞ்சள் செம்பக மலர் நறுமணத்தை
காற்றிலேற்றி
பதினாயிரம் சிறகுகளுடன்
தினம்
நான் நடக்கும்
சாலையில்
என்னை எதிர்படும்
ஒரு இளம் யுவதி
தனக்குள்ளாக
இந்த
அனந்தப் பெருவெளியை
இனிக்க இனிக்க
தழுவித் தழுவித் கடக்கிறாளே
அவளின்
பொழுதையும்
ஒரு வேறாகப் பிரிக்கும்
காலத்தை
நான்
வியந்தபடி
சாய்ந்து நிற்கையில்
அடடா
இந்த வேப்பந் தரு
மழை ஈரத்தில்
தன்
பொன் கொழுந்து இலைகளை
எனக்காக
எனக்காக
இந்தக் கணம்
திடீரென வரும்
பளீரிட்ட வெய்யிலில்
மின்னலிடச் செய்கிறதே
பாருங்கள்
இது தான்
காலத்தின் நற்கருணை
ஆக
ஒரு போதும்
பொழுதை
நம்மால் மேய்க்க இயலாது
காலங்காலமாய்
பொழுதுதான்
நம்மை
விதவிதமான
கனவினூடாக
சதா சர்வமும்
மேய்த்து அலைகிறது



மேமிபேனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெல்மணி

உன் மீதான அளப்பரிய காதலால்
என்னை வேவு பார்க்கும்
உனக்கென ஒன்பது
ஆடிகளை உன் முன் நிறுத்தியுள்ளேன்
முதலாவது ஆடியில்
நான் அதிகாலையில் எழுந்ததும்
ஒரு நெல் வயலை வரைந்து
அதன் மீதே
தூங்கி விடுவேன்
இரண்டாவது ஆடியில்
என் மிதி வண்டியில் ஏறி
முதலில் சாலையிலும்
பின்பு காற்றிலும் பயணமாவேன்
மூன்றாவது ஆடியில்
எனக்கான இரண்டு அப்பங்களுக்காக
மதியம் வரை
பிறருடைய நோய்வாய்பட்ட
மேசைகளைக் கழுவுவேன்
நான்காவது ஆடியில்
கரப்பான்களின் துணையுடன்
புத்தகங்களை தூக்கத்திலிருந்து எழுப்பி
அவற்றின் உள்ளாடையைப்
பிரித்து ராவெல்லாம் முத்தமிடுவேன்
ஐந்தாவது ஆடியில்
பரிதவிக்க பரிதவிக்க
என் முதலும் முடிவுமான தேவதைக்காக
என் உடலின்
ஆப்பிளை நறுக்கித் தருவேன்
ஆறாவது ஆடியில்
கடவுளை புதைத்த
என் ஆம்புலன்ஸைக் கழுவுவேன்
ஏழாவது ஆடியில்
இறந்தவர்களிடம் அவர்கள்
உயிரோடிருந்த காலத்தில்
ஞாபக மறதியாய்
விட்டுச் சென்ற
ஒரு முத்தத்தை எடுத்துச் செல்வேன்
எட்டாவது ஆடியில்
என் அம்மாவின்
முலையை
பால்ய உதடுகளில் சப்புவேன்
ஒன்பதாவது ஆடியில்
என் சிறகை ஒவ்வொன்றாக
விரித்து சிலிர்த்து
என் நிர்வாணத்தை
ஆகாயத்தில் எழுதுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோணாப் பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின்னர் கூத்தரங்க ஆற்றுகையின் மீளெழுச்சி



சு.சந்திரகுமார்

**அறிமுகம்**

ஈழத்துப் பாரம்பரியக் கூத்தரங்கு திறந்த வெளி ஆற்றுகையாகப் பயிலப்படுகின்றது. தமிழர் வாழும் பிரதேசங்களில் இவ்வகை ஆற்றுகை சடங்குடனும், தனியாகவும் பண்பாட்டு அடையாளங்களுடன் செய்யப் படுகின்றது. இவ்வகையில் ஆடப்படும் கூத்துவடிவங்கள் தமக்கான இயல்பான பண்பாட்டுச் சூழலில் பயில்வதும், மக்கள் மையம்நின்று ஆடப்படுவதும் இதன் உயிர்ப்புக்குக் காரணம். இவ்வாறு, அடிப்புற வெளியில் ஆடப்படும் கூத்துக்கள் பலசவால்களுக்கு முகம்கொடுப்பதுமுண்டு. இங்கு மக்கள் கொரோணாப் பெருந்தொற்றால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டும், கூத்தாடுவதும், அதன் விரிவாக் கமும் ஆராயப்படுகின்றது. இது கூத்து ஆடுவது குறைந்து விட்டது, ஆடுகிறார்கள் இல்லை என்பதனைப் பொய்ப்பிக் கின்றது. ஏனெனில், நவீன நாடகம்கூட இதுவரை மேடை யேற்றப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருந்தொற்று - கூத்தாற்றுகை - உள ஆற்றுப்படுத்தல்**

பாரம்பரியக் கூத்தரங்கு வாழ்வியல் வெளிப்பாட்டில் அதன் அடையாள அரசியலுடன், சமூக - பண்பாட்டு அழகியலுடன் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. கூத்தரங்கு அது தோன்றிய அடிப்புறத்தில் - மக்கள் பண்பாட்டு வெளியில் அதன் உணர்வு வெளிப்பாடுகளுடன் மீளமீள ஆடப்பட்டு, கொண்டாடப்படுவதும், அடுத்த தலை முறைக்குக் கையளிக்கப்படுவதும் வழக்கம். இவ்வாறான கூத்தரங்கு சமூகத்தில் ஏற்பட்ட யுத்தம், இடப்பெயர்வு, சுனாமி, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றின் இடர்காலங்களில் குறித்த சமூகம் தமது உளத்தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கும், தம்மை ஒருங்கிணைப்பதற்கும், கூட்டுணர்வை வெளிப்படுத்துவதற்கும் ஆடப்பட்டது. இடம்பெயர்ந்த இடங்களிலும், மக்கள் தங்கியிருந்த முகாங்களிலும் கூத்தை ஆற்றுகை செய்தமை அம்மக்களின் ஆழ்ந்த ஈடுபாட்டையும், கூத்தின் வகிபாகத்தையும் சுட்டுகின்றது. இதற்குக் கூத்தின் செம்மையும், வீரியமுமே பலம்சேர்க்கின்றது. கூத்தாடும் காலங்களில் இயல்பாகவே உள ஆற்றுப்படுத்தலும், மன நிம்மதியும் ஏற்படும். இதனை சமூக மையக் கூத்துப் பயிலும்வெளி கொடுக்கின்றது. சமூகம் அடிப்புறத்தில் கூட்டுணர்வுடன் ஒருங்கினையும் பொழுது கூத்தர்கள் தமது முன்னைய கூத்து ஆற்றலையும், திறனையும் பகிர்வது, முதியோர் கூத்தைப் பார்த்து தமது சமகால சுற்றுச்சூழல் அனுபவத்துடன் இணைவது, சிறுவர்கள் கூடிக்கொண்டாடுவது, இதில் ஆடும் கூத்தர்கள் தமது ஆட்டம், பாட்டு, கூத்துத்திறன்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவது, பெண்கள் கூத்துப்பற்றியும், கூத்தாடுவோர் பற்றியும் கூடிப்பேசுவது, அதுபற்றிக் கதை உருவாக்குவது, உறவினர்கள் ஒருங்கிணைவது, அண்ணாவிமார் தமது சிந்தனை ஆற்றலை ஆற்றுகை மையத்துடன் வெளிப்படுத்துவது போன்றவற்றைக் கூத்துருவாக்கத்திற்கான களரியடித்தல் காலத்தில் காணலாம். இதன் வலுவாக்கத்தைக் கூத்து அரங்கேற்றமும் அதன் பின்னராக வீட்டுக்குவீடு ஆடுதலும், மீள் களரியேற்றமும் மேம்படுத்தும். இவை இம்மக்களுக்கு மன அமைதியை, மகிழ்வை, உணர்வுச் சமநிலையை இயல்பாகவே ஊட்டும்.

இவ்வாறான ஆற்றுகை அழகியலைக் கொண்ட கூத்து, கடந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட கொரோணாப் பெருந்தொற்றினால் மீள ஆடமுடியாது, ஒருங்கிணைய முடியாது, கூட்டுணர்வை வெளிப்படுத்த முடியாது, பெரும் தடையைக் கொடுத்தது. இது வைத்தியரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் உருவாகியது. முதலாளித்துவத்தின் அதிகார ஆதிக்க சிந்தனையும், அதன் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் இப்பொருந்தொற்றைப் பரவலாக்கியது. மக்கள் ஒன்றுகூடலைச் சிதைக்கவைத்தது. இதன் தாக்கத்தால், அடிப்புறப் பண்பாட்டு வெளியில் பயிலப்படும் கூத்துக்களின் உயிர்ப்பைத் தற்காலிகமாக மௌனிக்க வைத்தது. ஆனாலும், 2021 – காலத்தின் பிற்பகுதியில் சில இடங்களில் சில கூத்துக்கள் ஆடப்பட்டு, பின் பெருந் தொற்றால் ஏற்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் தடைப்பட்டு - அடங்கிக் கிடந்த அழகியல் உணர்வு 2022 காலப்பகுதியில் மீண்டும் பீறிட்டு எழுந்தது. இது பற்றியதாகவே இவ் வுரையாடல் அமைகின்றது.

கூத்து ஒரு மக்கள் கலை என்பதால் அதனை யாராலும் எவ் அரசியலாலும் கட்டுப்படுத்த முடியாது. அதன் ஆற்றுகை அழகியலின் ஆழமான உணர்வு வெளிப்பாடு தேக்கநிலையடைய விடாது. ஆடல் பாடலைத் தாண்டி கூத்து மக்கள்மையமாக, ஆற்றுகைமையமாக பயிலப்படுவது. உள்ளுணர்வும் சமூக உறவும் சார்ந்தது. இதனால், கொரோணாப் பெருந்தொற்றுக்காலங்களில் அத்தொற்றில் இருந்து விடுபடவும், அதில் இருந்து தப்பிக்கவும், ஒருங்கிணைவு தடுக்கப்பட்டது. ஏனினும், கூத்தர்களும், மக்களும் ஒன்றுகூடா முடியாது இருந்த காலத்தில் கூத்தர்கள் தமக்குள்ளே கூத்துப் பாடல்களைப் பாடிப் பகிர்ந்தனர். சில மெய்நிகர் நிகழ்வுகளிலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். இவர்கள் ஒன்றுகூடிக் கலைநிகழ்வைச் செய்யமுடியாது முடங்கிக்கிடந்தனர். தவித்தனர். பொருளாதார நலிவால் திண்டாடினர். இது வாழ்நாளில் அனுபவிக்காத பெரும் உளத் தாக்கத்தை மக்களிடமும், கலைஞர்களிடமும் ஏற்படுத்தியது. இதனால், மன அழுத்தத்திற்கு உட்பட்டனர். கொண்டாடி மகிழ்வதும், கூட்டுணர்வை வெளிப்படுத்துவதும் இனிச்சாத்திய மற்றதாகவே உலக சுகாதார நிறுவனங்களும், உள்ளூர் சுகாதாரச் செயற்பாடுகளும் செய்திகளைப் பரப்பின. கூட்டுடிணைவு இன்மையால் சடங்குகள்கூட நடைபெறாது மக்கள் மன அழுத்திற்கு உள்ளாகினர்.

இச்சூழலில் கூத்தர்கள் கூத்து ஆடுவதற்கான வெளி இல்லையே என ஏங்கியமையும், தாமாகவே பாடல்களைப் பாடியமையும் நாம் அறிந்ததே.

2021ஆம் ஆண்டு காலத்தில் சற்றுக் கொராணாத் தொற்றுக் குறைவடைந்த பொழுது அடிப்புற வெளியில் மீண்டும் கூத்தாடப்பட்டது. மக்களுக்குக் கிடைக்கும் நேரங்களில் மீளக் களரியடித்தல் இடம்பெற்றது. இம்மீள் ஆடுகையும், களரியடித்தலும் ஊரடங்கு, நாடு தழுவிய முடக்கம் காரணமான மீண்டும் விடுபட்டது. பின்னர் சற்று நிலமை சீராகியதும் கூத்து மீள ஆடுவதும், பின்னர் விடுபடுவதுமாகக் காணப்பட்டது. இவ்வாறு களரியடிக்கும் காலம் நீண்டது. குறிப்பாக, கொக்கட்டிச்சோலையில் ஆடப்பட்ட 'வீஷ்மர் அம்புப்படுகை' வடமோடிக் கூத்து இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. களரியடித்துக் கூத்துப் பயிற்சி எடுத்து, ஆட்டங்கள் தாளங்கள் கதை ஓட்டங்களில் தெளிவும் தகுதியும் ஏற்பட்டதும் பெருந்தொற்றாலும் ஊரடங்காலும் இடையிடையே விடுபட்டது. பின்னர் மீளக் களரியடித்துப் பழகி 2021 நடுப்பகுதியில் சதங்கை அணிவிழா நடத்தப்பட்டது. ஆனாலும், மீளவும் கொரோணாப் பெருந்தொற்றால் நாடு மீளவும் முடக்கப்பட்ட மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களரி அடித்துப் பயிலமுடியாது தடைப்பட்டது. இதற்குச் சுகாதார நிலைமைகளும் சவால்களை ஏற்படுத்தின. கூத்தர்களும், ஊர்மக்களும் பெரும் உள நெருக்கடிக்கு ஆளாகினர். எனினும், கூத்தர்களினதும், அதன் அமைப்பினதும் தொடர்முயற்சியால், மீளக் களரியடித்து - ஆடி 27.05.2022 அன்று அரங்கேற்றப்பட்டது. இவ்வாறே, கூத்துக்கலையில் ஏற்பட்ட அயராத விருப்பின் வெளிப்பாட்டாலும், தனது ஆற்றலையும் திறனையும் கொண்டாடும் நிலைப்பாட்டாலும் தமது சொந்தப் பணத்தைக் கூத்தர் கொடுத்து, சோத்து முறையை ஏற்று அண்ணாவியாருக்கும், மேஸ்த்திரியாருக்கு ஊதியத்தை வழங்கி பெரும் செலவுடன் ஆற்றுகை செய்தனர்.

இவ்வாறே, கூத்து பெருந்தொற்றுக்குப் பின்னர் மட்டக்களப்பில் மூலை முடுக்குகொல்லாம் அதன் அடிப்புறப் பண்பாட்டு வெளியில் ஆடப்பட்டும் அரங்கேற்றப்பட்டும் வருகின்றது. ஊர் மக்களும், கூத்தர்களும் பெருமூச்சு விட்டு கூத்தை ஆடுவதற்கான ஒருங்கிணைவதற்கான கூட்டுணர்வைப் பகிர்வதற்கான செயற்பாட்டைக் கூத்தினூடாகச் செய்கின்றனர். அடிப்புறத்தில் கூத்தாடுவதை தொலைக்காட்சியோ, சினிமாவோ, இணையவழியோ, பொருத்தமற்ற கூத்துத் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டமைப்போ தடுத்தாலும் அதனையும் தாண்டி மக்கள் யாருடைய நிதி உதவியும் இன்றி, தமது சுய உழைப்பைப் பகிர்ந்து மீள ஆடி அரங்கேற்றுவது கூத்தின் சுய எழுச்சியையே காட்டுகின்றது. சமகாலத்தில் ஏற்படும் பொருளாதாரச் சவால்கள், நாணயத்தின் நலிவு, எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகிய சவால்களையும் தாண்டி கூத்து ஆடப்படுவது கூத்தரங்கின் மக்கள்மையச் செழுமையையும், மக்கள்மைய ஆற்றுகையையும், அவர்களது அடையாள அரசியலையும் சுட்டுகின்றது. பெருந்தொற்றுக்குப் பின்னர், புதிதாக இளைஞர்கள் ஆடுகின்றார்கள், புதிய அண்ணாவிமார்கள் உருவாகுகின்றார்கள். மத்தளம் அடிப்பவர்கள் அண்ணாவி இல்லை. ஊர்மக்கள் "இவர்தான் அண்ணாவி" என்று அங்கீகரிக்கவேண்டும். இதனைப் பெறுவதற்குப் பல இளைஞர்கள் பெண் கூத்து ஆடி, களரியடிக்கும் காலங்களில் மத்தளம் அடித்துத் தன்னை அண்ணாவியாக்க முயல்கின்றார்கள்.

நான்கு சுவருக்குள் கூத்துப்பற்றிப் பேசுவதற்கு அப்பால், புனைவதற்கு அப்பால் அடிப்புறத்திற்கு வந்து பாருங்கள், அங்கு கூத்தாடிப்பாருங்கள், அக்கூத்தர்களோடு பழகிப்பாருங்கள் பல உண்மைகள் புலப்படும். ஆரோக்கியமாக அவற்றை அணுகமுடியும். நவீன நாடகம் இப்பெருந்தொற்றுக் காலத்தில் நாடகப் போட்டிக்காக மட்டுமே நடைபெற்றது. நவீன நாடகம் நலிவுற்று அருகிய நிலையில், கூத்தரங்கு கூத்துக்கலைஞர்களால், அம்மக்களால் சுயமாக மீள ஆடப்படுவது பெரும் எழுச்சியே. பார்ப்போராகச் சிறுவர்களும், இளைஞர்கள் யுவதிகளுமே அதிகம் வருகின்றனர். பெண்கள் பார்வையாளர்களாகக் களரியை நிறைந்துள்ளனர். நாடகமும் அரங்கியலும் படிக்கும் மாணவர்களும், படிப்பிக்கும் ஆசிரியர்களும் கூத்தை அதிகம் அதிகமாகப் பார்க்கவேண்டும். ஆடவும் வேண்டும். கூத்தைச் சமூகமைய ஆய்வுடன் முன்னெடுப்பவர்களும், கலாசார உத்தியோகஸ்த்தர்களும் ஊக்குவிப்புக்குகாகக் களத்தில் நிற்பதும் மகிழ்வளிக்கின்றது.

பெருந்தொற்றுக்குப் பின்னர் 2022 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் கூத்தாடப்படும் இடங்களும் கூத்துக்களும் இவ்வாண்டில் ஆடப்படும் கூத்துக்களும், இடங்களும், அண்ணாவிமாரும் பற்றி அறியமுடிகின்றது.

1. வீஷமர் அம்புப்படுக்கை (10 ஆம் நாள்) வடமோடிக் கூத்து கொக்கட்டிச்சோலையில் ஈஸ்வரா கலைக் கலா மன்றத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் ப.கதிர்காமநாதனால் களரியடித்து பழக்கி 27.05.2022 அன்று அரங்கேற்றப்பட்டது.
2. அமிர்தசம்பவவல்லி வடமோடிக் கூத்து குறிஞ்சாமுனையில் சிவசக்திக் கலைக் கலாமன்றத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் ப.கதிர்காமநாதனால் களரியடித்து ஆடப்படுகின்றது.
3. பரசுராமர் யுத்தம் வடமோடிக் கூத்து கன்னங்குடாவில் கண்ணகி முத்தமிழ் மன்றத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் க.பசுபதிப்பிள்ளையினால் களரியடித்து பழகி ஆடப்படுகின்றது.
4. பவளக்கொடி நாடகம் வடமோடிக் கூத்து மண்டபத்தடியில் மலைமகள் கலைமன்றத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவிமார்களான க.பரமானந்தம், த.சுந்தரலிங்கம் ஆகியோரால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
5. இராமநாடகம் வடமோடிக் கூத்து கரையாக்கன் தீவில் அண்ணாவிமார்களான க.பரமானந்தம், த.சுந்தரலிங்கம் ஆகியோரால் களரியடித்துப் பழக்கப்படுகின்றது.
6. 17ஆம் 18ஆம் போர் வடமோடிக் கூத்து கொத்தியாபுலையில் விநாயகர் கலைமன்றத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் வ.அழகிப்போடியால் களரியடித்துப் பழக்கப்படுகின்றது.
7. அபிமன்பு சண்டை வடமோடிக் கூத்து அரசடித்தீவில் அண்ணாவியார் சி.தீபனால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
8. அனுருத்திரன் நாடகம் தென்மோடிக் கூத்து புதுமண்டபத்தடியில் அண்ணாவியார் க.பசுபதிப்பிள்ளையினால் களரியடித்து – பழகி ஆடப்படுகின்றது.
9. தர்மபுத்திரன் நாடகம் வடமோடிக் கூத்து முனைக்காடு நாகசக்திக் கலைக்கழகத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் ப.கதிர்காமநாதனால் களரியடித்து ஆடப்படுகின்றது.
10. நச்சுப்பொய்கை வடமோடிக் கூத்து வவுணதீவில் விபுலானந்தர் கலைக்கழகத்தினரின் ஒழுங்கமைப்பில் அண்ணாவியார் நா.திசைவீரசிங்கத்தால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. 13ஆம் 14ஆம் போர் வடமோடிக் கூத்து ஊத்துமடுவில் அண்ணாவிமார்களான இரா.இளையதம்பி, அ.கந்தசாமி ஆகியோரால் களரியடிக்கப்பட்டு பழக்கப்படுகின்றது.
12. காஞ்சிரங்குடாவில் குயலவன் நாடகம் வடடோடிக் கூத்து அண்ணாவியார் ப.கதிர்காமநாதனால் களரியடித்து ஆடப்படுகின்றது.
13. திமிலதீவில் பிட்டுக்குமண்சுமத்தல் வடமோடிக் கூத்து அண்ணாவியார் வ.மகேந்திரனால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
14. கொக்குவில் அபிமன்யுவதை வடமோடிக் கூத்து அண்ணாவியார் சீ.அலெக்சாண்டாரால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
15. கரவெட்டியில் அரசிலங்குமாரி வடமோடிக் கூத்து அண்ணாவியார் ம.யோராசாவினால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
16. நாவக்காட்டில் சூரசம்மாரம் வடமோடிக் கூத்து அண்ணாவியார் மா.ஞானசேல்வத்தால் களரியடித்துப் பழக்கி ஆடப்படுகின்றது.
17. குழுவினமடுவில் துரோணர்யுத்தம் வடமோடிக் கூத்து அண்ணாவியார் வ.தேவராசாவால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.
18. காந்திபுரத்தில் இரணியசம்மாரம் தென்மோடிக் கூத்து அண்ணாவியார் வ.தேவராசாவால் களரியடித்து பழக்கி ஆடப்படுகின்றது.


ஆகிய கூத்துக்கள் அந்தந்த மக்களின் வாழ்வியல் வெளிப்பாடுகளுடன் ஆடப்படுகின்றன.

**முடிவுரை**

கூத்தரங்கு ஒவ்வொரு ஊரிலும் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை அவர் களது தேவை, வசதி, பொருளாதார நிலை ஆகியவற்றிற்கு அமைய ஆடப்படுவது வழக்கம். இவை கொரோணப் பெருந்தொற்றுக்குப் பின்னர் 2022 காலப்பகுதியில் ஆடப் பட்ட, ஆடப்பட்டு வருகின்ற கூத்துக்களே. மக்கள் தமது அடையாளத்தை இக்கலை மரபுகளினூடாகவே ஆற்றுகை செய்கின்றனர். இது காலனிய நீக்க வெளியையும் இயல் பாகக் தருகின்றது. மனித வாழ்வின் உள்ளுணர்வின் அழகியலைக் கலை வெளிப்படுத்துவது. இதனால், மனிதர் இவ்வுலகில் வாழும் வரை இவ்வகை ஆற்றுகைக் கலைகள் உயிர்ப்புடன் வாழும்.

## யார்?

இன்றைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பொதுமக்கள் சொல்லொன்னாத் துயரத்தில் மாழ்கிறார்கள். அடுப்புகள் எரியாத பல சமையல் கட்டுக்கள் தினம் தினம் முளைக்கின்றன. பசியை யாரிடம் சொல்லி யழுவதென்று தவிக்கும் சூழலில் பச்சத்தண்ணீரை எத்தனை நாட்களுக்கு அருந்தி வாழ்வது? எல்லாப் பொருட்களும் கடுகதி வேகத்தில் அதிகரித்து நிற்கின்றன ஒருகுடும்பத்தின் சதியா? அல்லது ஒட்டு மொத்த வாக்காளர்களின் தவறா? நரம் பில்லாத நாக்கினால் எதையும் பேசலாம். பேசிப்பேசி எதைச் சாதித்துள்ளோம். நம் கைதான் இப்போது நமக்குத்துணை வீட்டுக்கொரு தோட்டம் அமைப்போம். அதுதான் இனி எங்களைக் காக்கும். எங்கள் குழந்தைகளுக்கு பசி தீர்க்கும்

இதழ் -12
2023

ஆசிரியர் : த. மலர்ச்செல்வன்
கணினி வடிவமைப்பு : த. சங்கர்
முன்அட்டை ஓவியம் : ஜெ.பிரதாக்ஷ்மன்
ISSN - 2279-3348
தனியிதழ் : ரூபா 350.00
தொடர்புகொள்ளும் முகவரி
ஆசிரியர்
மறுகா
ஆரையம்பதி - 30150
தொ.பே.0776084756
மின்னஞ்சல் : marukamagazine@gmail.com
வங்கி இல - 2720102 இலங்கை வங்கி, மட்டக்களப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNITED BOOK CENTRE

# யுனைட்டட் புத்தகசாலை

எம்மிடம் பாடசாலை உபகரணங்கள், பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான சகல பாட, பயிற்சிப்புத்தகங்கள். ஆன்மீகம், வைத்தியம், அகராதி, சமையல், அறிவியல் மற்றும் விளையாட்டுப் புத்தகங்கள். விளையாட்டு உபகரணங்கள், வெற்றிக்கிண்ணங்கள், பதக்கங்கள், கேடயங்கள். சகல விதமான இசைக்கருவிகள். இரசாயண ஆய்வுகூட உபகரணங்கள். சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள். கம்பியூட்டர் பிறிண்டிங் உபகரணங்கள் (Toner, Ribbon, Cartridge) பிறந்த நாள், திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்து அட்டைகள். இலங்கை, இந்திய வாராந்த மாதாந்த சஞ்சிகைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.



**மெட்ரோ பொலிட்டன்**
**(Metropolitian Office (Pvt) Ltd)**
**நிறுவனத்தின் கிழக்கு மாகாண**
**ஏக விநியோகஸ்த்தர்கள்**




இல.06, லொயிற்ஸ் அவனியு, மட்டக்களப்பு.
#06. Lloyds Avenue, Batticaloa, Sri Lanka.
065 205 8000, 065 205 6666

இல.53, திருமலை வீதி, மட்டக்களப்பு.
# 53. Trinco Road, Batticaloa, Sri Lanka.
065 222 2103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.MANIKARAJAH

## Lanka Filling Station

**MAIN STREET ARAYAMPATHY 2**

Petrol
Diesel
Kerosene
Gas
All kinds of oils

**Wholesale and Retail**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org